வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°c 26°c

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 332 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 08, வெள்ளி 25.10.2013

## பொதுநலவாயக் கூட்டிலிருந்து நீக்க வேண்டும் இலங்கையை

**கொழும்பு மாநாட்டிலும் பங்கேற்கக் கூடாது**
**தமிழக சட்ட சபையில் நேற்று தீர்மானம்**

சென்னை ஒக்.25
இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களவர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை, பொதுநலவாய நாடுகள் கூட்டமைப்பிலிருந்து இலங்கையை நீக்க வேண்டும்.
அத்துடன் அடுத்த மாதம் அங்கு நடைபெறும் பொதுநலவாய மாநாட்டுக்குப் பெயரளவில் கூட இந்தியா சார்பில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று தமிழக சட்ட சபையில் நேற்று வியாழக்கிழமை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இலங்கையில் அடுத்த

21



## நல்லூர் கிட்டு பூங்காவையும் அபகரிக்க இராணுவம் முயற்சி

யாழ்ப்பாணம், ஒக்.25
நல்லூரில் உள்ள கிட்டு பூங்காவையும், நிரந்தர இராணுவ முகாம் அமைப்பதற்கு வழங்குமாறு இராணுவத்தினர் நல்லூர் பிரதேச செயலகத்திடம் கோரியுள்ளனர்.
தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தளங்கள், தளபதிகளின் வீடுகள், நினைவுச் சின்னங்கள் என்பவற்றைக் கையகப் படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக, சுவீகரிப்பு நடவடிக்கைகள் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இவ்வாறான தொரு நிலையில் பருத்தித்துறை வீதியில், நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள 8 பரப்பு விஸ்தீரணம் கொண்ட கிட்டு பூங்காவை இராணுவ முகாம் அமைப்பதற்குக் கையளிக்குமாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் நல்லூர் பிரதேச செயலகத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
தற்போது குறித்த காணியில் யாழ்.மாநகர சபையினால் நவீன பூங்கா ஒன்று அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியிலுள்ள யாழ். மாநகர சபையே இதனை நிர்வகித்து வருகிறது.
இவ்வாறானதொரு நிலையில் இராணுவத்தின் 27ஆவது அணி

21

# போரில் அடிபட்ட வடக்குக்கு வேண்டும் பன் மடங்கு நிதி

## ஏனைய மாகாணங்களுடன் எம்மை ஒப்பிட வேண்டாம் என்கிறார் முதல்வர்

யாழ்ப்பாணம். ஒக்.25
"இலங்கையில் ஏனைய ஏழு மாகாணங்களுடன் வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது தவறு. போரினால் அடிபட்டு - இடிபட்டு அல்லலுற்று வந்திருக்கும் எமது மக்களுக்கு ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் நிதித் தொகையிலும் பார்க்க பன் மடங்கு அதிகமாக ஒதுக்கப்பட வேண்டும்."
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.
உள்ளூராட்சி மகாண சபைகள் அமைச்சினால், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான அறிமுகச்செயலமர்வு யாழ்.ரில்கோ விடுதியில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது. இதில் உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:
1987ஆம் ஆண்டு மாகாண சபை உருவாக்கப்பட்டபோது, வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குச் சேர்த்தே ஒரு மாகாண சபை வகுக்கப்பட்டது. இதிலிருந்தே தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த இடங்களுக்கு அதிகாரப் பகிர்தல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது.
எங்கள் நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக வாழும் இடங்களில் அதிகாரங்களைப் பகிர வேண்டிய தேவை மிகக் குறைவானது. ஏனெனில் மத்திய அரசின் பெரும்பான்மையினரும், வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய 7 மாகாணங்களில் வாழும் பெரும்பான்மையான மக்களும் ஒரே மொழிபேசுபவர்கள். ஒரே மதத்

21

## வடக்கு மாகாண நிர்வாகத்தில் மத்திய அமைச்சர்கள் தலையீடு

**நீதிமன்றை நாடவேண்டிவரும் என விக்னேஸ்வரன் எச்சரிக்கை**

யாழ்ப்பாணம், ஒக்.24
வடக்கு மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிப் பதவியேற்ற பின்னரும் மத்திய அரசின் அமைச்சர்களும் அதிகாரிகளும் மாகாண அரசில் தலையீடு செய்கின்றனர்.
இவர்கள் இவ்வாறு செய்வதை நீதிமன்றங்களின் ஊடாகக் கேள்வி கேட்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கான அறிமுக நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மத்திய அரசின் அமைச்சர்கள், அலுவலர்கள் பலர் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதன் பின்னர் கூட மத்திய அரசின் அதிகாரத்தைப் பல வழிகளில் பிரயோகிக்கப் பார்க்கின்றார்கள். மாகாண சபைக்குரிய அதி

21

## அற்ப, சொற்ப அதிகாரங்களையும் வழங்குவதற்கு தயக்கம் வேண்டாம்

**வடக்கு முதலமைச்சர் அரசிடம் கோரிக்கை**

யாழ்ப்பாணம், ஒக்.25
காணி, பொலிஸ் அதிகாரங்களில் போதுமானவற்றை மத்தியில் வைத்துக்கொண்டு மாகாண சபைக்கு அற்ப சொற்ப அதிகாரங்களே வழங்கப்பட்டுள்ளன. அந்த அற்ப சொற்ப அதிகாரங்களையும் செயற்படுத்துவதற்கு அரசு தயக்கம் காட்டக் கூடாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற மாகாண சபை உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
காணி தொடர்பாகவும், மக்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் மாகாண சபையொன்று எடுக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த மாகாண சபையின் நிலையை ஒட்டியதே ஒழிய சகலருக்கும் ஒரே நிலை இருப்பதாகக் கொள்வது தவறாகும்.
வடக்கு மாகாணத்

21

## கொல்லப்பட்ட பெண்ணின் புதைகுழியில் நேற்று அஞ்சலி

**கொலையாளிகளைக் கண்டு பிடிக்குமாறும் போராட்டம்**



யாழ்ப்பாணம், ஒக்.25
யாழ். நாச்சிமார் கோயில் தேர் முட்டியில் கடந்த வாரம் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டமையைக் கண்டித்து நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அத்துடன் பெண்ணின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் மகளிர் அமைப்புக்களின், பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள்,

21

## வட மாகாண சபை கன்னியமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.25
வடக்கு மாகாண சபைக் கட்டடத் திறப்பு விழாவும், மாகாண சபையின் கன்னியமர்வும் இன்று வெள்ளிக்கிழமை கைதடியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபைக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.
வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் 25 வருடங்களின் பின்னர் முதல் முறையாக கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் 30 ஆசனங்களைக் கைப்பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ளது.
இதேவேளை புதிய மாகாண சபைக்கான அமர்வுகளை நடத்துவதற்கான கட்டடம் 450 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.
இதில் ஒரு பகுதி கட்டடத்தின் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.
இதன் பின்னர் கன்னியமர்வு காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படவுள்ளனர். (த-5)

## 2000 முறைப்பாடுகள் காணாமற்போனோர் குறித்து

யாழ்ப்பாணம். ஒக். 25,
காணாமற் போனவர்கள் தொடர்பிலான பதிவுகளை மேற்கொண்டுவரும் மன்னார் பிரஜைகள் குழுவுக்கு இதுவரையில் 2ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும், தொடர்ந்தும் பதிவுகள் சகல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
ஜனாதிபதி ஆணைக்குழுவினால் காணாமற் போனவர்கள் தொடர்பிலான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

21

## இலங்கை மனித உரிமை நிலை குறித்து பிரிட்டன் அதிருப்தி

**ஆங்சான் சூகியிடம் கூறினார் கமரூன்**

லண்டன், ஒக்.25
இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பில் மகிழ்ச்சியடையவில்லை எனத் தெரிவித்துள்ள பிரிட்டன் பிரதமர் கமரூன், தனது இலங்கைப் பயணத்தில் வடக்குக்கும் செல்வேன் என்றும் ஆங்சான் சூகியிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுக்கும்

21

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.புதிய சோனகத் தெரு தொடர்ந்தும் வெள்ளத்தில்



யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்ப்பாணம் புதிய சோனகத் தெருப் பகுதி வழமைபோன்றே இம்முறையும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

இது குறித்து அப் பகுதி மக்கள் கூறுகையில்:

"ஒவ்வொரு வருடமும் மழை காலத்தில் நாம் பல பிரச்சினைகளை அனுபவிக்கின்றோம். மழை நீரினால் நுளம்புத் தாக்கம் ஏற்படுகின்றது. இக் காலப் பகுதியில் தொடர்ந்து எம்மால் இங்கு வாழ முடியாது" என்று கூறினர்.

சோனகத் தெருவில் வசிக்கும் மக்கள் மழை காலங்களில் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறி உறவினர்கள் வீடுகளிலும், யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியிலும் தங்கியிருக்கின்றனர்.

பள்ளப் பிரதேசமாக உள்ள சோனகத் தெருவில் மழை நீர் தேங்குவதால் டெங்கு அபாயமுள்ளதாகவும் எதிர்காலத்தில் சோனகத் தெருப் பகுதி முற்றாக அழியும் நிலை ஏற்படும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (த-10)

# கிளிநொச்சியில் ஒருவரை காணவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.25

கிளிநொச்சி இயக்கச்சியை சேர்ந்த வாய்பேசாத ஒருவர் காணாமற் போயுள்ளதாக அவரது தாயாரால் பளைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இயக்கச்சி விநாயகபுரம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை நெற்போலியன் (அண்ணா) (வயது - 41) என்பவரையே கடந்த 18 ஆம் திகதி முதல் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் பற்றிய தகவல்கள் தெரிந்தோர் பளை பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ-6)

# விதை நெல் அறிமுகமும் ஏலத்தில் விற்பனையும்

## வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையில்

வவனியா, ஒக்.25

வட மாகாண விவசாய திணைக்களத்தின் கீழ் உள்ள வவுனியா தாண்டிக்குளம் அரச விதை உற்பத்திப் பண்ணையில் நல்லின விதை நெல் அறிமுகமும் ஏல விற்பனையும் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலாபானு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெல் இனங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும் அத்துடன் ஏலத்தில் நெல்லை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள், மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக 10 ஆயிரம் ரூபாவை வவுனியா ரயில் நிலைய வீதியில் உள்ள வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கல்) அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விதை நெல்லை ஏலத்தில் எடுப்பவர்கள் அதற்குரிய பெறுமதியை உடனே செலுத்துவதுடன் அன்றையதினமே பண்ணையில் இருந்து எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அறிமுகப்படுத்தும் விதை நெல் வகைகளின் விவரம் வருமாறு:-

பிடபிள்யூ - 1621 ( வெள்ளை நாடு), பிஜீ - 406 (சிவப்புநாடு), ஏரி - 07 - 695 (சிவப்புநாடு), சிஓ -1 0 (சிவப்புநாடு), குறுய் (சிவப்புநாடு), பிஜி -358 (வெள்ளைச்சம்பா), ஏரி 306 பாஸ்மதி (வெள்ளைநாடு), பிஜி -300 (வெள்ளைநாடு) பிஜி -04-938 (வெள்ளநாடு), எரி -362 (சிவப்பு நாடு), ஏரி -07 -1440 (வெள்ளைநாடு), ஏரி -307 (வெள்ளைநாடு), ஏரி 308 (வெள்ளை சம்பா)டபிள்யூ 362 (சிவப்புநாடு). (ஜ-402)

# உணவுப் பாதுகாப்பு முறைகளை இறுக்கமாகப் பேண வலியுறுத்து

யாழ். மாநகர சபை உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு உணவு கையாளும் நிறுவனங்கள் மீது பரிசோதனை நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.


உணவகங்களின் சுகாதார நடைமுறைகளை முறைப்படி செயற்படுத்த வேண்டும் என இதன் போது வலியுறுத்தப்படுகிறது.

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட உணவு கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நேற்று பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கிறீன் கிராஸ் ஹொட்டலில் இடம் பெற்றது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் 165க்கும் மேற்பட்ட உணவு கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

மாநகர சுகாதார வைத்திய அதிகாரிகளான எஸ்.ஞானசோதி, எஸ். யசீந்திரன் ஆகியோர் இதில் கருத்துக்களை வழங்கினர்.

உணவு கையாளும் நிறுவனங்களில் உணவு தயாரிப்பு முறைகள், அவற்றை பாதுகாத்தல், உணவு சட்டத்துக்கு அமைவாக அவற்றை நடத்துதல் ஆகியன குறித்து இந்தக் கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டது. (த-17)



கொழும்பு கட்டுநாயக்கா அதிவேகப் பாதையின் திறப்பு விழாவை முன்னிட்டு துறைமுகங்கள் மற்றும் பெருந் தெருக்கள், வீதி அதிகார சபையின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை நடைப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பயணத்தில் பேலியகொடைப் பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணைந்து கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந் நடை பயணத்தில் கலந்து கொண்டனர். (த-10)

# உளவியல் கண்காட்சி இன்றும்

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ். பல்கலைக்கழக மெய்யியல் உளவியல் துறையினரால் நடத்தப்படும் உளவியல் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக உளநல நாள் தொடர் நிகழ்ச்சியாக உளவியல் சார் கண் காட்சி யாழ் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்று வருகின்றது. இக் கண்காட்சி நேற்றுடன் நிறைவடைவதாக இருந்த போதும் பலரது வேண்டுகோளுக்கிணங்க இன்றும் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக உளவியல்துறைத் தலைவர் கலாநிதி க.கஜவிந்தன் அறிவித்துள்ளார். (த-400)

TCT MULTI TRADE CENTRE

இனிய தீபாவளித் திருநாளை முன்னிட்டு ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தில்
எங்கும் இல்லாதவாறு சிறப்புத் தள்ளுபடிகள் !!!
சிந்தியுங்கள்! செயற்படுங்கள்! சேமியுங்கள்!



ரிசிரி புடைவையகம்

★ ரிசிரி புடைவையகத்தில் தெரிவு செய்யப்பட்ட புடைவை வகைகளுக்கு 5% - 10%வரை விலைக்கழிவுடன், சிறப்பு விற்பனைப் பகுதியும் செயற்படும்.
★ ஆண்களுக்கான - சேட் ,ரிசேட் ,சோட்ஸ் வகைகளுக்கு - 10% விலைக் கழிவு பெண்களுக்கான - ஸ்கேட், ரிசேட், பிளவுஸ், சல்வார் துணிகள் ஹவுஸ்கோட் வகைகளுக்கு - 5% விலைக்கழிவு
★ தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கான, குழந்தைகளுக்கான ஆடைகள் என்பனவற்றுக்கும் விசேட விலைக்கழிவுகள் அத்துடன் எமெரல் சேட் (Emerald Shirt)வகைகளுக்கு - 5% விலைக்கழிவு
★ வெனிவீல்ட் (VENFIELD) சேட் ஒன்றினை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு 5% விலைக்கழிவுடன் தீபாவளி அன்று வெளியாகும் 'ஆரம்பம்' திரைப்படத்தினை பார்வையிடுவதற்கான ரிக்கற் ஒன்று இலவசமாக வழங்கப்படும். இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

உங்கள் தீபாவளியினை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட இன்றே விரையுங்கள் உங்கள் அபிமானத்திற்குரிய ரிசிரி புடைவையகத்திற்கு.
உங்கள் திருப்தி எங்கள் நிறைவு!

ரிசிரி பான்சியகம்

வாடிக்கையாளர் எங்கும் இல்லாதவாறு தமது சுயதெரிவுகளுக்கமைய ஒழுங்கமைக்கப்பட்ட எமது அழகு சாதனப் பகுதி வழங்கும் தள்ளுபடிகள்!

★ தெரிவு செய்யப்பட்ட மின்சாதனப் பொருள்களுக்கு 5%,
★ அலுமினிய, சில்வர் பாத்திரங்களுக்கு 5%,
★ Kevilton CFL Bulbs வகைகளுக்கு 15%,
★ ரெயின்கோட், குடைகளுக்கு 10%,
★ DSI, பாட்டா பாதணி வகைகளுக்கு 5%,
விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளுங்கள்.

பல்பொருள் விற்பனை நிலையம்

உங்கள் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொக்லேட், இனிப்பு, பிஸ்கட் வகைகள் எம்மிடம் உள்ளன. மேலும் தள்ளுபடிகள் பல.

★ Ritz bury கேக் வகைகளுக்கு 5% விலைக்கழிவு
★ தெரிவு செய்யப்பட்ட Washing powder, சோப் வகைகளுக்கு விலைக்கழிவும் இலவச இணைப்புகளும்
★ தெரிவு செய்யப்பட்ட பிஸ்கட் வகைகளுக்கு இலவச பிஸ்கட் இணைப்புக்கள்
★ கார்பிக், மோட்டீன் வகைகளுக்கு இலவச அன்பளிப்புக்கள்
★ கிளீனர் வகைகளுக்கு விலைக்கழிவும், இலவச இணைப்புகளும்
★ தெரிவு செய்யப்பட்ட Cologne வகைகளுக்கு விலைக்கழிவு
★ தெரிவு செய்யப்பட்ட நூடில்ஸ், சோயா வகைகளுக்கு இலவச இணைப்புக்கள்.
★ தீபாவளி தினத்தன்று Prima Chicken வகைகளுக்கு 8% விலைக்கழிவு

அத்துடன் எமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி [illegible] 120 இற்கு மேற்பட்ட பொருள்கள் (பால்மா, எண்ணெய் வகைகள் உட்பட) குறித்த விலையிலிருந்து விலைக் குறைப்பு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையை வாடிக்கையாளர்களுக்கு ஞாபகமூட்டுகின்றோம்.

உங்கள் தீபாவளிப் பெருநாள் சிறப்புற எங்கள் வாழ்த்துக்கள்

TCT
பல்பொருள் விற்பனை நிலையம்
527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 745 1895/ 021 222 8025/
077 751 1285

(C/13185)(5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாவகச்சேரி நகர சபையால் மரநடுகை, நிகழ்வு



தென்மராட்சி, ஒக்.25
உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் ஐந்தாம் நாள் நிகழ்வான சுற்றாடல் மற்றும் மரம் நடும் தினத்தை யொட்டி சாவகச்சேரி நகரசபையினர் இன்று மரக் கன்றுகள் நடும் நிகழ்வையும் டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கையும் மேற்கொள்ளவுள்ளனர் என்று நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

நகரசபை வளாகம், நகர மண்டபம், மீசாலை, நுணாவில், சாவகச்சேரி பொது நூலகங்கள், பொதுச் சந்தை, விளையாட்டு மைதானம், கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் உள்ளிட்ட பல இடங்களில் மரக் கன்றுகள் நடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

### வலி.கிழக்கில் செயற்படும்

## 17 முதியோர் சங்கங்களுக்கு ரூ.5,000 ஊக்குவிப்புத் தொகை

அச்சுவேலி, ஒக்.25
வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகச் செயற்படும் 17 முதியோர் சங்கங்களுக்கு சமூக சேவைகள் அமைச்சின் முதியோருக்கான தேசிய செயலகம் 5 ஆயிரம் ரூபா வீதம் ஊக்குவிப்பு உதவு தொகையை வழங்கியுள்ளது.

முதியோரின் நல்வாழ்வு மற்றும் நலனோம்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு வசதியாக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முதியோர் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த வகையில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளில் 28 முதியோர் சங்கங்கள் நிறுவப் பட்டு செயற்பட்டு வருகின்றன. அவற்றில் 17 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள சங்கங்களுக்கு முதியோர்களுக்கான தேசிய செயலகம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் ஊக்குவிப்பு உதவு தொகையை வழங்கியுள்ளது.

**வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளில் 28 முதி யோர் சங்கங்கள் நிறுவப்பட்டு செயற் பட்டு வருகின்றன.**

குறித்த உதவு தொகை எதிர்வரும் 30ஆம் திகதி செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் வைபவ ரீதியாக முதியோர் சங்க நிர்வாகிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.(வ-11)

## போர்க் காலத்தில் காணாமற் போன அல்லைப்பிட்டி இளைஞனை கண்டுபிடித்து தருமாறு நீதிமன்றில் மனுத்தாக்கல்



யாழ்ப்பாணம், ஒக்.25
போர்க் காலத்தில் அல்லைப்பிட்டியில் காணாமற்போன இளைஞனைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி அவரது சகோதரன் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆள்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அது தொடர்பான புலன் விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிமன்று வழக்கை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த மனு கடந்த 10 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

மண்டைதீவு, 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ராசலிங்கம் விமலகாந்தன் என்ற இளைஞனே காணாமற் போயுள்ளார் என்று அவரது சகோதரனான விமலேந்திரன் மனுதாக்கல் செய்துள்ளார்.

போர்க் காலத்தில் வழிபாடு செய்வதற்காக அல்லைப் பிட்டியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுக்குச் சென்றிருந்தவர், பின்னர் வீடு திரும்பவில்லை என்று அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வாக்காளர் பட்டியலிலும் அவரது பெயர் உள்ளடங்கவில்லை என்று அந்தப் பகுதிக்குரிய கிராம அலுவலர் நீதிமன்றுக்கு அறிவித்திருக்கிறார்.

இந்த நிலையிலேயே அது தொடர்பில் புலன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (வ-4)

## பயணிக்க முடியாத நிலையில் முற்றவெளி நடைபாதை



யாழ்ப்பாணம், ஒக்.25
யாழ்.முற்றவெளியில் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகச் செல்லும் நடைபாதை தகுந்த முறையில் அமைக்கப்படாததால் அதனூடாகப் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். நடைபாதைக்கு போடப்பட்ட கற்கள் தகுந்த முறையில் பதிக்கப்படவில்லை. அதனைவிட குறித்த பகுதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு முன்பாகவுள்ள நடைபாதைக்கு 'காப்பெற்' போடப்படாததால் வாகனங்கள் குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்குச் சென்று வருவதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றன. (வ-17)

## வடக்கு மாகாண சபை முதலமைச்சர் அமைச்சர்களுக்கு வரவேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.25
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்கள் மற்றும் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் நல்லூர் பிரதேச சபை மாபெரும் வரவேற்பு நிகழ்வை நடத்தவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வரவேற்பு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை

**கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களுக்கு நல்லூர் பிரதேச சபை மாபெரும் வரவேற்பு நிகழ்வை நடத்தவுள்ளது.**

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (வ-7)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம், ஒக்.25
கரவெட்டி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்களின் தராசு மற்றும் நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் நடைபெறவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமையும் முத்திரையிடும் பணிகள் கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும். இதன்போது வர்த்தகர்கள் தமது நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (வ-8)

## தொலைத் தொடர்பு நிலைய கூரையைப் பிரித்து திருட்டு

வடமராட்சி, ஒக்.25
மந்திகை ஆஸ்பத்திரி வீதிக்கு முன்பாக உள்ள தனியார் தொலைபேசி நிலையத்தின் கூரைத்தகடு பிரிக்கப்பட்டு லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தில் பல வகையான கைபேசிகள், அவற்றின் உதிரிப் பாகங்கள், மீள் நிரப்பு அட்டைகள் உள்ளிட்ட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருட்டுச் சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலி ஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ந-9)

## வரணி பொது நூலகத்தில் சுகாதாரக் கருத்தரங்கு




வரணி, ஒக்.25
சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி உப அலுவலகத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி வாரத்தையொட்டி வரணி பொது நூலக மண்டபத்தில் நேற்று முன்தினம் சுகாதாரக் கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கில் வளவாளர்களாக மிருசுவில் ஆயுள்வேத வைத்தியர் ரஜிதா கனகசுந்தரம் மற்றும் வரணி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் இ.நிஜன் ஆகியோர் கலந்து கொண்டு நோய்கள் குறித்து விளக்கமளித்தனர்.

மலேரியா, எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் தொடர்பில் இதன்போது பூரண விளக்கங்கள் அளிக்கப்பட்டன. வரணி மகா வித்தியாலய மாணவர்கள், பொதுமக்கள், வரணி பொறுப்பதிகாரி மற்றும் நூல் நிலைய அபிவிருத்திச்சபை அங்கத்தவர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து நூலகத்தில் புத்தகக் கண்காட்சியும் இடம்பெற்றது. (வ-122)

## வாழைக்குலைத் திருட்டு ; மாட்டினர் 4 பேர்



**2 மணியளவில் ஈவினையில் உள்ள பிர தான வீதியோரத்தில் தனி யாக கன்ரர் வாகனம் நிற் பதை ரோந்து வந்த அச்சு வேலிப் பொலிஸார் கண்ட னர்.**

வலி.வடக்கு, ஒக்.25
புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களில் திருட்டுத்தனமாக வாழைக்குலைகளை வெட்டிச்செல்ல முயன்றோர் அச்சுவேலிப் பொலிஸாரின் ரோந்து நட வடிக்கையின் போது மாட்டிக் கொண்டனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2 மணியளவில் ஈவினையில் உள்ள பிரதான வீதியோரத்தில் தனியாக கன்ரர் வாகனம் நிற்பதை ரோந்து வந்த அச்சுவேலிப் பொலிஸார் கண்டனர். அதனையடுத்து அங்கு சென்று விசாரிக்க முற்பட்ட போது வாகனத்தில் வாழைக் குலைகள் இருப்பதையும், அருகில் உள்ள வாழைத் தோட்டத்தில் வாழை மரங்கள் வெட்டப்படும் சத்தத்தையும் அவதானித்தனர்.

அதனையடுத்து திருட்டுத் தனமாக வாழைக் குலைகள் வெட்டப்படுவதைத் தெரிந்து கொண்ட பொலிஸார் அதில் ஈடுபட்ட நால்வரைக் கைது செய்தனர்.

எனினும் அங்கு நின்றவர்களில் சிலர் தப்பி ஓடியுள்ளனர்.

கைது செய்யப்பட்டோர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு கன்ரர் வாகனத்து டன் கொண்டு செல்லப்பட்ட னர்.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்ததுடன் வாழைக்குலைகள் வெட்டப் பட்ட தோட்டங்களை இனம் கண்டு தோட்ட உரிமையாளர்களிடம் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணிக்க தமிழக மீனவர்கள் முடிவெடுப்பு

இராமநாதபுரம், ஒக்.25
இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்கள் மற்றும் படகுகளை மீட்டுத் தராவிட்டால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை தமிழகம் தழுவிய அளவில் மீனவர் சமுதாயம் கூட்டாகச் சேர்ந்து புறக்கணிக்க தீர்மானித்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதா பட்டினத்தில் புதுக்கோட்டை, ராமநாதபுரம், தஞ்சை, நாகை, திருவாரூர் மற்றும் காரைக்கால் ஆகிய 6 மாவட்ட மீனவர்களது அவசர கூட்டம் நடைபெற்றது.

இதில் மீனவர் சங்க தலைவர்கள் மற்றும் மீனவர் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில், இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்பதோடு தமிழக மீனவர்களின் படகுகளையும் மீட்க மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இதேபோல் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களையும் படகுகளையும் மத்திய, மாநில அரசுகள் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் விடுவித்து இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இந்திய-இலங்கை இரு நாட்டு மீனவர்கள் பாரம்பரியமாக 1938 இற்கு முன்பாக இரு கடற்பரப்பிலும் மீன்பிடித்து வந்தது போல் பரஸ்பரமாக மீன்பிடித் தொழில் செய்ய மத்திய அரசு இலங்கை அர சுடன் இணைந்து இருநாட்டு மீனவ பிரதிநிதிகளையும் அழைத்து பேச்சு நடத்தி சுமுக தீர்வு காண வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் தீர்வு காணாத பட்சத்தில் தமிழகம் மற்றும் புதுவை மீனவர்கள் ஒருங்கிணைந்து மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகை யில் மிகப்பெரிய போராட்டங்களை நடத்துவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(வ)

# மற்றோரை நேசிக்கும் பண்பை மாணவர் வளர்க்க வேண்டும்

## வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.25
கல்வியூடாக ஒழுக்கமும் அறிவும் சார்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் மாணவர்களை அதன்வழி நல்வழிப்படுத்தக்கூடியதாக வைத்தீஸ்வராக் கல்லூரி தனது சேவையை வழங்கியுள்ளது என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

யாழ்.வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தின் நாக முத்து அரங்கில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன.மதபேதங்களைக் கடந்து அனைத்து மாணவர்களையும் கல்லூரி அரவணைத்து தனது செயற்பாட்டை ஆற்றல் மிக்கதாக்கியுள்ளது. இங்கு கற்றவர்கள் சமுதாயத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளவர்களாயுள்ளமை அதற்குச் சான்றாகும். மாண-வர்கள் தமது வாழ்க்கையில் கல்வியிலும் ஒழுக்கம், பண்பாடு, சமய விழுமியங்களைக் கற்பதில் முன்னுதாரணமாகவும் நடப்பதுடன் ஏனையோரை நேசிக்கும் பண்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பாடசாலை அதிபரின் அணுகுமுறை நிர்வாகத்திறமை உன்னதமானது ஏனைய அதிபர்கள், ஆசிரியர்கள், அவரை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

நான் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றபோது சில நிகழ்வுகளில் கலந்து கொள்ளவென இந்துக் கல்லூரிக்கு வந்திருக்கிறேன். எனது ஆசிரியர் பயிற்சிக்காகவும் இரண்டு தடவைகள் இங்கு வந்துள்ளேன். நான் ஆசிரியர் பயிற்சியைப் பெறுவதற்கு இந்தக் கல்லூரி காரணமாக இருந்துள்ளது.- என்றார். (வ-7)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவயோகநாதன்



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவயோகநாதன் கடந்த (22.10.2013) செவ்வாக்கிழமை அகால மரணமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தையல்நாயகியின் அன் புக் கணவரும், சந்திரிக்கா, மதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவர்னிகாவின் அன்புப் பேரனும், பராசக்தி, காலஞ்சென்ற தவமணிதேவி, கமலநாதன் மற்றும் சறோஜினி தேவி, பத்மலோஜினி, குகநாதன், சாவித்திரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குண சீலன் (C.T.B), புரந்தகி (மக்கள் வங்கி முகாமையாளர்), ஞானகி, ஸ்ரீவாணி, சபேசன், சபேசினி, செந்தூரன், சண்முகப்பிரியன், ஸ்ரீதர்சினி, ஸ்ரீபரன் , ஸ்ரீவித்தியா, ஸ்ரீபிரியா, ஸ்ரீரம்மியா, காண்டீபன், ஜனகன், முகுந்தன், சாய்ராம், நிசாந், கரிசாந், நிதுர்சன், துசாரா, கோபி ஆகியோரின் அன்பு மாமனும், வர்சிகா, திருக்குமரன், கிரிகரன் ஆகியோரின் சித்தப்பாவும், அபினாஸ், சிந்துஜா ஆகியோரின் பெரியப்பாவும், தேவராசா, சோமசேகரம், ரவீந்திரநாதன், செல்வராணி, ராஜ்குமார், செல்வராணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செல்வராணி (செல்வி) சூரியகலா, தட்சணாமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.10.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கேணியடி கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கல்வாரி பூரண சுவிஷேச தேவாலய தாவடிசேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சபேசன் (மருமகன்)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### அன்னம்மா சற்குணமலர் இராசநாயகம்



வடமராட்சி இல.88/04, ஆசிர்வாதம் ஒழுங்கை, கிழக்குத் தெரு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சற்குணமலர் இராசநாயகம் நேற்று (24.10.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை ஆரோக்கிய அடைக்கல இராசம்மாவின் மகளும், காலஞ்சென்ற யோசேப்பு இராசநாயகத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், சௌந்தரராசா, காலஞ்சென்றவரான சுந்தரராசா, தருமராசா, மற்றும் துரைராசா, குணசீலி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலதாஸ், காலஞ்சென்ற வர்களான பிரபுதாஸ், பாக்கியதாஸ் மற்றும் தேவயோகினி, இன்பதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும், பிலோமினா, சுலோசனா, நிக்சன், புறூட்டன்ஸ் (மோகன்) ஆகியோரின் மாமியும், மேரிநிலாந்தினி, கிளின்ரன், நிக்சன், சுமித்திரா, சுனிஸ்லோஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (25.10.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இருந்து பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் நல்லடக்க ஆராதனைக்காக பரிசுத்த செபஸ்ரியார் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு வல்வெட்டித்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
88/4, ஆசீர் வாதப்பர் ஒழுங்கை,
கிழக்குத் தெரு, வல்வெட்டித்துறை. (சி. 13193) (17,14) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை பத்மநாதன்



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 214/19, இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை பத்மநாதன் நேற்று (24.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை -தில்லையம்மா தம்பதியரின் அன்பு மகனும், தவமணிதேவி, பரமேஸ்வரி(கிளி),இராஜேஸ்வரி(சிவம்), காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற தனஞ்செயன், நாகராசா, சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
214/19, இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி. (33279) (17,14) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் வீரசிங்கம்

(லொறி சாரதி, சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் வீரசிங்கம் நேற்று (24.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 0761792 (சி. 13192) (17,14) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### ச. சூசைமுத்து

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத்திணைக்களம்)



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து சூசைமுத்து நேற்று (24.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து-தெரேசாம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னப்பு-நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிலீலாவின் (சந்திரா) அன்புக் கணவரும், தங்கரட்ணத்தின் அன்புச் சகோதரனும், மேரிஸ்ரெல்லா (செல்வி), காலஞ்சென்ற செரோன்றெக்ஸ் (குமரன்), சாம்சன் றெக்ஸ் (தீசன்), மேரி கிறிஸ் ரெல்லா (மஞ்சு), ஜென்சன் றெக்ஸ் (சூட்டி), மேரி ஜெனிஸ்ரெலா (ஜெனி) ஆகியோரின் அன்புத் தகப்பனும், ரவிசங்கர், தேவபாலன், டனியலா (டயனா), டனிஸ்ரன், சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமனும், விவுலுஜன், விபூசன் ஆகியோரின் அன்புப் பேரனும், அரியமலர், கோமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெய ரட்ணத்தின் அன்புச் சகலனும், கிருத்திகா, கொன்சி, மேசி, ஜென்சி ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.10.2013) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு, புனித சூசையப்பர் ஆலயத்தில் இறுதி இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் நல்லடக்கத்துக்காக புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(33275) (10,14) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுகால்மடம் கொலை; மூவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், ஒக்.25

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் பகுதியில் ஆண் ஒருவர் செவ்வாய்க்கிழமை இரவு கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். அவரைக் குத்திக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் அவரது மாமன், மாமனின் மகன், அயல்வீட்டுக்காரர் என மூன்று பேரைக் கைது செய்து நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைத்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

ஆறுகால்மடம், பழம் வீதியில் செவ்வாய்க்கிழமை இரவு 10.30 அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் மிருசுவிலைச் சேர்ந்தவரும் தற்போது பழம் வீதியில் வசித்து வந்த வருமான தங்கராஜா சரத்பாபு (வயது - 30) என்பவரே உயிரிழந்தார். இவர் 8 மாதக் குழந்தையின் தந்தையாவார்.

ஓட்டோச் சாரதியான அவர் போதையில் தனது மனைவியுடன் முரண்படுபவர் என்றும், சம்பவ தினம் மனைவியின் உறவினர்களுக்கும் இவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டதாகவும், அதனை அடுத்தே இந்தக் கொலை நிகழ்ந்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (து-4-86)

## மேய்ச்சலுக்காக விடப்பட்ட குதிரை அடித்துக் கொலை

யாழ்ப்பாணம், ஒக்.25

நெடுந்தீவு மத்தி தோமையப்பர் தேவாலயத்துக்கு அண்மித்ததாக உள்ள வளவில் மேய்ச்சலுக்காக விடப்பட்டிருந்த குதிரை வெல்லைப் பகுதியில் உள்ள ஈச்சம் பற்றைக்குள் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குதிரையைத் தேடிச் சென்ற அதன் உரிமையாளர் தனது குதிரை கொலை செய்யப்பட்டுக் கிடப்பதை கண்டுபிடித்தார்.

கடந்த 19 ஆம் திகதியன்று அந்தக் குதிரை குறித்த வளவில் மேய்ச்சலுக்காக விடப்பட்டிருந்தது இரவு நேரத்தில் அது காணியின் எல்லையைத் தாண்டியதும் இனந்தெரியாதவர்களால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளது.

நான்கு தினங்களாக அதனைத் தேடிய பின் அது அடித்துக் கொலை செய்யப்பட்டு போடப்பட்டுள்ளமை நேற்றையதினம் தெரிய வந்ததாக கூறப்படுகிறது.

குதிரையின் உரிமையாளரான ஜெயசிங்கம் மரியான் என்பவர் சந்தேகத்தின் பேரில் மூன்று நபர்கள் மீது நெடுந்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

கோப்பாய் இரும்பகத்தில்

## இரவில் கதவை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.25

கோப்பாயில் தனியார் இரும்பகம் ஒன்று உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப் பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள குறித்த வணிக நிலையத்தின் முன்பக்க இரும்புக் கதவு உடைக்கப்பட்டு கடைக்குள் இருந்த பெறுமதி வாய்ந்த பொருள்களை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர். மின்மோட்டர்கள், மின்சார வயர்கள், இரும்புக் கம்பிகள், மின்சாரப் பொருள்கள் உட்பட மற்றும் பெரும் எண்ணிக்கையான பொருள்களும் களவாடப்பட்டுள்ளன.

களவாடப்பட்ட பொருள்களின் பெறுமதி பல லட்சம் ரூபாவாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற கோப்பாய் பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை மேற்கொண்டதோடு தீவிர விசாரணையிலும் ஈடுபட்டனர். இதேவேளை குறித்த வணிக நிலையம் அண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்தது.

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில்திருடர்களின் தொல்லை கடந்த சில தினங்களாக அதிகரித்துக் காணப்படுகிறது. இரவு வேளையில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களால் பிரதேச மக்கள் பீதியுடன் இருக்க வேண்டியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க நீர்வேலி கந்தசுவாமி கோயிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திருடர்களின் நடமாட்டம் காணப்பட்டதாகவும் மக்கள் விழிப்படைந்து அங்கு சென்ற வேளை திருடர் குழு ஒன்று மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.(வ-17-4)

# பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் பணி ஆரம்பம்

*யாழ்.மாநகர சபை ஏற்பாட்டில்*



யாழ்ப்பாணம், ஒக்.25

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபை பிளாஸ்ரிக்கிலான திண்மக் கழிவுகளை அகற்றும் பணியை ஆரம்பித்துள்ளது.

கழிவுகள் அகற்றும் பணிக்காக தனி யான வாகனம் ஒன்றையும் மாநகர சபை பயன்படுத்தி வருகின்றது.

குறித்த வாகனம் மாநகர சபைப் பகுதியில் உள்ள பொது இடங்கள், மக்களின் சுற்றாடல்களில் உள்ள பிளாஸ் ரிக் கழிவுகளை சேகரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

இதேவேளை குடாநாட்டில் பெய்துவரும் மழையால் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. எனவே சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிவு ரீதியாக வீடுகள், பொது இடங்கள் ஆகியவற்றுக்குச் சென்று சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

பரிசோதனையின்போது டெங்கு பரவும் சூழல் இனங்காணப்பட்டால் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்படுகிறது. டெங்கு ஒழிப்பு மற்றும் சுகாதாரம் பேணும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே பிளாஸ்ரிக் கழிவுகளை அப்புறப்படுத்தும் பணியை மாநகர சபை முன்னெடுத்துள்ளது. (வ-17)

## மாணவன் மீது ஆசிரியர் பாரபட்சம்; மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

வலி.வடக்கு, ஒக்.25

வலிகாமம் கல்வி வலய பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பெண் ஆசிரியர் ஒருவருக்கு எதிராக பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவனின் பெற்றோரால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இடம்பெற்ற ஆசிரியர் தின விழாவில் மலர் மாலை அணிவிக்கச் சென்ற சிறுவனின் மாலையை ஏற்காது சிறுவனை மேடையில் வைத்து தள்ளிவிட்டதாகக் கூறி எழுந்த சர்ச்சை குறித்து உடுவில் கல்விக் கோட்டம் மற்றும் வலிகாமம் வலயத்துக்கும் முறையிட்டபோதிலும் இதுவரை எந்த வகையான விசாரணைகளும் மேற்கொள்ளாத நிலையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை குறித்த பாடசாலைக்கு வலிகாமம் கல்வி வலயம் மற்றும் உடுவில் கல்விக் கோட்ட அலுவலர்கள் பயணம் மேற்கொண்டு பாடசாலை ஆசிரியர்களுக்கு இடையே இடம்பெறும் மோதல் குறித்து விசாரித்த போதிலும் குறித்த பெற்றோரால் ஏற்கெனவே செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் எந்த வகையான விசாரணை களையும் மேற்கொள்ள வில்லை என்றும் பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (வ-86)



பாடசாலையின் பெண் ஆசிரியர் ஒருவருக்கு எதி ராக பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவனின் பெற்றோரால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

நவாலி, ஒக்.25

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட பல பிரதேசங்களில் அண்மைக் காலமாக கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுதுமலை போன்ற பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் அந்தப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரதானமாக இரவுவேளையில் பூட்டியுள்ள கடை, விறாந்தை, வீட்டு வாசல், வாசற்படிகள், ஆலயங்கள், பொது மண்டபங்கள் போன்றன கட்டாக்காலி நாய்களின் தங்குமிடமாக உள்ள அங்கேயே அவை கழிவகற்றுவதால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது. (வ-100)

## இருதயக் கல்லூரியின் நூற்றாண்டு விழா

வடமராட்சி, ஒக்.25

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவும், நூற்றாண்டு மலர் வெளியீடும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி வழிபாட்டு மண்டபத்தில் அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட ஆயர் இ.தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புரையை பழைய மாணவர் சங்கப் போஷகர் ஆர்.இ.ஆனந்தராஜாவும், ஆசியுரையை கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு. எமில் போலும் வழங்குவர். வாழ்த்துரைகளை பழைய மாணவர்களான ஓய்வு நிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் நிகழ்த்துவர். (வ-8)

## தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தால் நலனோம்புத் திட்டங்கள்

தென்மராட்சி, ஒக்.25

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் நலனோம்புத் திட்டங்கள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப் பட்டன.

கழகத் தலைவர் லயன் த.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் பிராந்திய தலைவர் லயன் எஸ்.செல்வராசா, வலயத் தலைவர் லயன் எஸ்.நவநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு நலனோம்புத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர்.

பிரதேசத்தில் தென்னை மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் 500 தென்னம்பிள்ளைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் ஆயிரம் பனம் விதைகள் நடும் வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டது. அத்துடன் பிரதேசத்தைச் சேர்ந்த முதியோர், கணவனை இழந்த பெண்கள் ஆகியோருக்கு உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன. (வ-9)





## வீதி மருங்கிலுள்ள வீடுகளில் புகுந்தது வெள்ளம்

வடமராட்சி, ஒக்.25

வீதி அகலிப்பின் போது வீதி உயர்த்தப்பட்டதால் நேற்றுமுன்தினம் பெய்த பெரு மழையால் மந்திகை தொடக்கம் பருத்தித் துறை வரையான பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள வீடுகள், கடை களுக்குள் வெள்ளம் தேங்கி நின்றது. வெள்ளத்தை அகற்றுவதில் அவற்றின் உரிமையாளர்கள் சிரமங்களை எதிர்நோக் கினர்.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதி உயர்த்தி அகலிக்கப்பட்டுள்ளது. இந்த வீதியில் மந்திகை தொடக்கம் பருத்தித்துறை வரையான வீதியின் சில பகுதிகளில் வெள்ள வாய்க்கால்களும் அமைக்கப்பட்டிருந்தன. வீதி உயர்த்தப்பட்ட போதிலும் வீடுகள், கடைகள் பள்ளமான நிலப்பகுதியிலே காணப் படுகின்றன.

பிரதான வீதியில் இருந்து ஊர்மனைகளுக்குச் செல்லும் குறுக்கு வீதிகளும் பிரதான வீதியின் உயரத்தில் இருந்து சரிவாக சிறிது தூரம் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதி காலை பெய்த கடும் மழையால் வீதியிலிருந்து மழைவெள்ளம் வீடுகள், கடைகளுக்குள் புகுந்துள்ளதோடு வாய்க்கால்களில் வெள்ளம் வடிந்தோடமுடியாத நிலையும் ஏற்பட்டது.

ஊர்மனைகளிலிருந்து வரும் குறுக்கு வீதி ஊடாக வரும் வெள்ளம் வாய்க்காலுக்குள் புக முடியாத நிலையும் உருவாகியிருந்தது.

இதனால் வீதியின் இரு மருங்கிலும் உள்ள வீடுகள் கடைகளுக்குள் வெள்ளம் புகுந்தது. வெள்ளத்தால் வீடுகளில் உள்ள மலசலகூடக் குழிகள் நிறைந்து வீடுகளில் இருந்தோர் சிரமங்களை எதிர் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முழுநிறைவு தரவில்லை

## சட்டப்பேரவை தீர்மானம் குறித்து ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ

சென்னை, ஒக்.25
இலங்கைக்கு எதிரான தமிழக சட்ட சபையின் தீர்மானம் முழுமன நிறைவு தரவில்லை என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"பொதுநலவாய நாடுகளின் அரசுத் தலைமைகளின் கூட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றது. அந்த மாநாடு எதிர்வரும் நவம்பர் 17,18 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறவுள்ளது.



ஈழத் தமிழர் இனப்படுகொலையின் கூட்டுக் குற்றவாளியான காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு இனக்கொலை குறித்த நீதி விசாரணையை மேற்கொள்ள விடாமல் தடுப்பதற்காகவே இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்த முன்னின்றது. ஏனெனில் எந்த நாட்டில் மாநாடு நடக்கிறதோ அந்தநாட்டின் ஜனாதிபதியே அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அந்த அமைப்புக்குத் தலைவராக இருப்பார்.

எனவே தமிழ் இனக்கொலை புரிந்த மாபாதகன் மஹிந்த ராஜபக்ஷவை பொதுநலவாய அமைப்புக்குத் தலைவராக்கி, தமிழ் இனக்கொலைக் கொடுமையை விசாரணைக்கு வரவிடாமல் குழிதோண்டிப் புதைப்பதுதான், இந்திய இலங்கை அரசுகளின், கூட்டுச் சதி நோக்கமாகும்.

நேற்று தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் இது குறித்து ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அதனை சட்டமன்றம் முழு மனதாக நிறைவேற்றி இருக்கிறது. இந்த தீர்மானம், தமிழக சட்டப் பேரவையில் கடந்த மார்ச் மாதம் கொண்டு வரப்பட்ட தனி ஈழத்துக்கு பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரி நிறைவேற்றப் பட்ட தீர்மானத்துக்கு எதிராக உள்ளது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததில் மனநிறைவு ஏற்படவில்லை" என்று கூறப் பட்டுள்ளது. (ற)

# அரசு எவ்வழியோ மக்களும் அவ்வழி

## தங்கம் தோண்டப் புறப்பட்ட மக்களால் பெரும் சிரமம்

புதுடில்லி, ஒக்.25
இந்தியாவின் உன்னாவோ பகுதியில் ஆயிரம் தொன் தங்கப் புதையலை எடுக்க தொல்பொருள் துறையினர் தோண்டி வரும் நிலையில் சுற்று வட்டாரங்களில் உள்ள பழங்கால கோட்டைகளில் தங்கம் கிடைக்கும் என்ற ஆசையில் மக்களும் தங்கம் தேடத் தொடங்கியுள்ளனர். அதனால் அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இது குறித்து தொல்பொருள் துறை அதிகாரி கூறும்போது,
"உத்தரப் பிரதேச மாநிலம் உன்னாவோ மாவட்டத்தில் உள்ள 19ஆம் நூற்றாண்டுக் கால கோட்டையில் ஆயிரம் தொன் தங்கம் உள்ளதாக சோபன் சர்கார் என்ற சாமியார் கூறினார். அதையடுத்து அங்கு தொல்பொருள் துறை கடந்த 18ஆம் திகதி முதல் தங்கம் தேடும் பணியில் ஈடுபட்டுள் ளது.

இதுவரை 7 அடி தோண்டப் பட்டுள்ள நிலையில் ஒரு ஆணி, உடைந்த வளையல்கள், சில மண்பாண்டங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இவ்வாறிருக்க அந்தப் பகுதியில் உள்ள வேறு வரலாற்று பழமையான இடங்களைச் சுற்றி பொதுமக்களில் சிலர் தங்கம் கிடைக்கும் என்ற ஆசையால் பல பகுதிகளில் தோண்டத் தொடங்கியுள்ளனர்.

அதனால் பழமையான கோட்டைகள், கோயில்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் சேதம் அடைந்துள்ளன.

புதையல் தேடும் இந்த மக்களை தடுக்கவோ, புராதன கட்டடங்களை பாதுகாக்கவோ எங்களிடம் பாதுகாவலர்கள் இல்லை. இப்படி தோண்டும் ஆள்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும். அதனால் பழமையான இடங்களை பாதுகாக்க முதல்வர் அகிலேஷ் யாதவ் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொல்பொருள் துறை முதல்வருக்குக் கடிதம் எழுதியுள்ளது" என்று தெரிவித்துள் ளார். (ற)

# காங்கிரஸ் ஒற்றுமையுடன் தேர்தலை எதிர்கொள்ளும்




ராகத்கார்த், ஒக்.25
காங்கிரஸ் கட்சியில் தான் ஒற்றுமை உள்ளது. நாங்கள் தேர்தலை சந்திக்க தயாராக உள்ளோம் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் துணைத்தலைவர் ராகுல் காந்தி.

மத்திய பிரதேசம் ராகத்கார்த் பகுதியில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"இந்த மாநிலத்தை ஆளும் பா.ஜ.கட்சி மக்களுக்காக எதையும் செய்யவில்லை. இந்தியா ஒளிர்கிறது என பரப்புரை செய்தனர். ஆனால் ஒளிரவில்லை. வறட்சி நிவாரண நிதியை மத்திய அரசு ஒதுக்கியும், அதை மத்திய பிரதேச அரசு முறையாக பயன்படுத்த வில்லை. மக்கள் பசியால் வாடுவதை காங்கிரஸ் ஒரு போதும் அனுமதிக்காது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# சீனப் பிரச்சினை தீரும்

## மன்மோகன் சிங் நம்பிக்கை



புதுடில்லி, ஒக்.25
இந்தியா - சீனா இடையேயான எல்லைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என பிரதமர் மன்மோகன் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய பள்ளியில் உரையாற்றும் போதே மன்மோகன்சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறும் போது,
"உலக அளவில் உற்பத்தி துறையில் சீனாவும், சேவைத் துறையில் இந்தியாவும் முக்கிய பங்காற்றி வருகின்றன. இரு நாடுகளிடேயே பின்பற்றப்படும் தடையில்லா வணிகத்தால் பொருளாதாரத்தில் உன்னத நிலையை எட்டி உள்ளோம்.

சீனாவுடன் உறவை மேம்படுத்துவதற்கான 6 புதிய கொள்கைகளை இந்தியா கடைப் பிடிக்கவுள்ளது. இந்திய- சீன எல்லைப்பகுதிகளில் அமைதியை நிலை நாட்டுவதற்கு முக்கியத்துவம் அளிப்பது உள்ளிட்ட அம்சங்கள் அந்தக் கொள்கைகளில் அடங்கி உள்ளன. இந்தியா மற்றும் சீனா இடையிலான பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்" என்று தெரிவித்தார். (ற)

# கப்பல் பணியாளர்களை விடுவிக்க வேண்டும்

## கப்பல் நிறுவனம் கோரிக்கை

தூத்துக்குடி, ஒக்.25
இந்திய கடல் பகுதிக்குள் அத்துமீறி ஆயுதங்களுடன் நுழைந்த அமெரிக்க நிறுவனத்திற்கு சொந்தமான கப்பலின் பணியாளர்களை விடுவிக்குமாறு குறித்த கப்பல் நிறுவனம் கோரியுள்ளது.



கப்பலில்இருந்த35பேரும்கைது செய்யப்பட்டு அவர்களைக் கியூ பிரிவு பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

இந்தநிலையில் தமது கப்பல் இந்திய கடல் பகுதிக்குள் நுழையவில்லை. அதனால் கப்பலையும் ஊழியர்களையும் விடுவிக்க வேண்டும் என்று அமெரிக்க கப்பல் நிறுவனமான அட்வான்போர்ட் இன்டர்நேஷனல் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த நிறுவனத்தின் தலைவர் வில்லியம் வோட்சன் கூறுகையில்,
"கடல் கொள்ளையர்களிடம் இருந்து மற்ற கப்பல்களை காப்பதே எங்கள் தொழில். தற்போது ஏராளமான நாடுகளும், நிறுவனங்களும் எங்களின் சேவைக்காக காத்திருக்கின்றன. எனவே கப்பலும், ஊழியர்களும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்" என்று கூறி உள்ளார். (ற)

# இலங்கைக்கு எதிராக நிறைவேறிய தீர்மானத்தை வரவேற்கின்றேன்

## மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஒக்.25
இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா முற்றிலும் புறக்கணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி சட்ட சபையில் முதலமைச்சர் ஜெயலலிதா முன்மொழிந்த அரசின் தீர்மானத்தை பாராட்டுகின்றேன் என்று தெரிவித்துள்ளார் மு.க.ஸ்டாலின்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"முதலமைச்சரால் கொண்டு வரப்பட்ட அரசின் தீர்மானத்தை தி.மு.க. சார்பில் வழிமொழிந்து வரவேற்க கடமைப்பட்டுள்ளேன். பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறப் போகிறது என்ற செய்தி வந்ததில் இருந்து அந்த மாநாடு இலங்கையில் நடைபெறக் கூடாது என்றும் அதில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்றும் தி.மு.க. தலைவர் கலைஞர் பலமுறை குரல் கொடுத்துள்ளார்.

இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டை கனடாவில் உள்ள அகில உலக தமிழர்களும் மாநாட்டை புறக்கணித்துள்ளனர். ஆஸ்திரேலியாவின் முன்னாள் ஜனாதிபதியே கையெழுத்து இயக்கத்தில் பங்கேற்று மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இங்கிலாந்து நாடாளு மன்ற உறுப்பினர்களும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழக அளவில் அனைவருமே இதில் ஒன்றுபட்டு குரல் கொடுப்பது மகிழ்ச்சி தருகிறது. இதற்கு பிறகும் தமிழர்களின் உணர்வுகளை மதிக்காமல் இலங்கையுடனான உறவை இந்தியா கைவிடாமல் இருந்தால் பொதுநலவாய நாடுகளுக்கு எதிர்வரும் 2 ஆண்டுகளுக்கு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ அவைத் தலைவராக வந்து விடும் நிலை ஏற்பட்டு விடும்.

இதை கருத்தில் கொண்டாவது இந்தியா பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும்.

உலக தமிழர்கள் ஒன்று சேர்ந்து வலியுறுத்தும் இந்தக் கருத்துக்கு ஆதரவாக இந்தியா பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று கூறி முதலமைச்சரின் தீர்மானத்தை வரவேற்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# அ.தி.மு.க, தி.முகவுடன் கூட்டணி எப்போதுமில்லை

## ம.தி.மு.க. அறிவிப்பு

சென்னை, ஒக்.25
எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.கவுடன் கூட்டணி வைத்துக் கொள்ள மாட்டோம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

விருதுநகர் செட்டிக்குறிச்சியில் மக்களவை தேர்தலுக்கான தனது முதல் கட்ட பிரசாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"தேர்தலின்போது சில அரசியல் கட்சிகள் வாக்காளர்களுக்கு ஆயிரக்கணக்கில் பணம் கொடுக்க முன்வருவார்கள்.

ஆனால் மக்கள் வாக்குகளை நல்லவர்களுக்கு அளிக்க வேண்டும். வாக்களிக்கப் பணம் பெறுவோரை சிறையில் அடைக்க வேண்டும் என்று தேர்தல் அதிகாரி அறிவித்திருப்பது அர்த்தமற்ற பேச்சு.

தமிழகத்தில் மதுவிலைக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி நடைபயணம் மேற்கொண்டேன். மதுவால் இளைஞர் சமுதாயம் சீரழிந்து வருகிறது.

அதை தடுக்கும் நோக்கத்தோடு விழிப்புணர்வை ஏற்படுத்த நடைபயணம் மேற்கொண்டேன். விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வலியுறுத்தி விருதுநகரில் உண்ணாவிரதம் இருந்துள்ளேன். இதுபோன்று மக்கள்பிரச்சினைகளுக்காக போராட்டம் நடத்தி வருகிறேன். ஏற்கெனவே நான் இத்தொகுதியின் மக்களவை உறுப்பினராக இருந்து பொதுமக்களுக்கு சேவையாற்றியுள்ளேன். மீண்டும் ஒருமுறை சேவையாற்ற வாய்ப்பு தாருங்கள்" என்று தெரிவித்துள்ளார் வைகோ. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயணைத்த விமானம் சிக்கியது விபத்தில் விமானி சாவு; ஆஸியில் சம்பவம்

மெல்பேர்ன், ஒக்.25
ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் அந்த விமானத்தின் விமானி உயிரிழந்துள்ளார்.

தீ ஏற்பட்டிருந்த இடங்கள் மீது தண்ணீரைப் பீய்ச்சி அடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சிறிய ரக விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது.

தீ கட்டுக்கடங்காது பரவி வரும் நிலையில் அந்தப் பகுதியில் காணப்பட்ட சீரற்ற காலநிலையே விபத்துக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. (ற)

## நடுவானில் தீப்பற்றிய விமானம்

நியூயோர்க், ஒக்.25
நடுவானில் விமானியின் அறையில் தீப்பற்றிக் கொண்டதை அடுத்து அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டது அமெரிக்க எயார் லைன்ஸ் விமானம். அதில் பயணித்த 175 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

டிரினிட்டாட்டில் இருந்து மியாமிக்கும் 175 பயணிகளுடன் போயிங் 757 ரக விமானம் பறப்பை மேற்கொண்டிருந்தது. அமெரிக்க எயார் லைன்ஸுக்குச் சொந்தமான அந்த விமானத்தின் இயந்திரத்தில் திடீரென ஏற்பட்ட கோளாறை அடுத்து விமானியின் அறைக்குள் தீப்பற்றிக் கொண்டது.

விமானத்தை டிரினிட்டாட்டுக்குத் திருப்புவதற்குப் போதுமான எரிபொருள் இல்லாததை அடுத்து ஜமைக்காவின் டின்னி கரீபியன் தீவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

அதிர்ஷ்டவசமாகப் பயணிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)



ஜப்பானின் புகுஷிமா அணு உலையில் இருந்து அடிக்கடி கதிர்வீச்சு வெளியேறி வருவதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தால் கடல் உணவுகளைப் புறக்கணித்து வருகின்றனர். அதையடுத்து அந்தப் பகுதிக்கு வந்த ஜப்பான் பிரதமர் ஜின்ஜோஅபே, கடல் உணவுகளை உட்கொண்டு மக்களின் பயத்தைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டார். (ற)

## உளவு பார்த்தமை தொடர்பில் விசாரணைகள்

### மெக்ஸிகோ திட்டவட்டம்

நியூயோர்க், ஒக்.25
மெக்சிகோ ஜனாதிபதியின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட்டன என்று எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மெக்ஸிகோ வெளியுறவுத் துறை செயலாளர் அன்டோனியா மீட்,

"இந்த விவகாரத்தில் அமெரிக்காவிடம் விளக்கம் கேட்கப்படவில்லை. மாறாக விசாரணை நடத்தக் கோரப்பட்டது. இந்த விவகாரத்தில் தேசிய பாதுகாப்பு நிறுவனம் மூலம் விசாரணை நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா வாக்குறுதி அளித்துள்ளார்" என்று தெரிவித்தார். (ற)

# விமானத் தாக்குதல்கள் சட்டபூர்வமானவையே

## அடித்துக் கூறுகின்றது அமெரிக்கா

நியூயோர்க், ஒக்.25
பாகிஸ்தான் மற்றும் யேமன் ஆகிய நாடுகளின் எல்லைக்குள் நடத்தப்படும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாகவே நடத்தப்படுகின்றன என்று விளக்கமளித்துள்ளது அமெரிக்கா.



பாகிஸ்தான் மற்றும் யேமன் ஆகிய நாடுகளின் எல்லைக்குள் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் நடத்தும் தாக்குதல்களில் அப்பாவிப் பொது மக்களே அதிகம் உயிரிழக்கின்றனர். அமெரிக்காவின் அந்தத் தாக்குதல்கள் போர்க் குற்றத்துக்கு நிகரானது என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ள நிலையிலேயே இவ்வாறு விளக்கமளித்துள்ளது அமெரிக்கா.

இதுகுறித்து விளக்கமளித்துள்ள வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜே கோர்னே,

" அமெரிக்கா மேற்கொள்ளும் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அனைத்தும் சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாகவே எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் அவை குறித்துக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் "அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் பாகிஸ்தானின் சுதந்திரம், இறைமை என்பவற்றை மீறும் செயல். இவ்வாறான தாக்குதல்கள் இருநாடுகளுக்கும் இடையேயான உறவைப் பாதிக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## தலிபான் அமைப்புக்கு அலுவலகம் வேண்டும்

### பாகிஸ்தான் நீதிமன்றில் மனுத்தாக்கல்

இஸ்லாமாபாத், ஒக்.25
அமைதிப் பேச்சுக்களை நடத்துவதற்காக பாகிஸ்தானில் தலிபான்கள் அலுவலகம் திறப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரி அந்த நாட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் கோரப்பட்டுள்ளதாவது,

"பாகிஸ்தானில் தலிபான்கள் அலுவலகம் ஆரம்பிக்க அனுமதி அளிப்பது, பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற உதவும். தலிபான்களுடன் பேச்சு நடத்துவதால் பாகிஸ்தான் மீது எந்த வித பொருளாதாரத் தடையும் விதிக்க இயலாது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

எனவே தலிபான்கள் அலுவலகத்திற்கு அனுமதி அளிக்க அரசுக்கு அறிவுறுத்த வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கட்டாரில் அமைந்துள்ள தலிபான்களின் அலுவலகத்தைச் சுட்டிக்காட்டிய தெஹ்ரிக்-இ-இன்ஸாப் கட்சித் தலைவரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான், பெஷாவரில் தலிபான்கள் அலுவலகம் திறக்க பாகிஸ்தான் அரசு அனுமதிக்கலாம் என்று தெரிவித்துள்ளார். (ற)

## உளவு பார்க்கவில்லை

### பிரான்ஸின் குற்றச்சாட்டை மறுக்கின்றது அமெரிக்கா

பாரிஸ், ஒக்.25
பிரான்ஸ் மக்களின் தொலைபேசி அழைப்புகள் அமெரிக்க உளவு நிறுவனத்தால் உளவு பார்க்கப்பட்டுள்ளன என்று வெளியான தகவல்களை மறுத்துள்ளது அமெரிக்க அரசு.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க தேசிய உளவு அமைப்பின் இயக்குநர் ஜேம்ஸ் கிளாப்பர்,

"அமெரிக்க உளவு அமைப்புத் தொடர்பாக தவறான தகவல்கள் வெளியிடப்படுகின்றன. ஏனைய நாடுகளைப் போன்ற வழமையான நடவடிக்கை களையே அமெரிக்க தேசிய உளவு அமைப்பும் மேற்கொண்டு வருகின்றது" என்று தெரிவித்துள்ளார்.

எனினும் 'லா மாண்ட்' என்ற நாளிதழ் வெளியிட்டுள்ள தகவல்களின்படி, " 2011ஆம் ஆண்டில் அமெரிக்கா பெருந்தொகைப் பணச் செலவில் 'ஸ்பை இம்ப்லாண்ட்ஸ்' என்ற திட்டம் ஒன்றைச் செயற்படுத்தியது. அந்தத் திட்டத்தில் ஆயிரக்கணக்கான கணினிகளை உளவு பார்த்தது. பிரான்ஸ் தலைவர்கள் மற்றும் பொது மக்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட்டன." என்று கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள பிரான்ஸ், "கூட்டணி நாடுகளுக்கிடையே இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது" என்று தெரிவித்துள்ளதுடன்,



ஆயிரக்கணக்கான கணினிகளை உளவு பார்த் தது அமெரிக்கா. பிரான்ஸ் தலைவர்கள் மற்றும் பொது மக்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன

பிரான்ஸுக்கான அமெரிக்கத் தூதருக்கு அழைப்பாணை அனுப்பி விளக்கம் கோரியிருந்தது.

இந்தநிலையில் அவ்வாறான நடவடிக்கைகளில் தாம் ஈடுபடவில்லை என்று அமெரிக்க தேசிய உளவு அமைப்பின் இயக்குநர் மறுப்புத் தெரிவித்துள்ளார். (ற)

## திருமணத்தை நிறுத்த விநோதத் திட்டம்: வசமாக மாட்டிக் கொண்ட மணமகன்

லண்டன், ஒக்.25
திருமணத்தை நிறுத்துவதற்காக விநோதத் திட்டம் ஒன்றை செயற்படுத்திய மணமகன் பொலிஸாரிடம் வசமாகச் சிக்கிக் கொண்டார். இந்த சுவையான சம்பவம் பிரிட்டனில் நடந்துள்ளது.



பிரிட்டனின் கிர்பி நகரை சேர்ந்த நீல் மார்டல் (வயது 36) என்பவருக்கும், அமி வில்லியம்ஸ்(வயது 32) என்ற பெண்ணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அவர்களுக்கு லண்டன் லிவர்பூல் செயின்ட் ஜோர்ஜ் மண்டபத்தில் திருமணம் செய்து வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

திருமண நாளன்று காலை திருமண ஏற்பாடுகள் வெகு விமரிசையாக நடக்க, திருமண உடை அணிந்து மணமகள் தயாரானார். மணமகனும் அலங்காரம் முடிந்து மண்டபத்துக்குப் புறப்பட்டார். அப்போது தான் அவருக்குப் பொறிதட்டியது. திருமண மண்டபத்தை முறைப்படி பதிவு செய்ய மறந்து விட்டோம் என்பது.

அதை அப்போது சொன்னால் மணமகள் தன்னைப் பற்றி தவறாக நினைத்து விடுவாரே என்ற பயந்த மார்டல், அறைக்குள் சென்று என்ன செய்யலாம் என்று தனியாக மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டார்.

அப்போதுதான் அந்த வில்லங்கமான யோசனை அவருக்கு உதித்தது. உடனே எடுத்தார் தொலைபேசியை. அழைப்பைப் போட்டார் திருமண மண்டபத்துக்கு. "உங்கள் திருமண மண்டத்தில் வெடிகுண்டு உள்ளது. உடனே அனைவரையும் வெளியேற்றுங்கள். சிறிது நேரத்தில் குண்டு வெடித்து விடும்" என்று கூறிவிட்டு "அப்பாடா" என்று அமர்ந்து விட்டார்.

திருமண மண்டபம் அல்லோலகல்லோலப்பட்டது. அங்கிருந்த அனைவரும் உடனடியாக வெளியேற்றப்பட்டு நடைபெற இருந்த திருமணமும் நிறுத்தப்பட்டது. விடயம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்களும் மண்டபத்தைச் சல்லடை போட்டுச் சலித்தனர். குண்டு இருந்தால் தானே கண்டுபிடிக்க.

வெடிகுண்டு விடயம் புரளி என்பதை அறிந்த பொலிஸார் அது குறித்துத் துருவ ஆரம்பித்தனர். கடைசியில் வகையாக மாட்டினார் மார்டல். பிறகென்ன? வெடிகுண்டு மிரட்டல் விடுத்தமைக்கான ஒரு [illegible] மார்டல். (ற)

## ஆடம்பர ஆயர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்

வத்திக்கான், ஒக்.25
ஜெர்மனியில் தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை பல மில்லியன் டொலர் செலவு செய்து புதுப்பித்த கத்தோலிக்க ஆயர் பிராங் பீற்றர் தெபர்ட்ஸ் வான் எல்ஸ்ட்டை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார் பாப்பரசர் பிரான்சிஸ்.

வத்திக்கானில் பாப்பரசருடன் நடந்த சந்திப்பையடுத்து, ஆயர் வான் எல்ஸ்ட் காலவரையின்றி அவரது மறைமாவட்டத்திலிருந்து வெளியேறும்படி பணிக்கப்பட்டுள்ளார். பெருமளவிலான மக்கள் கத்தோலிக்கச் திருச்சபைக்கு வரிசெலுத்தும் ஜெர்மனியில் இந்த ஆயரின் அளவுகடந்த செலவினம் தொடர்பில் அதிருப்தி வெளிப்பட்டுள்ளது.

ஏழை மக்கள் மீது திருச்சபை சமூகம் இரக்கமும் மரியாதையும் காட்டவேண்டும் என்று புதிய பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார். இந்தநிலையில் ஆயர் வான் எல்ஸ்ட் ஆடம்பரச் செலவுகளை மேற்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோளங்கன் ச.ச. நிலையக் கலை விழா

வடமராட்சி, ஒக்.25
கரணவாய் தெற்கு சோளங்கன் சனசமூக நிலையக் கலைவிழா குறித்த சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை சனிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிலையத் தலைவர் ம.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செய லாளர் இ.வரதீஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக கர வெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் தி.செந்திநாதன், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. நற்குணலிங்கம், கரணவாய் ம.வி. அதிபர் ச.சண்முகநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை தவிசாளர் பொ.வியாகேசு, சுகாதார வைத்திய அதிகாரி சி.சுதோக்குமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், ஆயுள் வேத மருத்துவ உத்தியோகத்தர் அ.அரவிந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
(ந-35)

## சாரணர் விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.25
கொக்குவில் இந்துக்கல்லூரியின் 7 ஆவது யாழ்ப்பாண சாரணர் துருப்பின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெறவுள்ளது. பாட சாலையின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் கொக்குவில் இந்து வின் சாரணியன் மலர் வெளியீடு, சாரணிய இணையத் தளத்தை ஆரம்பித்தல், சாரணிய உயர் விருது பெற்றோர் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளன.
ஜனாதிபதிச் சாரணன் ச.அமல்ராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சாரணன் சதானந்தன் ஆனந்தும், சிறப்பு விருந்தினராக நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமாரும், கௌரவ விருந்தினர்களாக, சி.ராஜ்குமார், யாழ். மாவட்ட சாரணிய ஆணையாளர் செ.தேவ ரஞ்சன் ஆகியோ ரும் கலந்து கொள்வர்.
(ந)

## விநாயகர் ச.ச. நிலையத்தின் 66 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.25
கைதடி தென்.கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு விழாவும் கலைநிகழ்வு விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.
நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொள்வர்.
சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், கே.சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராசா ஆகியோரும், கௌரவ விருந்தினர் களாக கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் எஸ்.சிவானந்தன், கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய அதிபர் எஸ்.பவளகுமாரன், கைதடி கிராம சேவையாளர் எஸ்.இரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.
நிகழ்வில் விருந்தினர்கள் உரை, பரிசளிப்பு, கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறும்.
(ந)

## பரிசளிப்பு விழா

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய கலை அரங்கில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் இரா.ஸ்ரீநடராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி லோகேஸ்வரி ஸ்ரீகரன் வழங்குவார்.
(ந)

## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

அண்மையில் வெளியாகிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விவரம் வருமாறு:-
பெரியவிளான் றோ.க.த.க.பாடசாலை
அ.ஜெ.ஆகாஸ்-171, ல.அபிஷேக்-164, கி.அகலொளி-163, ஜெ.எடிசன்-162.
மன்/அல்-அஸ்ஹர் மகாவித்தியாலயம்
முஹமட் றிஸ்னி முஹமது றீஹான்-177, முஹமட் நாஸர் அஸ்பா பானு-157.
(ந)

## சுவிஸுக்கு ஆன்மிகப் பயணம்

யாழ்ப்பாணம், ஒக்.25
தமிழ் உணர்வாளரும் ஆன்மிக வாதியுமான மறவன் புலோ க.சச்சிதானந்தன் சுவிஸுக்கு ஆன்மிகப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.
இளம் தலைமுறை யினருக்கு தேவாரத்தைப் பண்ணோடும் பக்தியோடும் போதிக்கும் நோக்கில் தேவாரம் தொடர்பான விளக்கங்களை அளிப்பதாக அவரது பயணம் அமைந்துள்ளது.
சுவிஸில் அடுத்த வருடம் மே மாதம் நடைபெறவுள்ள முருக பக்தி மாநாட்டின் ஆலோசகரான இவர் தாம் செல்லும் ஆலயங்களில் மாநாடு குறித்து விளக்கமும் அளித்து வருகிறார்.
(ந)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்
2013தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையில் 173 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த
செல்வன் வேலாயுதம் குணதீபன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

| | | | |
|---|---|---|---|
| செல்வி பாலகுமார் பாமினி | -146 | செல்வன் ஜெயதரன் புவிசாந் | - 87 |
| செல்வி பூபாலசிங்கம் மதுசாளினி | -142 | செல்வி நந்தகுமார் தர்ஷிகா | - 84 |
| செல்வன் சிவகரன் தமிழாதவன் | - 131 | செல்வி ஞானசேகரம் அகிஷியா | - 71 |
| செல்வன் பரமானந்தம் தர்மிலன் | - 131 | செல்வி கறுப்பையா கம்ஷாயினி | - 71 |
| செல்வி யோகேஸ்வரன் கம்சா | - 110 | | |

ஆகிய மாணவர்களையும், இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களான
சூ.ஜெனட் ரவீந்திரன், செல்வி.செ.கலைவாணி ஆகியோரையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்

### வாழ்த்துகின்றோம்




2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
யா/புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தில்
164 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த
றஜிக்குமார் சாலிகா
அவர்களையும், அதே பாடசாலையில் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள மாணவர்களான

| | | |
|---|---|---|
| இ.கி.மே. கிளன்சலா - 140 | பே.மேரி அபிசாளினி - 130 | மை.மேரிசாமினி - 126 |
| றொ.றீ.றொனாலக்ஷி - 122 | க.கனோஜினி - 108 | |

ஆகியோர்களையும்
யா/புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில்
100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள மாணவர்களான

| | | |
|---|---|---|
| ர.அனுராஜ் - 146 | ரி.ஸ்.ஜோ. சுதர்ஷன் - 134 | ஜே.ட. ஜான் - 127 |
| ரி.புகவர்த்தனன் - 119 | யே. வினோஜன் - 102 | |

ஆகியோர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழகம் - குருநகர்
ஆதரவு: சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்

### காணவில்லை



சரசாலை, கனகம்புளிசந்தியடியைச் சேர்ந்த சிவராசா சிவானுயா ஆகிய 24 வயதாகும் இந்தப் பெண்ணை (22.10.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியில் இருந்து இதுவரை காணவில்லை. இப்பெண்ணைக் கண்டவர்கள் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 077 019 9590
077 226 4030
(7.6.3)

### காணி விற்பனைக்கு

தாளையடி வீதி, பளை, புதுக்காட்டுச் சந்திக்கு மிக அருகில் 50 பரப்பு தென்னம் பயிர்செய்யக்கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 855 4808, 071 487 9301
edward.a.raj@gmail.com
(33255) (3.6.49)

### பெயர் மாற்றம்

சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலையைச் சேர்ந்த மேரி திரேசா ஆகிய நான் இன்று (25.10.2013) வெள்ளிக்கிழமையில் இருந்து எனது பெயரை அல்போன்ஸா மேரி ராணி என்று மாற்றம் செய்கிறேன். இன்று முதல் சகல ஆவணங்களிலும் எனது பெயரை அல்போன்ஸா மேரி ராணி என்றே பயன்படுத்துவேன்.
சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலை. (சி/13184) (7.6.3) அல்போன்ஸா மேரி ராணி

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
(3 பேர் அடங்கிய குடும்பம்) (சி/13337) (7.6.3)
T.P : 077 814 1326, 077 662 1658

### மாவட்ட விநியோக முகவர் தேவை

மிகவும் விரும்பிப் பாவிக்கப்படும் "Express" போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் விநியோகிப்பதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு விநியோக உபமுகவர்கள் தேவை. வாகன, களஞ்சிய வசதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Panganr Enterprises
Jaffna Office : 121, Sannithi Road, Paththaimeni, Atchuveli.
Mobile : +94 (0) 772 268825
E-mail : panganrent@yahoo.com
(சி/13339) (7.6.3)

### விற்பனை பிரதிநிதி தேவை

போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரை யாழ் மாவட்டத்தில் விநியோகிப்பதற்கு அனுபவமுடைய விற்பனைப் பிரதிநிதி தேவை. வான் ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப்பத்திரமும் சொந்தமாக மோட்டார் சைக்கிளும் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
T.P : 077 226 8825 (சி/13338) (7.6.3)
E-mail : panganrent@yahoo.com

### மணமகள் தேவை

23.08.1981 ஆம் ஆண்டு, இரவு 11.55 மணிக்கு பிறந்த இரண்டில் செவ்வாய் பிறநாட்டில் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதகப் பொருத்தம் இருப்பின்
தொடர்பு: 077 089 7652 (37567) (7.6.3)

### இத்தாலி மொழி

புதிய பிரிவுகள் ஆரம்பம்
(விசேட இரவு வகுப்புக்களும் உண்டு)
தொடர்புக்கு - 0771327818

உ
### காரைநகர்
### கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்
### கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் – 2013
அழைப்பு
காலம் : 2013.10.27 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 2.00 மணி
இடம் : நல்லூர் துர்க்கா மணிமண்டபம்

**தலைவர்**
என். சோதிநாதன் அவர்கள்
(தலைவர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

**பிரதம விருந்தினர்கள்**
பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்
(முன்னாள் தமிழ்த்துறை தலைவர், யாழ் பல்கலைக்கழகம்)
திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா
(ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி)

**சிறப்பு விருந்தினர்கள்**
காரை எஸ்.தயானந்தா அவர்கள்
(பிரதேச செயலர், மன்னார் நகரம்)
திருமதி தேவந்தினி பாபு அவர்கள்
(பிரதேச செயலர், பிரதேச செயலகம், காரைநகர்)

**கௌரவ விருந்தினர்கள்**
வைத்திய கலாநிதி எஸ்.கண்ணதாசன் அவர்கள்
(சிரேஸ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்)
நுண்கலைமாணி திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்
(ஆசிரியர், யா/விக்டோரியா கல்லூரி, சுழிபுரம்)
திரு. திருமதி எஸ். சிவஞானம் உமாதேவி தம்பதியினர்
(கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

* மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்
* சிறப்பு பட்டிமண்டபம்:

தமிழ் திரையுலகம் தமிழ்ப் பண்பாட்டைப் பேணுகின்றது ! பேணவில்லை !
நடுவர்
பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்
(முன்னாள் தமிழ்த்துறை தலைவர், யாழ் பல்கலைக்கழகம்)

| பேணுகின்றது ! | பேணவில்லை ! |
|---|---|
| தமிழருவி காரை த.சிவகுமாரன் (தலைவர்-வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கம்) | பேராசிரியர் தி.வேல்நம்பி (பீடாதிபதி-முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ் பல்கலைக்கழகம்) |
| கு.பாலசண்முகன் (ஆசிரியர்-சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்) | எஸ்.லலீசன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) |
| பரா.ரமேஸ் (காணி மாவட்ட பதிவகம், யாழ்ப்பாணம்) | இ.சர்வேஸ்வரா (உதவிப்பதிவாளர், மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்) |

குறிப்பு:-
1. குறித்த நேரத்தில் நிகழ்வினை ஆரம்பிப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பினையும் எதிர்பார்க்கின்றோம்.
2. நிகழ்வுக்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்றத்திலிருந்து பி.ப 1.00 மணிக்கு 782 இலக்க வழிப்பாதையூடாக இடம்பெறும்.
3. கலாமன்றத்தினால் வெளியீடு செய்யப்பட்ட சிதம்பர தரிசனம் இறுவட்டு பிரதி ஒன்று 300/- இக்கு நிகழ்வு நடைபெறும் மண்டபத்தில் விற்பனையாக வுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர். — நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(33264)(10.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர வீடுகளை அமைப்பதில் இடர்


## கண்ணகைபுரம் மக்கள் மழையால் பாதிப்புறும் அபாயம்



அக்கராயன், ஒக்.25
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கண்ணகைபுரம் கிராமத்தின் தாழ்நிலப் பகுதியில் வசிக்கும் 30 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதில் சிக்கல் தோன்றியுள்ளதால் மாரி காலத்தில் அவர்கள் பெரும் இடர்களை எதிர்கொள்ள நேரிடும் நிலை தோன்றியுள்ளது.
இந்தக் குடும்பங்களுக்கான மேட்டுக்காணி ஸ்கந்தபுரம் கிழக்குப் பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் அவற்றின் உரிமையாளர் எனக் கூறிக்கொள்ளும் குடும்பங்கள் சில அங்கு குடியமர்ந்ததால் கண்ணகைபுரம் தாழ் நிலப்பகுதி மக்களுக்குக் காணி வழங்குவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.
எனவே தமக்கு தாழ் நிலப் பகுதியிலாவது நிரந்தர வீடுகளை அமைத்து வழங்குமாறு இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
மாரி காலம் ஆரம்பித்து மழை வெள்ளம் காரணமாக இடம் பெயரும் நிலை ஏற்பட்டால் பாடசாலைகளில் தஞ்சமடையாமல் இம்முறை கரைச்சிப்பிரதேச செயலகத்தில் தான் சென்று தங்குவோம் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (க-18)

## வவுனியா நகரசபையின் வீதிகளுக்கு மின்விளக்கு

வவுனியா, ஒக்.25
உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வவுனியா நகரசபையால் வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
வவுனியா நகர சபையினர் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.
அந்த அடிப்படையில் நேற்று நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்பட்டன.
இதனைத் தொடர்ந்து இன்று வெள்ளிக் கிழமை மரம் நடும் நிகழ்வுகளும், பாடசாலை மாணவர்களுக்கான சுற்றாடல் தொடர்பான அறிவூட்டும் வீடியோ படக் காட்சிகளும் காண்பிக்கப் படவுள்ளன.
எதிர்வரும் 27 ஆம் திகதி நூலகக் கண்காட்சியும் வாசகர்களிடையே சித்திரப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பாடல் போட்டி கள் என்பனவும் நடைபெறவுள்ளன. (க-402-400)




## மழை பெய்தது மக்கள் நிம்மதி

முல்லைத்தீவு, ஒக்.25
முல்லைத்தீவு மாவட்டத்தில் பருவ மழை பெய்யத் தொடங்கியதால் வறட்சி நிலை நீங்கி மக்கள் நிம்மதி யடைந்துள்ளனர்.
கடந்த 6 மாதங்களாக இங்கு மழை பெய்யாததால் கடும் வறட்சி நிலவியது.
மக்கள் கடுமையான குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டனர்.
கால்நடைகளும் மேய்ச்சல் இல்லாமலும், குடிப்பதற்கு நீர் கிடைக்காமலும் பாதிக்கப்பட்டன.
மேலும் ஏராளமான வான் பயிர்கள் அழிவடைந்ததாகவும், ஏற்று நீர்ப்பாசனத்தை நம்பியிருந்த பயிர்கள் பாதிக்கப்பட்டதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்திருந்தனர்.
இந்த நிலையில் காட்டு விலங்குகளும் தண்ணீர் தேடிக் குடிமனைக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

“ கடந்த 6 மாதங்களாக இங்கு மழை பெய்யாததால் கடும் வறட்சி நிலவியது. மக்கள் கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டனர்.

கடுமையான வெப்பம் காரணமாக மக்களுக்கு பலவித நோய்களும் ஏற்பட்டிருந்தன.
இந்த நிலையில் மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் வறட்சி நிலை நீங்கியுள்ளது. அத்துடன் விவசாயிகள் கால போக விவசாயத்தை உற்சாகத்துடன் மேற்கொள்வதையும் காண முடிகின்றது. (க-500)



## அனுமதி கிடைக்காததால் தரிக்க மறுக்கும் பஸ்கள்

அக்கராயன், ஒக்.25
துணுக்காயிலிருந்து பயணிக்கும் பஸ் அக்கராயன் பகுதியில் சில நிமிடங்கள் தரித்துச் செல்வதற்கான அனுமதி இன்னமும் கிடைக்க பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.
துணுக்காய் முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய பகுதியாகும். அதேவேளை அக்கராயன் கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய பகுதியாகும்.
அக்கராயன் பகுதியில் துணுக்காய் பஸ்கள் தரித்து நிற்பதால் தனியார் பஸ் சங்கத்தினரின் நடைமுறைகளில் சிக்கல் நிலவுகிறது.
இந்த நிலையில் கிளிநொச்சி அரச அதிபருக்கு இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களுக்கு இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை.
அரச அதிபரின் அனுமதி கிடைத்ததும் துணுக்காயிலிருந்து பயணிக்கும் பஸ்கள் கிளிநொச்சி வழியாக யாழ்ப்பாணம் சென்றடையும் சூழ்நிலை உருவாகுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)




## சல்லி ஏற்றும் டிப்பர்களால் பாதிக்கப்படும் பொதுமக்கள்

முல்லைத்தீவு, ஒக்.25
ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதியில் கல் ஏற்றிச் செல்லும் டிப்பர் வாகனங்களால் மக்கள் பல்வேறு பாதிப்புக்களைஎதிர்கொண்டுவருகின்றனர்.
இந்த வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படும் சிறு சல்லிக் கற்கள் பின் கதவின் வழியாக வீதியில் சிதறுவதால் மக்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் தூசியும் எழுவதால் சுகாதாரப் பாதிப்புக்களும் உண்டாகின்றன.
கடந்த வாரம் ஒரு டிப்பர் வாகனம் கற்கள் சிதறிவிழும் நிலையில் சென்றதால் அவ்வேளையில் வீதியில் பயணித்த மக்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டதுடன், சிறு காயங்களுக்கும் உள்ளாகினர்.
எனவே, வாகனங்களில் கல்லை ஏற்றிச் செல்பவர் கள் அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற் கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## பண்டாரவன்னியன் நினைவு தினத்தில் வவுனியாவில் சிறப்பு நிகழ்வுகள்

வவுனியா, ஒக்.25
மாவீரன் பண்டார வன்னியனின் நினைவு நாள் நிகழ்வை நகரசபையும், பண்டாரவன்னியன் விழாக் குழுவும் இணைந்து நடத்தவுள்ளன.
எதிர்வரும் 31 ஆம் திகதி நா.சேனாதிராசா தலைமையில் வவுனியா நகரசபையின் கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.
காலை 8.30 மணியளவில் பண்டார வன்னியனின் உருவச் சிலையடியில் ஒன்றுகூடல் இடம்பெற்று, சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்படும் நிகழ்வு இடம்பெறும்.
அதன் பின்னர் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் பண்டார வன்னியனின் கொடிக்கீதம் இசைக்கப்பட்டு கொடியேற்றி வைக்கப்படும்.
இதைத் தொடர்ந்து நிகத்திகநிகேதன நுண்கலை மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெறும்.
தொடர்ந்து பண்டாரவன்னியனின் நினைவுப் பேருரை, நாடகம், கவிதை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம், முன்னாள் அரச அதிபர் ரி.லங்காநேசன் ஆகியோர் கலந்துகொள்வர். மேலும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-402)



மக்கள் மீள்குடியமர்ந்த நிலையிலும் புனரமைக்கப் படாது பயன்படுத்த இயலாத நிலையில் காட்சியளிக்கும் நெடுங்கேணி சனசமூக நிலையக் கட்டடம். (க-435)

## இந்த வீதியில் மக்கள் பயணிக்க முடியுமா?

நெடுங்கேணி, ஒக். 25
நெடுங்கேணி முருகன் கோயிலுக்கு அருகாகச் செல்லும் வீதி கடந்த ஆண்டு பெய்த கடும் மழை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இந்த வீதி இதுவரைக்கும் புனரமைக்கப்படாததால் வாகனங்கள் இந்த வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ளதால் இந்த வீதியூடாகப் பயணிப்பதில் பாடசாலை மாணவர்கள் உட்பட பயணிகள் பலரும் கடுமையான சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி, இந்த வீதியை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-435)



## தீர்வைப் பெறக்கூடிய காலத்தின் அத்திபாரமே மாகாண சபையின் வெற்றி

### வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

சுயாதீனமாகச் சிந்தித்து எமக்கான தீர்வைப் பெறக்கூடிய காலத்தின் அத்திபாரம் தான் மாகாண சபையின் வெற்றி- இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சபை சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.
வவுனியாவில் நேற்று முன் தினம் சுகாதார சேவைகள் பணிமனைக்குச் சென்று அங்குள்ள உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தொடர்ந்து அவர் அங்கு தெரிவித்ததாவது-
போர், இயற்கை அழிவு காரணமாக எமது மக்கள் பல துன்பங்களை எதிர்கொண்டனர்.



கடந்த கால வரலாற்று இழப்புக்களையும் தியாகங்களையும் நாம் மறந்துவிடமுடியாது. மக்களின் தேவைகளை இனம் காண்போம்.

அதன்போது அவர்களுக்கு உதவும் பொருட்டு நான் குறைந்த வளங்களுடன் பணியாற்றினேன். அரசியல் காரணங்களால் சில வேலைகளை நிறைவேற்ற முடியாது சங்கடப்பட்டேன். அப்போது பல நிர்வாகச் சிக்கல்கள் எழுந்தன.
சில பிரச்சினைகளை அரசியல்வாதியாக மாறினால்தான் தீர்க்க முடியுமென நான் நினைத்தேன். இன்று அவ்வாறு ஆகியுமுள்ளேன். எமது முகாமைத்துவப் பிரச்சினைகளுக்கு இடையூறாக இருப்பவர்களை முதலில் எதிர்கொள்வேன்.
கடந்த கால வரலாற்று இழப்புக்களையும் தியாகங்களையும் நாம் மறந்துவிடமுடி யாது. மக்களின் தேவைகளை இனம் காண்போம். வவுனியாவில் எமது அமைச்சின் உப அலுவலகத்தையும் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவில் இணைப்புக் காரியாலயங் களையும் அமைக்கத் தீர் மானித்துள்ளேன் என்று மேலும் அவர் தெரிவித்தார்.
வடமாகாண சுகாதார அமைச்சர் பதவியை மருத்துவர் ப.சத்திய லிங்கம் ஏற்றுக் கொண்டதைக் கௌரவிக்கும் முகமாக நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் அணிவகுப்பு மரியாதையுடன் சுகாதார சேவைகள் பணிமனைக்கு அவர் அழைத்து வரப்பட்டதுடன் அங்குள்ள மண்டபமொன்றில் கலந்துரையாடல் நிகழ்வும் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.மகேந் திரன், தாய் சேய் நல வைத்திய அதிகாரி தா.ஜெயதரன், தொற்றா நோய் வைத்திய அதிகாரி எஸ். சுரேந்திரன், வவுனியா நகர சபைச் செயலாளரும் முன்னாள் சுகாதார சேவைகள் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தருமாகிய க.சத்தியசீலன் மற்றும் தாதியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அம்பாறை. அறுகம்பே பிரதேசத்தில் சுற்றுலாத்துறை தகவல் மையம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றபோது. கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அடிக்கல்லை நட்டு வைத்தார். நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம், மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நசீர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இடமாற்றச் சபையிலும் அரசியல்கட்சிப் பிரதிநிதி

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு. ஒக்.25

மட்டக்களப்பு. கல்குடா கல்வி வலய ஆசிரியர் இடமாற்றச் சபையில் சுற்றறிக்கைக்கு முரணான வகையில் அரசியல் கட்சி யொன்றின் பிரதிநிதி அங்கம் வகிக்கின்றார் என்று ஆசிரியர்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

**கல்குடா கல்வி வலய இடமாற்றச் சபையில் அரசியல் கட்சியின் பிரதிநிதி அங்கம் வகிப்பது வலயத்தில் நிலவும் அரசியல் தலையீட்டை எடுத்துக் காட்டுகிறது.**

இதனைக் கண்டித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக் களப்பு கிளை செயலர் பி.உதய ரூபன் வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- கல்குடா கல்வி வலய இட மாற்றச் சபையில் நாடாளு மன்ற தேர்தல் வேட்பாள ரும். தேசிய அரசியல் கட்சியொன் றின் பிரதித் தலைவரின் பிரதிநிதியுமான அதிபர் ஒருவர் அங்கம் வகிக்கின்றார். கல்குடா கல்வி வலயத்துக் கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றச் சபை அண்மை யில் கூடியது.

இந்த இடமாற்றச் சபையில் 2010 ஆம் ஆண்டு நடை பெற்ற நாடாளுமன்ற தேர்த லில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரொருவரின் பிரதிநிதியுமான பாடசாலை அதிபர் ஒருவர் அங்கம் வகித்து வருகின்றார்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்ற றிக்கைக்கு முரணாக இந்தப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். இந்தச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் நம்பகத் தன்மை குறித்து எமது சங் கம் கவலையடைகிறது.

இதனால் இந்தப் பிரதிநிதி. அதிபர் சேவையைச் சேர்ந்த வர். அவர் முறையான விடு விப்பின்றி முழுநேர அரசி யல் நடவடிக்கையில் ஈடுபடு வது தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளருடனான சந்திப்பின் போது எமது சங்கம் சுட்டிக் காட்டியிருந்தது.

கல்குடா கல்வி வலய இட மாற்றச் சபையில் இந்தப் பிரதிநிதி அங்கம் வகிப்பது வலயத்தில் நிலவும் அரசியல் தலையீட்டை எடுத்துக் காட் டுகிறது. அத்தோடு. பொதுச் சேவை ஆணைக் குழுவின் இடமாற்றம் தொடர்பான கட்டளைக்கும் அது முரணா னதாகும்.-என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

# மது விற்ற மூவருக்கு அபராதம்

அம்பாறை. ஒக்.25

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த மூவருக்கு 27,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர்களை அம்பாறை மாவட்ட நீதி மன்றத்தில் பொலிஸார் முன் னிலைப் படுத்தியபோதே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, மடவலந்த, மாந்தோட்டம் ஆகிய பிரதே சங்களில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த 3 நபர்களையும் தமண பொலி ஸார் கைதுசெய்து நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தியிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ச)

# ஊருக்குள் ஊடுருவும் யானைகளால் பாதிப்பு

ஏறாவூர், ஒக்.25

மட்டக்களப்பு. செங்கலடி. ஏறா வூர் கிராமங்களுக்குள் காட்டு யானைகள் ஊடுருவி. பயிர் களை நாசம் செய்து வரு கின்றன என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



காட்டு யானைகள் கடந்த வாரம் ஏறாவூர், கறுப்புப் பாலப் பகுதியில் உள் நுழைந்த போது அவற்றை வனத் திணைக்கள அதி காரிகள் விரட்டியடித்திருந்த னர்.

ஆனால் அதன் பின்னரும் தினமும் 5 இற்கு மேற்பட்ட யானைகள் அப்பகுதிக்குள் வருகின்றன என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். அதனால் செங்கலடி மற்றும் ஏறாவூர் நகரின் எல்லைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த வாரம் பல திசைகளிலி ருந்தும் வெடிகளைக் கொளுத்தி யானைகளை விரட்டியடித்த வனத் திணைக் கள அதிகாரிகள், தற்போது இந்தப் பகுதிக ளுக்கு வந்து யானைகளை விரட்ட நட வடிக்கை ஏதும் எடுக்க வில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர். (ச)

# குடும்பத் தகராறு காவு கொண்டது உயிரை

மட்டக்களப்பு, ஒக்.25

ஏறாவூர் பொலிஸ் பிரிவி லுள்ள தேவாபுரத்தில் புதன் கிழமை மாலை இடம்பெற்ற குடும்பத் தகராறொன்றில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தேவாபுரம் பத்தினியம்மன் கோயில் வீதியில் வசித்து வந்த நத்தேலகே நெல்சன் கோசல (வயது-32) என்ப வரே இவ்வாறு கொல்லப் பட்டவர் ஆவார்.

குடும்பத்துக்குள் ஏற்பட்ட வாய்த் தகராறையடுத்து உறவினர்களால் தனது கணவர் தாக்கப்பட்டதன் காரணமாக உயிரிழந்தார் என்று அவரது மனைவி விஜேந்தினி பொலிஸ் முறைப் பாட்டில் தெரிவித்துள்ளார்.

தாக்கப்பட்ட நபரை உடன டியாக சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் சேர்ப் பித்த போதும். அவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந் துள்ளார் என்றும் அவர் தெரி வித்தார். சடலம் செங்கலடிப் பிரதேச வைத்திய சாலையில் உடற்கூற்று பரிசோதனைக் காக வைக்கப்பட்டுள்ளது. (ச)

# நிதி உதவி வழங்கினார் யோகேஸ்வரன் எம்.பி.



மட்டக்களப்பு. ஒக்.25

மட்டக்களப்பு,வாழைச்சேனை பிரதேசத்தில் கஷ்டப் பிரதேச பாடசாலைகளிலிருந்து தோற்றி ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் 5000 ரூபா பண உதவியை வழங்கியுள்ளார்.

இந்தப் பண உதவியை வாழைச் சேனை, சுங்காங்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசா லையில் கல்வி பயிலும் மாண வனுக்கும். மீராவோடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை யில் கல்வி பயிலும் மாணவனுக்கும் அவர் வழங்கியுள்ளார். இரண்டு பாடசாலைகளுக்கும் அவர் நேரடியாகச் சென்று இந்த உதவிகளை வழங்கி மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள். அதிபர் ஆகியோருக்கு பாராட்டுத் தெரிவித்தார். (ச)

# இளைஞரைக் காணவில்லை



மட்டக்களப்பு, ஒக்.25

மட்டக்களப்பு. களுவாஞ்சிக் குடி பிரதேச செயலகத்துக் குட்பட்ட பெரியகல்லாறு கிரா மத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று பெற்றோர் களுவாஞ் சிக்குடி பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பிரதே சத்தின் பெரியகல்லாறு. முத லாம் குறிச்சி பிள்ளையார் கோயில் வீதியைச் சேர்ந்த வடிவேல் ருவேந்தன் (வயது-17) என்ற இளை ஞரே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

இவர் தமது வீட்டிலிருந்த வேளையில் கடந்த 20 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என்று பெற் றோர் பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளனர். (ச)

# வர்த்தகக் கண்காட்சி சம்மாந்துறையில்

மட்டக்களப்பு. ஒக்.25

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் 2013 ஆம் வருடத் துக்கான அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்க ளுக்கான சமுர்த்தி உற்பத்தி வர்த்தகக் கண்காட்சியும். விற்பனையும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சம்மாந்துறை அல்மா ஜான் மகளிர் கல் லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளன.

சம்மாந்துறைப் பிரதேச செயலர் ஏ.மன்சூர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில். அம்பாறை மாவட்டத்தின் அமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர் கள், பிரதேச சபைகளின் தலைவர்கள். மாவட்ட செயலர்கள் உட்படப் பலர் கலந்து கொள்வர். (ச)

# கட்டணம் செலுத்தப்படாத வீடுகளுக்கு மின் துண்டிப்பு

மட்டக்களப்பு, ஒக்.25

மட்டக்களப்பு. காத்தான்குடி பிரதேசத்தில் வீட்டு உரிமை யாளர்கள் மின்கட்டணம் செலுத்தத் தவறியதால் 32 வீடுகளுக்கான மின் விநி யோகம் புதன்கிழமையிலி ருந்து துண்டிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் காத்தான்குடி பிர தேச மின் அத்தியட்சகர் எம்.ஐ.எம். நௌபர் தெரிவித் தார்.

காத்தான்குடி, ராசா ஆலிம் வீதி மற்றும் அதை அண்டிய குறுக்கு வீதிகளிலுள்ள 32 வீடுகளுக்கான மின்விநி யோகமே இவ்வாறு துண் டிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

மின்சாரக் கட்டணப் பட்டியல் அனுப்பப்பட்டு ஒரு மாதத்துக் குள் அதை செலுத்தத் தவறி யவர்கள் மீது இலங்கை மின் சார சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு மின்சாரம் துண் டிக்கப்பட்டுள்ள வீடுகளின் உரிமையாளர்கள் தமது மின் கட்டணப் பட்டியலி லுள்ள தொகையை முழுமை யாகச் செலுத்தினால் அவர் களுக்கான மின்சாரம் மீள வழங்கப்ப டும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்கள் மின் கட் டணப் பட்டியலை வழங்க வரும்போது நிலுவையில் லாமல் மின் கட்டணம் செலுத்தப்பட்டிருக்க வேண் டும் என்றும் அவர் கூறி னார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசினோவைக் கட்டுப்படுத்த 'ஷரியா' சட்டமே சரியானது

## அமைச்சர் யாப்பா வலியுறுத்து

கசினோ, விபசாரம் மற்றும் போதைப் பொருள் விற்பனை என்பன நாட்டில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் வர்த்தகங்களாக இருக்கின்றன எனவும், இலங்கையில் ஷரியா சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மட்டுமே அவற்றை தடுத்து நிறுத்த முடியும் எனவும் விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு இலங்கையில் கசினோ, விபசாரம் மற்றும் போதைப் பொருள் விற்பனை என்பன பெருகியுள்ளன.

இவற்றை 100 வீதம் தடுத்து நிறுத்த மத்திய கிழக்கு நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் ஷரியா சட்டமே சரியானது. இல்லாவிட்டால் அவற்றை முற்றாக தடுத்து நிறுத்த முடி யாது.

கசினோ வர்த்தகத்தை இலங்கையில் ஊக்குவிக்க அரசு விசேடமாக எதனையும் செய்யவில்லை. அங்கங்கே இருக்கும் கசினோ வர்த்தகத்தை ஒரு இடத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையே அரசு எடுத்துள்ளது.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே இலங்கைக்கு கசினோ சூதாட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களைத் தவிர அரசு புதிதாக எந்த அனுமதிப்பத்திரங்களையும் வழங்கவில்லை - என்றார்.

# கடலில் மூழ்கிய மாணவனை தேடும் பணி

புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி, இலந்தையடிப் பிரதேசத்திலுள்ள கடலில் நீராடிக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளான்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை தனது நண்பர்களுடன் சேர்ந்து கடலில் மேற்படி மாணவன் நீராடிக் கொண்டிருந்த வேளையிலேயே நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளான் என்று கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நுரைச்சோலை பகுதியைச் சேர்ந்த தரம் 10 இல் கல்வி கற்கும் 16 வயதுடைய மாணவன் ஒருவனே இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளான்.

நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ள இம்மாணவனைத் தேடும் பணிகள் இடம்பெறுகின்றன.

# கொழும்பு மாநாட்டுக்கு வருவார் மலேசியப் பிரதமர்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்களின் மாநாட் டில் மலேசியா பங்கேற்கும் என உறுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியா சார்பில் மாநாட்டில் பிரதமர் நஜிப் டன் ரசாக் கலந்து கொள்வார் என மலேசிய வெளிவிவகார செயலக தென்னாசிய பிரிவு உதவி செயலாளர் மசிதா அஹமட் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நவம்பர் 15ம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் மனித உரிமைகள் மீறல் நிலையை கருத்திற் கொண்டு மலேசியா மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என பல அமைப்புக்களாலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல் புரியப்பட்டுள்ளதால் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கும்படி மலேசிய பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், மாநாட்டை மலேசிய பிரதமர் புறக்கணிக்காது அதில் கலந்துகொள்வார் என்று மலேசிய வெளிவிவகார செயலகம் அறிவித்துள்ளது.



தெரிணியகலை பெனெல்ல கிராமத்திற்கு 1 கோடி 43 இலட்சம் ரூபா செலவில் மின்சாரம் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பிரதியமைச்சர் எச். ஆர்.மித்திர பால மின்சார விநியோகத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் சப்ரகமுவ மாகாணசபை உறுப்பினர் துஸ்மன்ன மித்தபால பிரதேச சபை தமிழ் உறுப்பினர் கே.எஸ். ராஜாஆகியோரும் கலந்து கொண்டனர். (படம் தெரனிகலை நிருபர்)

# வயோதிபப் பெண்ணை அடித்துக் கொல்ல முயன்றவருக்கு சிறை

தனது பிறந்த தினத்தில் கோவிலுக்கு சென்றுகொண்டிருந்த வயோதிபப் பெண் (வயது 74) ஒருவரை மண்வாரியால் அடித்துக் கொல்ல முயன்றாரென குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத் தண்டனையை கொழும்பு மேல் நீதி மன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கியுள்ளது.

களனி, வெளல்துவ தேசிய வீடமைப்பு திட்டத்தை சேர்ந்த ஜோர்ஜ் கெஹான் என்பவர் சோம சமரதுங்க என்ற வயோதிப் பெண்ணை தலையில் தாக்கிக் கொலை செய்ய முயன்றார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

குற்றத்தை சந்தேகநபர் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவருக்கு 85 ஆயிரம் ரூபா நட்டஈடும், 25 ஆயிரம் ரூபா தண்டமும் செலுத்த வேண்டுமென நீதவான் பணித்துள்ளார்.

# 53 நாடுகளை ஐக்கியப்படுத்த ஜனாதிபதி மஹிந்த நடவடிக்கை

## சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் பெருமிதம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டை ஐக்கியப்படுத்தியதுபோன்று தற்போது 53 நாடுகளை ஐக்கியப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார் என்று சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 53 நாடுகளை ஐக்கியப்படுத்த நடவடிக்கை எடுத்து வரும் வேளையில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தனது கட்சியிலுள்ள கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரைக் கூட தன்வசம் இணைத்துக் கொள்ள முடியாது தவித்து வருகிறார்.

உண்மையான தலைவர் ஒருவர் பல்வேறு அணிகளை தன்வசம் அரவணைத்து செல்ல வேண்டுமே அன்றி பிளவுபடுத்தக்கூடாது.

டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, ஜோன் கொத்தலாவல, ஜே.ஆர்.ஜயவர்தன, ஆர். பிரேமதாச போன்ற மாபெரும் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை வழிநடத்தினர். எனினும், தற்போது அந்தக் கட்சி வலுவிழந்த நிலையில் அதன் தலைவராக ரணில் விக்ரமசிங்க இருந்து வருகின்றார் - என்றார்.

# 12 மணித்தியால நீர்வெட்டு

இன்றிரவு 8 மணி முதல் நாளை காலை 8 மணிவரை பிரதான நீர்க்குழாய்களில் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் இன்றிரவு (25.ஆம் திகதி) 8 மணி முதல் நாளை (26ஆம் திகதி) காலை 8 மணிவரையிலான 12 மணித்தியால நீர்வெட்டு நடைமுறையில் இருக்குமென நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு ஹைலெவல் பாதையில் கிருலப்பனை சந்தி தொடக்கம் தும்முல்ல சந்தி வரையும் உள்ள இடை இணைப்புகள், டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை, காலி வீதியில் டபிள்யூ.ஏ. சில்வா மாவத்தை சந்தியிலிருந்து பம்பலப்பிட்டி சந்தி வரையுள்ள இடை இணைப்புகள், இராஜகிரிய, வெலிக்கடை, நாவல, கொஸ்வத்தை, மொறகஸ்முல்ல, மாதின்னாகொட ஆகிய பிரதேசங்களிலேயே இந்த 12 மணித்தியால நீர்வெட்டு நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கொட்டாவ தர்மபால வித்தியாலயத்தின் அதிபர், உப அதிபர்கள் ஆசிரியர்கள் மீது தாக்குதல்

## பாடசாலையின் ஆரம்பப் பிரிவை இடமாற்றம் செய்தமைக்கு எதிர்ப்பாம்

கொட்டாவ, தர்மபால வித்தியாலயத்துக்குள் நேற்றுமுன்தினம் பகல் 12 மணியளவில் அத்துமீறி உட்புகுந்த நால் வர் வித்தியாலயத்தின் அதிபர், இரு உப அதிபர்கள் மற்றும் இரு ஆசிரியர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

வித்தியாலய அதிபர் அங்கு இயங்கிவந்த ஆரம்பப் பிரிவை வேறு இடத்துக்கு மாற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் யத்தெனிகெதர யசரத்ன, உப அதிபர் வீ.சந்திரசிரி, ஆரம்பப் பிரிவின் அதிபர் யாப்பா பண்டார, ஆசிரியரான ஜனக குமார, ஆசிரியையான அனுலா விக்கிரம ஆகிய ஐவருமே இத்தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் அனைவரும் தங்கள் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

தங்களை இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டே இந்த நால்வரும் பாடசாலைக்குள் நுழைந்துள்ளனர் எனவும் அவர்களை அடையாளம் காட்டமுடியுமெனவும் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் கூறியுள்ளனர். பிந்திக் கிடைத்த செய்தியின்படி சந்தேக நபர்களில் மூவர் சம்பவதினம் மாலை கொட்டாவ பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் மேலும் நால்வரைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர்.

# 800 கிராம் தங்க பிஸ்கட் கடத்திய இலங்கையர் சென்னையில் கைது

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தங்கம் கடத்திச் சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியைச் சேர்ந்த முகமது நவ்காஸ் (வயது 40) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கொழும்பில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை சென்னைக்குச் சென்ற விமானத்தின் பயணிகள் யாவரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே முகமது நவாஸின் பயணப் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 800 கிராம் நிறையுடைய தங்க பிஸ்கட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றின் பெறுமதி 25 இலட்சம் இந்திய ரூபா எனத் தெரியவந்துள்ளது.

# வைத்திய உணவுச் செலவு 2014 இல் 26 கோடி ஒதுக்கீடு

அடுத்த வருடம் அரச வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உணவு வழங்குவதற்காக 26 கோடியே 14 இலட்சத்து ஆயிரத்து 657 ரூபாவை ஒதுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் ஒரு வருடத்துக்கான செலவுக்கே இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காய்கறிகள், பழவகைகள், உலர் உணவுகள், பேக்கரி தயாரிப்புகள், உடனடி ஆகாரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக 25 கோடியே 54 இலட்சத்து 67 ஆயிரத்து 772 ரூபாவுக்கு (வற் வரி நீங்கலாக) முட்டை மற்றும் இறைச்சியை வழங்குவதற்காக 59 இலட்சத்து 93 ஆயிரத்து 880 ரூபாவுக்குமான (வெட் நீங்கலாக) இரு விலை மனுக்களை (டெண்டர்) இரண்டு நிறுவனங்களுக்கு வழங்க சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அனுமதியளித்துள்ளார்.

# விபசார விடுதி முற்றுகை 8 பெண்கள் மாட்டினர்

கொழும்பு, கொள்ளுபிட்டி - டின்ஸ்டன் பிரதேசத்தில் ஆயுர்வேத மத்திய நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

மேல் மாகாண குற்றத் தடுப்பு பிரிவினர் நேற்றுமுன்தினம் மாலை இந்த நிலையத்தைச் சுற்றிவளைத்தனர்.

இதன்போது குறித்த நிலையத்தில் விபசாரத் தொழிலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 7 பெண்களும் நிலையத்தின் உரிமையாளரான பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்கள் பத்தரமுல்ல, கொட்டுகொட, ஹட்டன், மதவாச்சி, காலி, மீகொட, நாராஹென்பிட்ட, ஜா-எல பகுதிகளைச் சேர்ந்த 29 தொடக்கம் 54 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டின் வளர்ச்சி நோக்கி வடக்கு மக்கள் உழைப்பதற்கு....

இன்று வெள்ளிக்கிழமை, ஒக்ரோபர் இருபத்தைந்தாம் திகதி, வடக்கின் முதலாவது மாகாண சபையின் முதலாவது (கன்னி) அமர்வு நடைபெறுகிறது.

அந்த அமர்வுக்கு முன்னதாக, சபைக்கு முன்னோட்டமாக, அரசாங்கத்தின் தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முக்கிய தகவல் ஒன்றைக் கொழும்பில் நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தார்.

வடக்கில் சட்டம் ஒழுங்கை முதலமைச்சரே நிலைநாட்ட வேண்டும். அதற்கான முழுப்பொறுப்பும் முதலமைச்சருக்கே உண்டு--

விழிப்புக் குழுக்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைத்து, பொலிஸாருக்கு உதவுவதன் மூலம், வடக்கில் இடம்பெறும் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க இயலும்--

தற்போது தமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, முதலமைச்சர் மக்களுக்குச் சேவை ஆற்ற வேண்டும்-- என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் புத்திமதி நல்கி உள்ளார்.

வடக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். பிரதேச சபைகள் மற்றும் மாகாண சபைக்கும் கூட்டமைப்பினர் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்-

அவர்கள் இப்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை தக்கவாறு பயன்படுத்தித் தமது மக்களுக்கு சேவை ஆற்ற வேண்டும்-

வீண் குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது-என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்புச் செயலாளர் உதிர்த்த மேற்சொன்ன கருத்துக்கள், கவனத்தில் கொள்ளப்பட வேண்டியன. அவற்றுள், வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறு எவரும் கோர முடியாது என்றும் அவர் அரசின் உள்ளார்ந்த நோக்கத்தை வெளிப்படுத்தி உள்ளமை, கூர்ந்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள் என்பதால், வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்கான அங்கீகாரத்தை மக்கள் வழங்கினார்கள் என்று கொள்ள முடியாது. கருதக் கூடாது--

வடக்கில் இராணுவத்தினர் நிலை கொண்டிருக்க வேண்டும் என்பதே எண்பது சதவீதமான மக்களின் கருத்தாக உள்ளது-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் (U.N.H.C.R) மற்றும் மனிதாபிமான விவகாரங்கள் இணைப்பு அலுவலகம் (O.C.H.A) ஆகியவற்றின் அறிக்கைகள் அதனை ஊர்ஜிதப்படுத்துகின்றன -

அதாவது, வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் மக்கள் கூறவில்லை என்று பாதுகாப்புச் செயலர் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு மக்களின் நிலைப்பாடு மேற்கண்டவாறு உள்ளதாக அவர் தெரிவித்துள்ள போதிலும், வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளர் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் தெரிவித்த கீழ்க் கண்ட கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியனவாகும்:

- மக்கள் வழங்கும் ஆணையைக் கொண்டு, இராணுவத்தை வடக்கில் இருந்து படிப்படியாக வெளியேற்றுவோம். அதற்கான பலம் மக்களிடமே உள்ளது.
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு (கட்சிக்குக்) அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்திருப்பது சுயாட்சிக்கான வாக்குகளாக அமைந்திருக்கின்றன.
- அதேவேளையில் வட பகுதியில் இருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர்.

இத்தகைய ஒரு நிலையில் இராணுவத்தை அகற்றுமாறு மக்கள்-வாக்காளர்கள்-தொடர்ந்து அழுத்தம் கொடுக்கமாட்டார்கள் என்று கொள்வதற்கில்லையே...!

வடக்கு மக்களின் மனநிலையை முதலமைச்சர் வெளிப்படுத்தி உள்ள நிலையில், வடக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தை குறிப்பிடத்தக்க வீதத்தில் குறைப்பதற்கு அரசு மனங்கொள்வது வரவேற்கத்தக்க செயற்பாடாக அமையும்.

அதனை அனைத்துலக நாடுகளும் வரவேற்கும். வடக்கு-தெற்கு மக்களிடையே நல்லிணக்கம் உண்டாகவும், நாடு வளர்ச்சி கண்டு முன்னேறவும் வழி கிடைக்கும். நல்லவை செய்யின் நல்லனவே விளையும்.

# காணாமற் போனோர் துயரம் முடிவிலியாக தொடர்கிறது



நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போதும் இங்கு மனித உரிமைச் சூழலானது மிகவும் மோசமடைந்துள்ளதாகவும், தொடர்ந்தும் இங்கு கடத்தல்கள் இடம் பெறுவதாகவும், இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதாகவும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஈராக்குக்கு அடுத்ததாக காணாமற் போனவர்களின் எண் ணிக்கை மிகவும் அதிகமாக உள்ள நாடாக இலங்கை உள்ளது.

ஈராக்குக்கு அடுத்ததாக காணாமற் போனவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள நாடாக இலங்கை உள்ளது. போர் நிறைவடைந்து நான்காண்டுகள் கடந்தும் இங்கு வெள்ளைவான் கடத்தல்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. காணாமல் போனோருக்கான முடிவு இன்னும் எட்டப்படவில்லை.

"நீங்கள் யாழ்ப்பாணத்தை விட்டு லலித்தை வேறு இடத்திற்கு அனுப்பப் போகிறீர்களா அல்லது நாங்கள் அவனைக் கடத்த வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்களா?" என லலித்தினுடைய அப்பாவான ஆறுமுகம் வீரராஜா 2011 நவம்பரில் தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டார். தொலைபேசி இலக்கம் புதிதாகவும் இருந்தது. "நான் ஒரு தொழிலாளியாக உள்ளேன். தயவு செய்து எனது மகனைக் கடத்த வேண்டாம்" என லலித்தின் தந்தையார் இறைஞ்சினார்.

அவரது வேண்டுகோள் வீணாகியது. தொலைபேசி மிரட்டல் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர், 28 வயதான தமிழரும், மனித உரிமைச் செயற்பாட்டாளருமான லலித் கடத்தப்பட்டார். ஆயுதம் தரித்த சிலர் லலித்தையும் அவரது நண்பர் ஒருவரையும் யாழ்ப்பாணத்தில் வைத்து வெள்ளை வான் ஒன்றில் கடத்திச் சென்றனர். இந்தக் கடத்தல் சம்பவம் பட்டப்பகலில் இடம்பெற்றது. இந்தக் கடத்தலுக்கு பலர் சாட்சியாக உள்ளனர். ஆனால் லலித்துக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை அறி யப்படவில்லை.

"அவன் எனது ஒரேயொரு மகன். இவனைப் பற்றி நினைக்கும் போது சிலவேளைகளில் எனக்குப் புல்லரிக்கும். இதை எவ்வாறு சமாளிக்கப் போகிறேன் என்பது எனக்குத் தெரியாது" என கடத்தப்பட்ட லலித் என்கின்ற மனித உரிமைச் செயற்பாட்டாளரின் 54 வயதான தந்தையார் வீரராஜா கூறினார்.

### போர் நிறைவடைந்தும் தொடரும் அவலம்

தனது மகனுக்கு என்ன நடந்தது என்பதை அறியத் தருமாறு அழுத் தம் கொடுத்ததை அடுத்து கடந்த நவம்பரில் வீரராஜாவைக் கடத்துவதற்கான முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதிலிருந்து இவர் தப்பித்துவிட்டார்.

அடுத்த மாதம் , இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப் பின் அரச தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாட்டில் பங்கெடுப்பதற்காக பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் மற்றும் பல உலக நாட்டுத் தலைவர்கள் இலங்கைக்கு வரவுள்ளமையானது தனது ஆட்சிக்கு நற்சான்றைப் பெற்றுத் தரும் என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நம்புகிறார்.

எதுஎவ்வாறிருப்பினும், இலங்கையில் 100,000 வரையான உயிர்களைக் காவுகொண்ட போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போதும் இங்கு மனித உரிமைச் சூழலானது மிகவும் மோசமடைந்துள்ளதாகவும், தொடர்ந்தும் இங்கு கடத்தல்கள் இடம்பெறுவதாகவும், இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதாகவும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஈராக்குக்கு அடுத்ததாக காணாமற் போனவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ள நாடாக இலங்கை உள்ளது.

### ஆட்கடத்தலின் குறியீடு வெள்ளை வான்

இலங்கையில் ஆட்கடத்தலின் குறியீடாக 'வெள்ளை வான்' காணப்படுகிறது. இலங்கை பாதுகாப்புப் படையினருடன் தொடர்புபட்ட கும்பல்களால் வெள்ளை வானில் ஆட்கடத்தல் மேற்கொள்ளப்படுகிறது எனக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒருநாள் 46 வயதான டிமுது அற்றிகலே, கொழும்பிலுள்ள தனது வீட்டுக்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது தனது பின்புறத்தால் தான் இழுக்கப்பட்டு வாய் பொத்தப்பட்டதை தான் உணர்ந்து கொண்டதாக கூறினார். ரி-56 துப்பாக்கிகளுடன் ஆறு அல்லது ஏழு ஆயுததாரிகள் என்னைக் கடத்திச் சென்றனர். அவர்கள் எனது கண்களைக் கட்டிய பின் என்னைத் தாக்கினார்கள். அவர்கள் என்னை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார்கள். தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தனர் என இலங்கையின் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவரும் தற்போது மறைந்து வாழ்பவருமான டிமுது அற்றிகலே குறிப்பிட்டார்.

இவர் நான்கு நாள்கள் வரை கைகளும் கண்களும் கட்டப்பட்டு பாதுகாப்புத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்களால் துன்புறுத்தப்பட்டார். ஆனால் இவர் கடத்தப்பட்ட அதேவேளையில் கடத்தப்பட்ட இவரது நண்பர் இலங்கை -ஆஸ்திரேலியா இரட்டைக் குடியுரிமை பெற்றவர் ஆவார். இதனால் ஆஸ்திரேலியாவிடமிருந்து தம்மை விடுவிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்படும் என இவர் நம்பினார்.

2009இல் போர் முடிவடைந்ததன் பின்னர் இலங்கையில் கடத்தல் சம்பவங்கள் குறைவடைந்தபோதிலும், ஒவ்வொரு மாதமும் குறைந்தது இரண்டு வெள்ளை வான் கடத்தல்கள் இடம்பெறுவதாக மனித உரிமைச் செயற்பாட்டாளரான றுக்கி பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார். இந்த எண்ணிக்கையானது இதைவிட அதிகமாக இருக்கலாம் எனவும், சில ஆள்கடத்தல்கள் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக முறைப்பாடு செய்வதில்லை எனவும் றுக்கி பெர்னாண்டோ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### வடக்கில் அதிக ஆள்கடத்தல் குழுக்கள்

கொழும்பில் குறைந்தது மூன்று வரையான ஆட்கடத்தல் குழுக்கள் செயற்படுவதாகவும், வடக்கில் இந்த எண்ணிக்கை சற்று அதிகமாக உள்ளதாகவும் பிறிதொரு செயற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

ஆள்கடத்தல்களுக்கு இலங்கை அரசு பக்கபலமாக உள்ளது என்கின்ற குற்றச்சாட்டை இது நிராகரித்துள்ளது. ஆட்கடத்தல் தொடர்பான சில வழக்குகளையே இலங்கைப் பொலிஸார் விசாரித்து வருவதாகவும், காணாமற் போனவர்களின் நிலை அறியப்படவில்லை எனவும் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மே 2010இல் வீட்டுக்கு வெளியில் வைத்து தனது இரு மகன்களையும் கடத்தியது தொடர்பில் தான் தொடர்ந்தும் போராடியதாகவும், ஆனால் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை எனவும் 62 வயதான அப்துல் ஹமீட் நூர் நஜீப் தெரிவித்துள்ளார். நான் எனது மகன்மார் தொடர்பாக தகவலை அறிவிதற்காக பொலிஸாரைப் பார்க்கச் சென்றபோது அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். நான் தலைமைப் பொலிஸ் பரிசோதகரை அணுகியபோது 'அவர்களைத் தேடுவதில் காலத்தைச் செலவழிக்க வேண்டாம். அவர்களது ஆத்மாக்களுக்காக பிரார்த்தியுங்கள்' என அவர் பதிலளித்தார் என தனது இரு மகன்மாரை இழந்து தவிக்கும் அப்துல் ஹமீட் நூர் நஜீப் குறிப்பிட்டார். இலங்கையில் காணாமல் போனோருக்கு எப்போதுதான் முடிவு வரும்.



ஆள் கடத்தல் தொடர்பான சில வழக்குகளையே இலங்கைப் பொலிஸார் விசாரித்து வருவதாகவும், காணாமற் போனவர்களின் நிலை அறியப் படவில்லை எனவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

நன்றி-புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்



**தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனின் நேரடிக் கண்கா ணிப்பில் நூற்றுக்கணக்கான சிற்பி கள், பல ஓவியர்களின் கூட்டு உழைப்பில் உருவான முற்றத் தின் சிற்பங்களின் பிரமாண் டம் பிரமிப்பூட்டும் அதே சமயம், மனதின் ஈரத்தைக் கசிய வைக்கின்றன!**

டி.அருள் எழிலன்,
படங்கள்: கே.குணசீலன்

இறுதியாக, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வாழ்ந்த புதுக்குடியிருப்பு பதுங்கு குழியையும் குண்டுவைத்துத் தகர்த்துவிட்டு, அந்த இடத்தில் புத்த விகாரை அமைக்கத் திட்டமிடுகிறது இலங்கை அரசு. 30வருடங்கள் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் அடையாளமாக ஈழ மண்ணில் இப்போது எதுவும் இல்லை.

இந்த நிலையில், ஈழ மண்ணில் பெருகியோடிய குருதியாற்றின் சுவட்டை, தஞ்சையில் பதித்திருக்கிறது 'முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்!' ஈழத் தமிழர்கள் அனுபவித்த போர்க் கொடுமைகள், நினைவு முற்றத்தின் சிற்பங்களாகப் பரந்து விரிந்திருக்கின்றன. ஈழத் தமிழர்களின் வலியை, வேதனையை, கதறலை, ஆக்ரோஷத்தை அச்சு அசலாகப் படியெடுத்திருக்கிறது ஒவ்வொரு சிற்பமும்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனின் நேரடிக் கண்காணிப்பில் நூற்றுக்கணக்கான சிற்பிகள், பல ஓவியர்களின் கூட்டு உழைப்பில் உருவான முற்றத்தின் சிற்பங்களின் பிரமாண்டம் பிரமிப்பூட்டும் அதே சமயம், மனதில் ஈரத்தைக் கசியவைக்கின்றன!

முற்றத்தின் நடுவில், 40 தொன் எடையுள்ள தமிழ்ப் பாவையின் சிற்பப் பீடம். அதன் இரு பக்கங்களிலும் ஈழத்தின் அவலத்தையும், தமிழர்களின் உயிர்த் தியாகத்தையும் கற்சிற்பங்களாக வடித்திருக்கிறார்கள். தமிழ்ப் பாவை சிற்பத்தின் பீடத்தினுள் எட்டிப் பார்த்தால், நமது முகத்தைப் பிரதிபலிக்கிறது முப்பரிமாணக் கண்ணாடி. வெள்ளையர்களை எதிர்த்த தமிழ் மன்னர்கள், மொழிப் போர்த் தியாகிகளின் படங்களோடு விடுதலைப் புலித் தளபதிகளின் படங்களும், அவர்களைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன. முற்றத்தின் அரங்கில் பிரதான மரியாதை, பார்வதி அம்மாளுக்கும் வேலுப்பிள்ளைக்கும்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் உள்ளேயே தங்கியிருந்து வேலைகளைப் பார்வையிடும் பழ.நெடுமாறனிடம் பேசியபோது...

"மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நல்லகண்ணுவும் வைகோவும் இந்த முற்றத்துக்கான அடிக்கல்லை நாட்டிய போது, ஒரே ஒரு நினைவுத் தூண் அமைப்பது மட்டும்தான் நோக்கமாக இருந்தது. ஆனால், தொடர்ந்து பல சந்தர்ப்பங்களில் ஈழத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டதோடு, புலிகளின் வெற்றிச் சின்னங்களையும் அழித்து சிங்கள ராணுவத்தின் சின்னங்களை அங்கே நிறுவிவிட்டார்கள். அதன் பிறகே, ஈழத்தில் நிகழ்ந்த அவலம் ஆவணம் இன்றி மறக்கப்பட்டு விடக்கூடாது என்று இந்தமுற்றத்தை வடிவமைக்கத் தீர்மானித்தோம். இந்தப் பெருங்கனவை நனவாக்க கல் கொடுத்தவர்கள், மண் கொடுத்தவர்கள், மரம் கொடுத்த வர்கள், புகைப்படங்களைச் சேகரித் துக் கொடுத்தவர்கள்... என இது பலரின் மிகப் பெரும் கூட்டுழைப்பு 40 தொன் எடையுள்ள தமிழ்ப் பாவை சிற்பத்தை, 15 அடி மேடையில் ஏற்றி வைத்தோம். இந்த முற்றத்தினுள் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்களுக்கு ஆதாரமாக இருந்தவை ஓவியர் வீரசந்தானம் வரைந்த ஓவியங்கள்தான்!" என்று வீரசந்தானம் பக்கம் கை காட்டுகிறார் பழ. நெடுமாறன்.

"மகாபலிபுரத்தில் இருக்கும் 'அர்ஜுனன் தபசு' போன்ற நீளமான கல்லின் இரண்டு பக்கமும் ஈழ வரலாற்றைப் பதிவுசெய்யும் ஓவியுங்களை கோட்டோவியமாக வரைந்து கொடுத்தேன். ஈழத்தின் தேசியப் பறவை, தேசிய மரம், அந்த மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்ந்திருந்தார்கள் என்பது முதல், யாழ் நூலகம் எரிப்பு, ஜெகன்- குட்டிமணி- தங்கதுரை படுகொலை, வெலிக்கடை சிறை உடைப்பு... என, தமிழர் போராட்ட வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளை வரைந்தேன்.

இன்னொரு பக்கம் இறுதிப் போரில் மக்கள் கொல்லப்பட்ட விதம், ரசாயனக் குண்டுகள் கொத்துக் கொத்தாக உயிரைப் பறித்த விதம்... என சிங்கள ராணுவத்தின் வெறியாட்டத்தையும் ஆவணம் ஆக்கினோம். அந்தக் கோட்டோவியங்களை ஆதாரமாக வைத்து சிற்பங்களை வடிவமைத்தனர். ஈழப் படுகொலைகள் குறித்து உலகம் இன்று வரை மௌனமாக இருக்கிறது. ஆனால், இந்த முள்ளிவாய்க்கால் முற்றம், ஈழப் படுகொலையின் பின்னணியையும் வேதனைக் காட்சிகளையும் தலைமுறைகள் தாண்டியும் மக்களிடம் கொண்டு சேர்க்கும்!" என்கிறார் வீரசந்தானம்.

முற்றத்தில் சிற்பங்களை வடிவமைத்தவர்கள், மாமல்லபுரம் ஸ்தபதி முருகன் குழுவினர்தான். முருகனிடம் பேசியபோது...

"பொதுவாக, சிற்பம் செய்ய கறுப்புக் கல்தான் சிறந்தது. அதிலும் இறுகிய கல் வேண்டும். தமிழகம் முழுவதும் அப்படியான கல் தேடி அலைந்தோம். புதுக்கோட்டையில் அத்திபாரம் அமைக்கப் பயன்படும் வெள்ளைக் கல்லையும், ஊத்துக்குளியில் சிற்பங்களுக்கான கறுப்புக் கல்லையும் தேர்ந்தெடுத்தோம். தமிழ்ப் பாவை சிலையை அமைக்க 55 தொன் எடையுள்ள கல்லை ஊத்துக்குளியில் இருந்து கொண்டு வந்து, சீராக்கி, செதுக்கி முடித்தபோது, அது 40 தொன் எடையோடு நிலை கொண்டது. நூற்றாண்டுகள் பல கடந்தாலும் நிலைத்து நிற்கும் தரத்தோடு உருவாக்கப்பட்டிருக்கின்றன இந்தச் சிற்பங்கள்!' என்கிறார் முருகன்.

நவம்பர் 8, 9, 10ஆம் திகதிகளில் மூன்று நாள் விழாவாக திறப்பு விழா காண இருக்கிறது 'முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்'.

"எந்த அரசியல் சார்பும் இல்லாமல், ஒட்டுமொத்தத் தமிழினத்தின் விழாவாக இதை அரங்கேற்ற இருக்கிறோம். பாரபட்சம் இல்லாமல் அனைவருக்கும் அழைப்பு அனுப்புவோம். ஆனால், ஈழப் படுகொலைகளுக்குத் துணை போன துரோகிகளுக்கு நாங்கள் அழைப்பு அனுப்பவில்லை. ஏனென்றால், இன்னொரு முறை இப்படியான கொலைகள் நடக்காமல் இருக்க, எதிரிகளிடம் மட்டும் அல்ல, துரோகிகளிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது!" என்கிறார் பழ.நெடுமாறன்.

அதை ஆமோதிப்பதுபோல, முற்றத்துச் சிற்பங்களில் அறைந்து மோதுகிறது அனற் காற்று!

# அனுபவக் களஞ்சியத்தின் அழகான பருவம்



**மனித வாழ்வில் உடல் தளர்ச்சியடைந்து இயலாமை என்ற உணர்வுக்குள் இயற்கையால் நிர்ப்பந்திக்கப்பட்ட பருவம் முதுமைப் பருவம். அனுபவக் களஞ்சியத்தை அழகாகக் கொண்ட பருவமும் இதுவே**

வை.சசிகுமார், ஆசிரியர்

ஆரோக்கியமான சமூக நன்நிலை விருத்திக்கு முதியவர்களின் அனுபவப் பகிர்வுகளும் வழிகாட்டுதல்களும் அவசியமாகின்றன. குடும்ப அமைப்புக்களிலும், சமூக நிறுவனங்களிலும், முதியவர்களின் தலைமைத்துவம் கிடைக்கும்போது அவற்றின் செயற்படு இலக்குகள் இலகுவாக எய்தப்படுகின்றன.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி, மனிதர்களது உடலையும் உள்ளத்தையும் நன்றாக வைத்திருப்பதற்குக்கூட நேரம் போதாமல் இருப்பதாகக் கருதப்படும் நிலையில் முதியவர்களை நேசித்துச் செயற்படுவதற்குரிய வாய்ப்பும் குறைந்து வருகின்றது. இந்த நிலை தொடருமானால், எமது சமூகத்தின் வளர்ச்சிக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

முதியவர்களின் உடல் நலமும் உளநலமும் பாதிப்புறும்போது அவர்கள் தனிமையுணர்வில் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள முடியாமல் வாட்டமுறுவதையும், ஏக்கச் சுமைகளை இறக்கி வைக்க முடியாமல் துன்பப்படுவதையும் நாம் உணர்ந்து கொள்வது அவசியம்.

## முதுமையில் வறுமையின்றி வாழ உதவவேண்டும்

முதியவர்கள் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு வறுமை தடையாக அமைகிறது. வறுமைநிலை தொடரும் போது அவர்களது உடலும் உள்ளமும் பலவீனமடைகின்றன. இதனால் அவர்களுக்குரிய உதவிடும் சேவையைப் பரவலாக்கம் செய்யவேண்டும்.

குடும்ப அமைப்புக்களில் அவர்களை இணைத்துக் கருமமாற்றுவதும், அவர்களுடைய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவதும் அத்துடன் அவர்களுக்கு முன்னால் அவர்கள் விரும்பும் கலைப் படைப்புக்களைப் படைத்து உதவும் போதும் அவர்களுக்கு மனமகிழ்வும் ஆறுதலும் ஏற்படலாம்.

முதியவர்களின் முக்கியத்துவத்தையும் அவர்களுக்கு உதவிடும் முறைகளையும் சிறுவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

முதுமைப் [illegible] உதவிக்காக ஏங்கி [illegible] அவர்களது உள்ளம் மௌனத்தால் அவற்றை மறைத்தே வாழ முற்படும். [illegible]களுக்கு உதவுவதில் எம்மிடம் மனவறுமை காணப்படலாகாது. இதனை உணர்ந்து அவர்களுக்கு உதவி செய்து அவர்களை எமது முதுசொத்தாகக் கருதி வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியில் 16 குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி கொடுப்பனவு

பூநகரி, ஒக்.25
பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 15 குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவுகள் மாகாண சேவைகள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 'யுனிசெப்' நிறுவனத்தின் அனுசரணையுடன் தெரிவு செய்யப்பட்ட 15 குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 15 குடும்பங்களுக்கு தலா 36 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.
பின்வரும் பயனாளிகள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகிய வற்றுடன் பிரதேசசெயலகசமூகசேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் அறிவித்துள்ளார்.
ல.மேரி ஜெனோவா- இரணைமாதா நகர், க.யாழினி- இல 65 முக்கொம்பன், நா.நகுலேஸ்வரி-பரமன்கிராய், க.சுதினா- பள்ளிக்குடா, ஏ.மேரி அனஸ்ரின்- வலைப்பாடு, இ.சதாநாயகி- இரணைமாதா நகர், அ.லோகநாதன்- கரியாலைநாகபடுவான், க.ரஜனி- கரியாலை நாகபடுவான், ம.நாகராஜா-பல்லவராயன் கட்டு, இ.றஜிதா-கரியாலை நாகபடுவான், க.புவனேந்திரன்- இரணைமாதா நகர், தே.புனிதராணி- கௌதாரி முனை, பா.கமலராணி- முழங்காவில், டே.மங்களா- பரமன்கிராய், பொ.அலெக்ஸாந்தினி- இரணைமாதா நகர். (வ-9)

# ஜெனிவா மாநாட்டின்போது தீக்குளித்து உயிர் துறப்பேன்

## இலங்கை ஜனாதிபதிக்கு லண்டன் தமிழர் கடிதம்

கொழும்பு, ஒக்.25
திருகோணமலையில் அழிக்கப்பட்ட இந்து சமய அடையாளங்களை மீண்டும் நிலைநிறுத்திப் பழைய நிலைமை பாதுகாக்கப்படாது போனால் 2014 ஆம் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் சபை மாநாட்டின் போது அங்கு சென்று அந்த மாநாட்டின் முன்னிலையில் தமக்குத் தாமே தீயிட்டு கொளுத்திக் கொண்டு உயிரை விடத் தீர்மானித்திருப்பதாக லண்டனில் வாழும் தமிழர் ஒருவர் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் எழுதியுள்ள பகிரங்கக் கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.
அண்மையில் இலங்கைக்கு வந்து திரும்பியுள்ள லண்டன் யோர்க்கவேயில் வாழ்கின்ற கதிர்காமநாதன் என்பவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;
1990 இல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் காரணமாக உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக திருகோணமலையில் இருந்து லண்டனுக்கு வந்தவன் நான். இப்பொழுது இலங்கையில் அமைதி நிலவுவதாகக் கேள்விப்பட்டு என் பெற்றோரைப் பார்க்க கடந்த மாதம் அங்கு வந்தேன்.
வீதிகள் எல்லாம் நன்றாகவே உள்ளன. மக்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். ஆனால் எனது மகிழ்ச்சி வெகுநாள்கள் நீடிக்கவில்லை.
கிண்ணியா வெந்நீர்க் கிணற்றுக்கு ஒருநாள் சென்றேன். முன்னர் அங்கே பிள்ளையார் கோயில் ஒன்று இருந்தது. இறந்துபோகும் உறவினர்களுக்கு ஆத்மசாந்தி அளிப்பதற்காக இந்துக்கள் அங்கு சமயச் சடங்குகளை நிகழ்த்துவதற்கான சமய சுற்றாடல் அங்கு நிலவியது. இரண்டும் அங்கு இப்போது இல்லை. பாரம்பரியமான இந்துக்களின் புனித ஸ்தலம் இப்பொழுது படிப்படியாக பௌத்த ஸ்தலமாக மாற்றப்பட்டுள்ளது. 20 வருடங்களுக்கு முன் நான் அங்கு கண்டவை ஒன்றையும் காணோம். சிறு அடையாளம் கூட இல்லை. ஒரு புத்த பிக்கு அங்கு அடிக்கடி வந்து பணம் சேர்ப்பதில் ஈடுபட்டு வந்திருக்கிறார். அங்கிருந்த அரசாங்க அதிபர் சில்வா தான் இதற்கு ஏற்பாடு செய்திருந்தார் என்று நண்பர் ஒருவர் கூறினார். இவர் ஓய்வு பெற்ற ஓர் இராணுவத் தளபதியாவார். ஒரு தினம் அவர் வெந்நீர் கிணறுகள் இருக்கும் இடத்துக்கு வந்து அங்கிருந்த தமிழ்ப் பெயர்ப் பலகையைத் தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தை பௌத்த பிக்குவைப் பொறுப்பெடுக்கும்படி நியமித்துள்ளார். அன்றிலிருந்து அந்த இடத்தின் சூழல் மாற்றமடையலாயிற்று. இவ்வாறு அங்குள்ள அரச அதிபரும் பௌத்த பிக்குவும் தமிழ் இந்து மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு ஆபத்து விளைவிப்பவர்களாக இருந்துவருகிறார்கள்.
அடுத்தநாள் பிரபலமான கோணேஸ்வரம் ஆலயத்துக்குச் சென்றேன். அங்கு ஏறக்குறைய 50 அசுத்தமான சேரிக்கடைகளைக் கண்டேன். இடத்தின் அழகையும் புனிதத்தையும் அவை கெடுத்துக் கொண்டிருந்தன. இந்தக் கடைகளைச் சிங்களவர்கள் நடத்துவதாக அறிந்தேன். இவர்கள் கோயிலுக்கு அருகிலேயே மது அருந்துகிறார்கள். மாமிசம் புசிக்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் புஞ்சிநிலமே என்ற அமைச்சர்தான் காரணம் என்று அறிந்தேன்.

*திருமலையில் இந்து அடையாளங்களை மீளவும் நிலைநாட்டும்படி ஜனாதிபதியைக் கோருகிறார் லண்டன் வாசியான கதிர்காமநாதன் என்ற தமிழர்.*

தனது சொந்த அரசியல் முன்னேற்றத்துக்காக அவர் இதைச் செய்துள்ளார்.
இவ்வாறான அதிகாரம்மிக்க நபர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ஏழை மக்களின் சமய அடிப்படை உரிமைகளில் தலையிடுவது எங்ஙனம் நியாயமாகும்? இதன்மூலம் புத்த பெருமானின் புனித விழுமியங்களுக்கு இழுக்கு ஏற்படுத்துகிறார்கள்.
பௌத்த புனித தலங்களான தலதா மாளிகை போன்ற இடங்களை இவ்வாறான கடைகளை வைத்து அசுத்தப்படுத்த அனுமதிக்கப்படுமா? இவைகள் இவ்வாறு நடக்க நீங்கள் அனுமதிக்கலாமா?
இந்துக்களின் அடிப்படை சமய உரிமைகள், திட்டமிட்டு மீறப்பட்டிருப்பதற்கான அப்பட்டமான சான்றுகளாகும் திருகோணமலையில் உள்ள நிலைமை.
இந்த நிலையில் இலங்கை மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை 2014 மார்ச் மாதத்துக்கு முன்னர் முறையாகத் தீர்த்து வைக்காது போனால் சர்வதேச விசாரணையொன்றுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அண்மையில் அறிவித்திருப்பதை இலங்கை அரசுக்குநினைவுறுத்தவிரும்புகின்றேன். இவ்வகையில் சமய ரீதியிலான சிறுபான்மையோருக்கெதிரான பாகுபாடுகளும் வன்செயல்களும் அதிகரித்து வருகின்றன என்று அவர் கூறியிருப்பதை நானும் ஏற்றுக் கொள்கின்றேன்.
மேலே குறிப்பிட்ட புனித இடங்களில் இன்றுள்ள அசிங்கமான நிலைமையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாது போனால் நான் ஜெனிவாவுக்குச் சென்று 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சபைக்கு முன் என் உடலில் தீ மூட்டி எரிந்து போவேன். அவ்வாறு ஏற்படும் எனது மரணத்தால் இலங்கை நாட்டுக்கு எதிர் விளைவுகள் ஏற்படலாம். அதற்கான பொறுப்பை இலங்கை ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் -என்றுள்ளது.
தனது கடிதத்தின் பிரதிகளை ஊடகங்களுக்கும் இணையத் தளங்களுக்கும், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அவர் அனுப்பியுள்ளார். (ப)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சொத்துப் பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.



**இடபம்:** வர வேண்டிய பணம் கைக்கு வரும். புதிய நட்பு மலரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் முடங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள்.



**மிதுனம்:** நீங்கள் ஒன்றைப் பேசப்போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். யாரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.



**கடகம்** : எதிர்பார்த்த வேலைகள் தாமதமாக முடியும். முக்கிய கோப்புகளை கையாளும்போது அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்களைத் தவிருங்கள்.



**சிங்கம்:** பிரச்சினைகளுக்கு யதார்த்தமான முடிவுகளை எடுப்பீர்கள். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சி களை அதிகாரி பாராட்டுவார்.



**கன்னி:** புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**நாளை**

ஐப்பசி-09 சனிக்கிழமை 26.10.2013
திதி: ஸப்தமி பி.ப.02.54 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் பி.ப.04.03 வரை
சுபநேரம்: 03.03 - 04.33 வரை
இராகுகாலம்: 09.03 - 10.33 வரை



**துலாம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த அலைச்சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும்.



**விருச்சிகம்:** மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதி மொழியும் வழங்க வேண்டாம். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் விட்டுக்கொடுத்துப்போவது நல்லது.



**தனுசு:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.



**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.



**கும்பம்:** புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.



**மீனம்:** பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். [illegible] சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | | 2 | | 7 |
| 9 | | | | 6 | | | 8 | |
| | 4 | | 7 | | | 9 | | 3 |
| | | 4 | 5 | | 1 | 6 | | 9 |
| 1 | | 5 | | | | 8 | | 2 |
| 2 | | 3 | 8 | | 4 | 5 | | |
| 4 | | 1 | | | 6 | | 2 | |
| | 3 | | | 1 | | | | 4 |
| 8 | | 2 | | | | | 9 | |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 2 | 9 | 7 | 8 | 3 | 1 | 5 |
| 5 | 7 | 9 | 3 | 1 | 2 | 6 | 4 | 8 |
| 3 | 1 | 8 | 4 | 6 | 5 | 7 | 9 | 2 |
| 7 | 8 | 3 | 1 | 5 | 9 | 4 | 2 | 6 |
| 2 | 9 | 5 | 7 | 4 | 6 | 1 | 8 | 3 |
| 1 | 4 | 6 | 8 | 2 | 3 | 5 | 7 | 9 |
| 9 | 5 | 4 | 6 | 8 | 1 | 2 | 3 | 7 |
| 8 | 2 | 7 | 5 | 3 | 4 | 9 | 6 | 1 |
| 6 | 3 | 1 | 2 | 9 | 7 | 8 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள்களை பாதுகாக்க நவீன தொழில்நுட்பம்





தற்போது ஸ்மார்ட் கைபேசி பாவனை மக்கள் மத்தியில் அதிகரித்து வருவதுடன் அவை பயன்படுத்தப்படும் துறைகளும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

அதற்கிணங்க தற்போது சைக்கிள்களுக்கு சாவி பயன்படுத்தி பூட்டுப் போடுவதற்கு பதிலாக இனி ஸ்மார்ட் கைபேசி மூலம் பூட்டுப் போடலாம்.

இதற்கென பிற் லொக் (BitLock) என்ற அப்பிளிக்கேஷன் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் குறித்த ஸ்மார்ட் கைபேசியை வைத்திருப்பவர் சைக்கிளிலிருந்து 3 அடிகள் தூரத்துக்குள் நிற்கும்போது விசேட சென்சார் மூலம் சைக்கிளை இனம்கண்டு செயற்படமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



# அதிகரித்துவரும் மொபைல் 'யூ ரியூப்' பாவனை



காணொலிகளை ஒன்லைனில் பகிரும் சேவையை வழங்கிவரும் நிறுவனமான 'யூ ரியூப்', இணையத் தளங்களின் தரப்படுத்தல் வரிசையில் 3 ஆவது இடத்தில் இருக்கின்றது.

இதற்கு இத்தளத்தை அதிகளவானவர்கள் நீண்ட நேரம் பயன்படுத்துவதே காரணமாகும்.

தற்போது 'யூ ரியூப்'. தளத்தை மொபைல் சாதனங்களில் பயன்படுத்தும் வசதி காணப்படுவதால் மொபைல் மூலமான பாவனை அதிகரித்துச் செல்கின்றது.

இந்த அதிகரிப்பானது. அனைத்து சாதனங்களுடனும் ஒப்பிடுகையில் 40 சதவீதத்தை எட்டியுள்ளது.

கடந்த வருட ஆரம்பத்தில் 25 சதவீதமாகக் காணப்பட்ட பாவனை இந்த வருடத்தில் 6 சதவீ தத்தால் அதிகரித்திருந்தது.

எனினும் தற்போது மேலும் 9 சதவீதம் அதிகரித்து 40 சதவீதத்தை எட்டியுள்ளது.

# இரவு நேரங்களில் துல்லியமாக படம் எடுக்கும் கமரா



இருள் சூழ்ந்த நேரங்களில் படமெடுப்பதற்கு Infrare- கமராக்கள் பயன்படுத்தப்படுவது பலரும் அறிந்த விடயமே.

தற்போது குறைந்த விலையில் இரவு நேரங்களில் துல்லியமாகப் படம் எடுக்கக்கூடிய நவீன Infrared கமராவை Raspberry Pi என்ற நிறுவனம் உருவாக்கியுள்ளது.

Pi NoIR Infrared கமரா என்ற பெயர் கொண்ட இச்சாதனத்தை 35 டொலருக்கு கொள்வனவு செய்ய முடியும்.

# மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணினி

மனித உடல் உறுப்புகளிலேயே மிகவும் முக்கியமானது மூளை. அதனைக் கருத்தில் கொண்டே மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணினியை வடிவமைத்துள்ளனர். அதாவது மனிதனின் மூளையை போன்று கணினி ஒருவகை திரவத்தால் சக்தியைப் பெறுவதுடன் அதே திரவத்தால் தன் வெப்பத்தையும் நீக்கி குளிர்மைப்படுத்திக் கொள்ளும் திறன் கொண்டதாக இருக்கும்.

மூளையில் உள்ள குருதிச் சுற்றோட்டத்தொகுதி போன்ற ஒருவகை மின்னணு இரத்தத்தை கணினியின் வழியாக ஓடச்செய்வதன் மூலம் அந்தக் கணினிக்கான சக்தியை அதன் உள்ளே கொண்டு செல்லும். அத்துடன் அதிலிருந்து வெப்பத்தை வெளியேயும் கொண்டுவரும். தற்போதுள்ள கணினிகளில் ஒரு சதவிகிதம் மட்டுமே தகவல்களைப் பெறுவதற்கு பயன்படுவதாகவும், இந்த புதிய முறை பயன்படுத்தப்பட்டால் சிறப்பான கணினியைத் தம்மால் உருவாக்க முடியும் என்றும் ஐபிஎம் நிறுவனத்தின் மருத்துவர் பாட்ரிக் ருச் மற்றும் மருத்துவர் புருனோ மைக்கல் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

2060ஆம் ஆண்டளவில் முழுமையடையக்கூடிய இந்த முயற்சியின் மூலம் தற்போது மிகப்பெரியதாக இருக்கக்கூடிய கணினியை சிறியதாக உருவாக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் நடந்த பொது அறிவுப்போட்டியில் இக்கணினி மனித மூளையைத் தோற்கடித்துவிட்டது.

மனித மூளை 20 வாற்ஸ் சக்தியை மட்டுமே பயன்படுத்துகின்றது. ஆனால் கணினி 85 ஆயிரம் வாற்ஸ் சக்தியைப் பயன்படுத்துகின்றது. இது நியாயமற்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்தக் கேள்விகளுக்குப் புதிய மின்னணு இரத்தத்தால் செயல்படும் கணனிகள் பதில் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

# தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அறிமுகமாகியது அதிநவீன ஹெல்மெட்




செல்லும் இடத்துக்கான வழிகளையும் வானிலை குறித்த தகவல்களையும் தரும் புதிய ரக ஹெல்மெட் (தலைக்கவசம்) அமெரிக்காவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரிலேயே இந்த உயர் தொழில்நுட்பம் கொண்ட தலைக்கவசத்தை ஸ்கல் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

இதன்மூலம் செல்ல வேண்டிய இடத்துக்கான வழிகளையும் வானிலை அறிவிப்புகளையும் தெரிந்து கொள்ளலாம்.

இதற்காக தலைக்கவசத்தின் வலது புறம் சிறிய அளவிலான காட்சிப்பலகை பொருத்தப்பட்டுள்ளது.

அதன்மூலம் பின்புறம் வரும் வாகனங்களையும் பார்த்துக் கொள்ளலாம்.

இந்தத் தலைக்கவசம் அடுத்த வருடத் தொடக்கத்தில் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஸ்மார்ட் கைபேசிகளை கட்டுப்படுத்தும் கையுறை

கைவிரல் சைகைகள் மற்றும் தொடுகைகள் மூலம் ஸ்மார்ட் கைபேசிகளை கட்டுப்படுத்தக் கூடிய கையுறைகள் அமுகப்படுத்தப்பட்டுள்ளன.

BearTek என்ற இக்கையுறைகள் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது ஸ்மார்ட் கைபேசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு பெரும் உதவியாக இருக்கும்என இதை உருவாக்கிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தக்கையுறைகள் புளூடூத் தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளன. இதன் மூலமேஸ்மார்ட்கைபேசிகளுடன் தொடர்புகள் ஏற்படுத்துகின்றன.

இதன் விலையானது 145 டொலர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கூகுளில் தேடலின் சுவடே இல்லாமல் தேடிக்கொள்ள ஓர் இணைவு

கூகுள் சிறந்த தேடுயந்திரம் தான். ஆனால் இது நல்லதொரு தேடுயந்திரம் அல்ல என்கின்றனர். நம்பிக்கையோடு தேடி வரும் இணையவாசிகளின் ஒவ்வொரு அசைவையும் சேமித்து வைப்பதால் கூகுள் அந்தரங்க ஊடுருவலில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

இதற்கு மாற்றாக டக்டக்கோ போன்ற தேடியந்திரங்கள் முன் வைக்கப்படுகின்றன. இந்த நிலையில் கூகுள் தேடல்முடிவுகளை கவலையில்லமல் தேடுத்தருவதற்காக ஒரு தேடுயந்திரம் அறிமுகமாகியிருக்கிறது. 'ஸ்டார்ட் பேஜ்' எனும் அந்த தேடுயந்திரம் தன்னை உலகின் அந்தரங்கமான தேடுயந்திரம் என வர்ணித்து கொள்கிறது. இணைய மொழியில் பாதுகாப்பான தேடுயந்திரம் என இதை அடையாளப்படுத்தலாம்.

'ஸ்டார்ட்பேஜ்' கூகுளில் நேரடியாகத் தேடாமல் தன் மூலமாக கூகுளுக்கு வழிகாட்டுகிறது. இவ்வாறு ஸ்டார்ட் பேஜ் மூலம் கூகுளுக்குச் செல்லும் போது வழக்கமாக கூகுளில் தேடும் போது நிகழும், ஐபி முகவரி சேகரித்தல், தேடல் முகவரி [illegible] போன்றவை இல்லாமல் [illegible] திரும்பலாம் என்கிறது. அதாவது தேடலில் சுவடு இல்லாமல் நிம்மதியாகத் தேடிக்கொள்ளலாம் என்கிறது.

அத்துடன் கூகுள் உள்ளிட்ட தளங்கள் இணையவாசிகள் கணினிக்குள் அனுப்பும் கூகுள் மென்பொருளைத் தடுப்பதாக ஸ்டார்ட்பேஜ் சொல்கிறது. கூகுள் சார்ந்த தேடுயந்திரங்கள் பல உண்டு. அவற்றில் இது சற்று வித்தியாசமானது.

ஆனால் எந்தளவு பயனுள்ளது என்று தெரியவில்லை. அதேவேளை இணைய யுகத்தின் இப்போதைய [illegible] வாசிகள் பற்றிய தகவல் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்புள்ள அம்மன் கோயிலுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரிக்கை

கொழும்பு,ஒக் 24

தம்புள்ள பத்திரகாளி அம்மன் கோயிலுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த கோயிலின் கூரை கடந்த திங்கட்கிழமை இரவு கழற்றி வீழ்த்தப்பட்டிருப்பதுடன் கோயிலின் முன்புறமாகப் பறக்க விடப்பட்டிருந்த இந்து கலாசார மையத்தினால் வழங்கப்பட்டிருந்த கொடி மற்றும் கொடிக்கம்பம் என்பனவும் கழற்றி வீசப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புனித தலங்களான கோயில்கள் மீது மேற்கொள்ளப்படும் இவ்வாறான தாக்குதல்கள் சகல இந்து மக்களையும் புண்படுத்தும் செயலாகும். இரவு வேளையில் பெண்கள் கோயிலில் தங்கி கோயிலுக்குப் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மழை காரணமாக இரண்டு நாள்க ளாகப் பாதுகாப்புக்கு எவரும் வராத சந்தர்ப்பத்திலேயே இந்தச் செயல் இடம்பெற்றுள்ளது.



இதன் மூலம் இந்தச் செயற்பாட்டை ஒரு குழுவினால் மிகவும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலாகவே கருத வேண்டும். இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்களை உடனடியாகக் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மத்திய மாகாண சபை முதலமைச்சர் இவ்விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் வேண்டிக்கொள்கிறேன்.

எந்த ஒரு தரப்பினருக்கும் எதுவித இடையூறுமின்றி இயங்கி வரும் இந்தக் கோயிலை அகற்றுவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இந்தப் பிரதேசத்தில் வசித்து வரும் சிறுபான்மை மக்களின் விடா முயற்சியினாலே இந்தக் கோயில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

மதச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் இவ்வாறான இழிவான செயற்பாடுகளை நிறுத்தி, மக்கள் சுதந்திரமாகத் தமது மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தொடர் தாக்குதலுக்கு இலக்காகி வரும் இந்தக் கோயிலுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தமிழ் மக்களின் மத உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என வும் வேண்டிக் கொள்கிறேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

> இழிவான செயற்பாடுகளை நிறுத்தி, மக்கள் சுதந்திரமாகத் தமது மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.




யாழ் மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

ஓட்டோ உரிமையாளர்களுக்கு கிளைச் சங்க புனரமைப்பும், மீற்றர் பொருத்துதலும்

யாழ் மாவட்டத்தில் வாடகைச் சேவையில் ஈடுபடும் சகல முச்சக்கர வண்டிகளுக்கும் கட்டண அறவீட்டு மீற்றர் பொருத்துமாறும் இதற்கான ஏற்பாட்டினை எமது தலைமைச் சங்கம் பேர்ள் நிறுவனத்துடன் இலகுவாக செய்யக்கூடிய வகையில் ஒப்புதல் செய்துள்ளோம்.

எனவே ஓட்டோ உரிமையாளர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு மீற்றர் பொருத்துமாறும் ஓட்டோ சேவை மக்களுக்கும் பயன்தரும் வகையில் மேற்கொள்ள தங்கள் பகுதிகளிலுள்ள சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, தீவகம் பகுதியிலுள்ள கிளைச் சங்கங்களில் பதிவு செய்யுமாறும், புனரமைப்பு செய்யப்படாத தென்மராட்சி, வடமராட்சி, மானிப்பாய் கிளைச் சங்கங்களும் எம்மிடம் பதிவுசெய்து கிளைச் சங்கத்தை புனரமைத்து சிறந்த கட்டுப்பாடான சேவையை மேற்கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

40, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.
(33250) (7.6.3)

நிர்வாகம்.



யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்

## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் - 2013

இடம் : ஒறேற்றர் சுப்பிரமணியம் அரங்கு
திகதி : 26.10.2013 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி

தலைவர்: இ.ஈஸ்வரதாசன் (கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்: வைத்திய கலாநிதி க.சிவகுமார் (ஸ்கந்தவரோதயன்) (MBBS - Jaf, DCH - Col., MD- Pediatrics)

சிறப்பு விருந்தினர்: தி.குமார் (ஸ்கந்தவரோதயன் - சிரேஷ்ட முகாமையாளர், யாழ். மாவட்டம், இலங்கை வங்கி - AIB-Srilanka)

நினைவுப்பேருரை: எஸ். சிவனேஸ்வரன் (ஸ்கந்தவரோதயன் - அதிபர் மானிப்பாய், இந்துக்கல்லூரி : (BCom (Hon), PDGE, M.Ed.SLPS -I, SLEAS III

ஆசியுரை: பிரம்மஸ்ரீ வி.ஜெயக்குமாரக்குருக்கள் (மருதடி விநாயகர் ஆலய குரு)

பரிசில்கள் வழங்குபவர் : திருமதி ஜெயபவானி சிவகுமார்

நன்றியுரை : திருமதி எஸ். நாகராஜா (கல்லூரி பிரதி அதிபர்)

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம். (f/13175) (45.3.6)



## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.10.2012 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 11.11.2013 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

(இ/13158)(5-6-3)

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,பிராந்தியத் தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

யா/யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மாணவனான நாகசேனன் சாரங்கன் 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி மேலும் கல்வியில் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: தாத்தா, அம்மம்மா, அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, நாதன் தாத்தா, பாட்டி, கண்ணனுப் பெரியப்பா குடும்பம், சிறீப் பெரியப்பா குடும்பம், மாமா குடும்பம்.

Best Wishes



## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

கடந்த 19.04.2013 திகதியிடப்பட்ட யாழ் மாவட்ட பெண்கள் சமாசத்தின் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு (23.10.2013) அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. அதில் வெற்றியீட்டியோர் விவரம்.

முதலாம் பரிசு 1952 இரண்டாம் பரிசு 1525 மூன்றாம் பரிசு 2062

10 ஆறுதல் பரிசில்களின் இலக்கங்கள் பின்வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| * 1130 | * 3007 | * 3078 | * 3802 | * 4711 |
| * 4910 | * 5534 | * 3405 | * 5505 | * 2182 |

அதிர்ஷ்டசாலிகள் தமது பரிசில்களை இல. 23, ஆடியபாதம் வீதியிலுள்ள விழுது அலுவலகத்தில் 28.10.2013 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ் மாவட்ட பெண்கள் சமாசம்
நிர்வாகம், யாழ்ப்பாணம்.
(33282) (7.6.3)



## தவறிவிட்டது

22.06.2013 அன்று பருத்தித்துறைக்கும் திக்கத்திற்கும் இடையில் ஆலய குருக்கள் பயன்படுத்தும் 3 பவுண் நிறையுடைய ரக்ஷா பந்தனம் தொலைத்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776787905 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (33233) (7.6.3)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முன்னாள் C.T.B மற்றும் வலி. கிழக்கு பிரதேசசபை அலுவலக உதவியாளரும், உரும்பிராய் கிழக்கு புனித மிக்கேல் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரும்,காந்திஜி.ச.ச. நிலைய தலைவரும், வலி. கிழக்கு M.P.C.S கிளைக்குழு செயலாளரும், உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய

### த.பேரின்பநாயகம்

அவர்கள் நீதி அமைச்சினால் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 22.10.2013 யாழ் மாவட்ட நீதிவான் A.A.ஆனந்தராசா அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(33237)(3.6.1)

பாராட்டி வாழ்த்துவோர்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்



## தவறிவிட்டது

அருளப்பு தேவகுமாரன் என்பவருடைய தே.அ. அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன 21.10.2013 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கும் ஆனைக் கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இல. தொடர்பு கொள்ளவும் 021 221 3389



உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulation

சிவஸ்ரீ மு.தயாபரக் குருக்கள் தமயந்தி தம்பதியரின் செல்வப் புதல்வியும் யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவியுமாகிய லக்ஷிகா 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். அவரை மேன் மேலும் பல முன்னேற்றங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பேரன்– சிவஸ்ரீ கோ.தண்டபாணிக தேசிகர் J.P (வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு)
அம்மம்மா,மாமாமார், மாமிமார், பெரியப்பா,பெரியம்மாமார், சித்தப்பா,சித்திமார்.
(33232)(5-6-3)



## நாளை முதல் ஆரம்பமாகின்றது

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதியுயர் வகுப்பிற்கு (SUPRA CLASS) நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கு தயார்படுத்தல் வகுப்புகள்.

ஒக்ரோபர் 26 முதல் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற உள்ளது.

தொடர்புகளுக்கு :

தொழில்முறை மற்றும் பட்டப் படிப்பகம்
SCHOOL OF PROFESSIONAL AND DEGREE STUDIES (PVT) Ltd.
65, AMMAN ROAD, KANTHARMADAM, JAFFNA.
Phone : 021 221 9793, Hot Line : 077 177 7061
(33236) (7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உதவிகளில் புறக்கணிக்கப்படும் கிளிநொச்சி திருவையாறு விவசாயிகள்

கிளிநொச்சி, ஒக்.25
கிளிநொச்சி திருவையாற்றில் 3,500க்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ள போதிலும் அவர்களுக்குத் தேவையான விவசாய உதவிகள் எதுவும் வழங்கப்படுவ தில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தாம் தொடர்ந்தும் ஏழ்மையான நிலையில் உள்ளதாக அங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
போருக்குப் பின்னரான அபிவிருத்தி என ஊடகங்களில் தான் கூறப்படுகின்றது. உண்மையான அபிவிருத்திக்கான உதவிகள் கிளிநொச்சி விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை.
திருவையாற்றில் மானிய உரம் கூட விவசாயிகளுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை.
இதுவரை நான்கு சில்லு உழவு இயந்திரம் ஒன்றுகூட எமக்குக் கிடைக்கவில்லை.
மேட்டு நிலத்தின் அபிவிருத்திக்கு மானிய விலையில் உரம் தருமாறு கோருகின்றோம்.
கடந்த காலங்களில் இங்குள்ள 50 வீதமானவர்களுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. மீதிப் பேருக்கு வடக்கின் வசந்தத்தின் கீழ் வழங்கப்படுமென உறுதிமொழி வழங்கப்பட்டதே தவிர, இதுவரை வழங்கப்படவில்லை. வடமாகாண சபையில் விவசாய அமைச்சர் ஒருவர் பொறுப்பேற்றுள்ளார்.
விரைவில் விவசாயப் புரட்சி இங்கு ஏற்பட வேண்டும். வடக்கின் 5 மாவட்டங்களின் விவசாயத் தேவைகளும் நிறைவுற அனைத்து விவசாயிகளும் மாகாண அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- எனவும் அவர்கள் தெரிவித்தனர். (சு-50)

## பொதுநலவாய எழுச்சி ஊர்வலம்

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு இடம்பெற்று வரும் எழுச்சி ஊர்வலம் நேற்று முன்தினம் புதன்கிழமை வவுனியாவைச் சென்றடைந்தது.
அடுத்த மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநல வாய மாநாட்டை முன்னிட்டு கடந்த 21 ஆம் திகதி எழுச்சி ஊர்வலம் பருத்தித்துறையிலிருந்து ஆரம்பமாகி முல்லைத் தீவைச் சென்றடைந்து அங்கிருந்து நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா நகரைச் சென்றடைந்தது.
இந்த ஊர்வலத்தை வவுனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் உட்படப் பலரும் வரவேற்றனர்.
தொடர்ந்து வரவேற்பு நிகழ்வு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.
பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தோற்றம், அதன் செயற்பாடுகள் இலங்கையுடனான அதன் செயற்பாடுகள் தொடர்பாக வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தி யோகத்தர் எஸ்.எஸ். வாசன் சிறப்புரையாற்றினார். (து-402,400)

# சம்பந்தனுக்குப் போட்டியாக அரசும் பா.ஜ.கவுடன் பேச்சு

சென்னை, ஒக் 25
பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர்களுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் செவ்வாய்க்கிழமை சந்திப்பு நடத்திய அதேவேளையில், பா.ஜ.க தலைவர் ராஜ்நாத் சிங்கை, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
ஏட்டிக்குப் போட்டியான இந்தப் பேச்சு இலங்கை, இந்திய அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சென்னையில் பா.ஜ.கவின் தமிழ்நாட்டுத் தலைவர்களை, இரா.சம்பந்தன் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசியிருந்தார். இதன் போது இலங்கையின் அரசியல் நிலவரங்கள் மற்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பிந்திய நிலைமைகள் குறித்து அவர் பா.ஜ.க தலைவர்களுக்கு எடுத்துக் கூறியிருந்தார்.
இந்த நிலையில், புதுடில்லியில் நேற்றுமுன்தினம் பா.ஜ.க.வின் தலைவர் ராஜ்நாத் சிங்கை, இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் சந்தித்துப் பேசினார்.
இதன்போது, வடக்கு மாகாணசபைத் தேர்தல், மற்றும் இலங்கை யில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் குறித்து அவர் விளக்கமளித்தார் என்று தகவல்கள் தெரி விக்கின்றன.
இந்தியாவில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடக்கவுள்ள தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான அணி ஆட்சியமைக்கலாம் என்று கருதப்படுகின்ற சூழலில், இந்த ஏட்டிக்குப் போட்டியான சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன. (து-5)

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் ஒரு பரப்பு காணி, கிணறு, சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு
தொடர்பு- 077 3075330
(33273)(14.17)

**பெயர் மாற்றம்**
அச்சுவேலி வடக்கு அச்சுவேலியைச் சேர்ந்த ஜெயசீலன் பார்த்தீபன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரினை ஜெயசீலன் அஜய்வதேர என மாற்றிக் கொள்கிறேன். இன்று முதல் சகல ஆவணங்களிலும் இவ்வாறு எனது புதிய பெயரில் கையொப்பமிடுவேன் என அறிவித்துக் கொள்கிறேன்.
(33270) (7.6.3) ஜெயசிலன் அஜய்வதேர

**அறை வாடகைக்கு**
வெள்ளவத்தையில் வெளி இடங்களில் இருந்து வருபவர்களுக்கு Luxary Rooms நாள் வாடகைக்கு உண்டு. தனிநபருக்கு ஒரு நாளைக்கு 500/= மட்டும். தொடர்பு:- Hotel Villa City 0722552222

# மாநாட்டில் இலங்கைக்கு காத்திருக்கிறது அதிர்ச்சி

## கடும் செய்தி வழங்கப்படும் என்கிறது பிரிட்டன்



இந்த விடயத்தில் இலங்கை அரசு கவனமாக இருக்க வேண்டும். பிரிட்டனிடம் இருந்து மட்டு மல்ல உலக ஊடகங்கள் அனைத்தும் கொழும்பில் இலங்கை அரசிடம் கேள் விகளை எழுப்பும்.- என்றார்.

கொழும்பு,ஒக்.25
கொழும்பில் அடுத்த மாதம் நடை பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில், இலங்கை அரசுக்கு பிரிட்டன் கடுமையான செய்தியை வழங்கும். இந்த விடயத்தில் இலங்கை அரசு கவனமாக இருக்க வேண்டும் என்று பிரிட்டனின் சிரேஷ்ட அமைச் சர் பாரோனஸ் வர்சி தெரி வித்துள்ளார்.
மனித உரிமை பிரச்சினைகள், நல்லிணக்கம், அரசியல் தீர்வு தொடர்பில் முன்னேற்றமான முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கையை கடுமையாக பிரிட்டன் அழுத் தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநல வாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிப்பதற்கு பதிலாக பிரிட்டன் மாநாட்டில் கலந்து கொண்டு இலங்கையின் மனித உரிமை பிரச்சினைகள் தொடர்பில் அழுத்தம் கொடுக்க வேண்டியது அவசியம்.
நல்லிணக்கம் உட்பட இலங்கையின் மனித உரிமை பிரச்சினைகள், தூதரக கவலைகள் மற்றும் இருதரப்பு பிரச்சினைகள் தொடர்பில் அமைப்பின் சக உறுப்பு நாடுகள் ஊடாக அழுத்தங்கள் கொடுக்கப்படும்.
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையூடாகப் இலங்கை வழங்கிய பல வாக்குறுதிகள் தொடர்பில் கேள்விகளை எழுப்ப
[illegible]
[illegible]
பாக அமையும் என பிரிட்டன் நம்புகிறது.

**தசாக கிருஹயக்ஞ அழைப்பு**



நிகழும் விஜய வருஷம்
புரட்டாதி மாதம்
30ஆம் நாள்
(16.10.2013) புதன்கிழமை
இறைபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்

அமரர்
சிவஸ்ரீ கனகசபாபதி ஐயர்
மகாகணபதீஸ்வரக் குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

ஐப்பசி 8ஆம் நாள் 25.10.2013 வெள்ளிக்கிழமை
மு.ப. 10 மணிக்கு தசாகம்
ஐப்பசி 9ஆம் நாள் 26.10.2013 சனிக்கிழமை
மு.ப. 10 மணிக்கு இடபதானம் ஏகோதிஸ்டம்
ஐப்பசி 10ஆம் நாள் 27.10.2013 ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணிக்கு சபிண்டீகரணம்
ஐப்பசி 11ஆம் நாள் 28.10.2013 திங்கட்கிழமை கிருஹயக்ஞம்
மு.ப. 11 மணிக்கு சமாராதனை

மேற்படி கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

No.18, துரைராஜா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**
**கனகசபை மகாதேவன்**
(ஓய்வு பெற்ற மருந்தாளர்,நயினா தீவு அரசினர் வைத்தியசாலை)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை மகாதேவன் நேற்று (24.10.2013) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கனகசபை-தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், அனுசா (அமெரிக்கா), நிருஷா (கனடா), ரமேஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ் (அமெரிக்கா), ஸ்ரீராஜ் (கனடா), வதனநிரஞ்சனி (கனடா) ஆகியோ ரின் அன்பு மாமனும், வாமதேவன், பராசக்தி, தில்லைநாதன், சிதம்பர நாதன், கைலாயநாதன் (சுவிஸ்), பத்மநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன் புச் சகோதரரும், ஹரினி, ஆதித்தியன், அனோசன், அரவிந், அஸ்வினி, ஆரணி, ஆருஜன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்: ம. விக்னேஸ்வரி (மனைவி)
கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு. 021 223 0766

**அந்தியேட்டி அழைப்பு**



தோற்றம்
12.10.1946
மறைவு
26.09.2013
அமரர்
கந்தையா குணசிங்கம்

கடந்த 26.09.2013 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த அன்புத் தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.10.2013) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. உற்றார், உறவிர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அரசடி,
தொண்டமானாறு.
குடும்பத்தினர்.
0779176340
(C/131891)(10.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதம் கடலைப் போன்றது தொடர்ந்து கற்க வேண்டும்

## சங்கீதப் பேராசிரியை ரேவதி கருத்து

வலி.வடக்கு, ஒக்.25

எனது தந்தையார் யாழ்ப் பாணம் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடத்தில் கடந்த நான்கு ஐந்து வருடங்களாக விரிவுரையாளராகக் கடமை யாற்றியவர். அவருடைய உற் சாகத்தினாலும் உந்துதலினா லும் தான் நானும் ஒரு சங் கீதப் பேராசிரியையாக வள ரக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து வருகை தந்த ஒய்வு பெற்ற சங்கீதப் பேராசிரியை திருமதி இ.ரேவதி குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருதனார் மடம் நுண்கலைப் பீடத்தில் இசைத்துறை மாண வர்களுக்கான சங்கீதப் பேரா சிரியை திருமதி இ.ரேவதியின் சங்கீதப் பயிற்சிப் பட்டறையும் செயலமர்வும் இடம்பெற்றன. அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது தந்தையார் குருகுலக் கல்வியைக் கற்று அதன் மூலம் வித்துவானாக வளர்ந்தவர். அதேவேளையில் அவரது இசைத் துறை ஈடுபாட்டைப் பார்த்து நானும் இசையைக் கற்றுக் கொண்டேன்.

"யாழ்ப்பாணம் நுண் கலைப் பீடத்துக்கு வரவேண்டும், மாணவர்களுடன் இசைத்துறை சம்பந்தமாக கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். என்று என்னை இசைத் துறைத் தலைவர் அழைத்ததன் பெய ரில் இங்கு வந்து இந்த பயிற் சிப் பட்டறையையும் செயல மர்வையும் நடத்துகின்றேன்.

நான் தந்தையாரிடம் ஐந்து வயதில் இருந்து இசைத் துறை யைக் கற்கத் தொடங்கினேன். சங்கீதம் என்பது கடலைப் போன்றது. நாங்கள் இன் னும் பலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும், கற்க வேண்டும். இதற்கு நல் லதொரு குரு இருக்க வேண்டி யது அவசியமாகும். முன் னைய காலங்களைப் போன்று தற்போது இசைக் கச்சேரிகள் இடம்பெறுவதில்லை. இரண்டு மணித்தியால கச்சேரி என்றா லும் கூட ஒரு மணித்தி யாலம் கதைத்து நேரம் போக்கி, ஒரு மணித்தியாலமே கச்சேரி இடம் பெறும் தன்மையே இன்று காணப்படுகின்றது.

எங்களிடம் உள்ள இசை சம் பந்தமான திறமைகளை ஏனை யவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். இது இசைத் துறை யின் வளர்ச்சிக்கும், தனிப்பட்ட வளர்ச்சிக்கும் நல்லதொரு வாய்ப்பாக அமையும்- என் றார்.

(ந-86)

புதுக்குடியிருப்பு கல்விக் கோட்ட

# சிறுவர், முதியோர் தினப் போட்டி முடிவுகள்

(நேற்றையத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பு, ஒக்.25

**சிறுவர்தினம் ஓவியப்போட்டி**

**ஆரம்பப்பிரிவு**

க.யாழினியன்-(மு/உடையார் கட்டு.அ.த.க.பா.), தரிஷானி- (மு/ விசுவநாதர் ஆரம்ப.பா.), சூ.இசை நிலா-(மு/உடையார் கட்டு. அ.த. க.பா.).

**கனிஷ்டபிரிவு**

ச.சஜீவன்-(மு/குரவில்.த. வி.), ஜெ.கதிரவன்-(மு/சுதந்திரபுரம். அ.த.க.பா.). க.டல்சன்-(மு/இர ணைப்பாலை.றோ.க.ம. வி.)

**இடைநிலைப்பிரிவு**

இ.றமணதாஸ்-(மு/சுதந்திர புரம்.அ.த.க.பா., ர.கோவி- (மு/குர வில்.த.வி.), அ.ஜெயப்பிரியா- (மு/விசுவ மடு.ம.வி.).

**முதியோர்தினம் ஓவியப்போட்டி**

**ஆரம்பப்பிரிவு**

ர.மிதீசன் (மு/விசுவநாதர் ஆரம்ப. பா.). ச.சுஞ்சீவன்-(மு/வள்ளிபுனம். க.உ.வி), ஜெ.ஜெயப்பிர பாலினி - (மு/வள்ளி புனம்.க. உ.வி.).

**கனிஷ்டபிரிவு**

சி.தூயவன்-(மு/சுதந்திரபுரம். அ.த.க.பா.), றோ.பிறேமன் -(மு/ வள்ளி புனம்.க.உ.வி.), ம.பகல வன்-( மு/விசுவமடு. ம.வி.).

**இடைநிலைப்பிரிவு**

ஜெ.தமிழ்க்கீரன்-(மு/சுதந்திர புரம். அ.த.க.பா., ச.ஜக்சன்- (மு/ உடை யார்கட்டு.ம.வி.), இ.சிலம் பரசன்-(மு/குரவில். த.வி.).

**மேற்பிரிவு**

மு.மேனகா-(மு/விசுவ மடு.ம.வி.), ஜெ.நிறோஜன்- (மு/வள்ளிபுனம். க.உ.வி.). இ.திருமாறன் -(மு/குர வில்.த.வி.).

**மாற்றுவலுவுடையோர்தினம் ஓவியப்போட்டி ஆரம்பப்பிரிவு**

சு.தம்ஜா-(மு/நெத்தலி யாறு.த.வி.),ப.தமிழ் வாணன்- (மு/வள்ளி புனம்.க.உ.வி.), அ.மீனுஜா-(மு/புதுக்குடி யிருப்பு.றோ.க.வி.)

**கனிஷ்டபிரிவு**

சி.பபிலன்-(மு/சுதந்திரபுரம். அ.த.க.பா.)

**இடைநிலைப்பிரிவு**

ஜெ.நிதுர்சன்-(மு/ஆனந்த புரம். அ.த.க.பா.), து.வதுர்ஷன் (மு/சுதந்திரபுரம். அ.த.க.பா.), சி.சிந்துஜன்-(மு/உடை யார்கட்டு. ம.வி.). (ந-555)


# மரண அறிவித்தல்

## செல்வி மரியோசமிக்கா தீபராஜ்



ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மரியோசமிக்கா தீபராஜ் நேற்று (24.10.2013) வியாழக்கிழமை கர்த்தருக்குள் இளைப்பாறுதல் அடைந்துவிட்டார்.

அன்னார் தீபராஜ் (ராஜன்) -கிஷாணி (வவா) தம் பதியரின் செல்வப்புதல்வியும், எட்மண்ட் - ராசாத்தி தம்பதியரின் அன்புப் பேர்த்தியும், தர்மசீலன், லிண்டா, ராகவன், லக்சி - சாலு ஆகியோரின் பெறாமகளும், கரிஸின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.10.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.3 மணியளவில் யாழ்.புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

807, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
எட்மண்ட்

(33263) (12.6.3)



# 29 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
11.04.1972

ஆண்டவன் அடியில்
25.10.1984

செல்வி
வீரசிங்கம்
நிமாலினி

ஆசை மகளே உன்னைக் காணாது
எம் ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
இதயத்தின் வேதனையும் குறையவில்லை
கண்ணீரில் மிதக்க விட்டு-கானல் நீர்போல்
ஆண்டு இருபத்தொன்பது போனதுவோ
காலங்கள் விடைபெறலாம்
எம் கோலங்கள் மாறலாம்-ஆனாலும்
கண் முன்னே நிழலாகும் உன்
நினைவுகள் மட்டும்
நித்தும் எம்முடன் உயிர் வாழும்

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா,
உடன் பிறப்புக்கள்.

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.


## காலமானார்

வடமராட்சி, ஒக்.25

அல் வாய் மாலிசந்திப் பிள்ளையார் கோயில் பிர தம குருவான பிரம் மஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் தேவராஜக் குருக்கள் தமது 90 ஆவது வயதில் கடந்த செவ்வாய்க் கிழமை காலமானார்.

இவரது சாவு குறித்து யாழ்.மாவட்டத்தில் உள்ள இந்து சமய அமைப்புக்கள் அனு தாபச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

(ந-8)

## பசு மாடுகள் திருட்டு

மழையைச் சாதக மாக்கி உரும்பிராய் பலாலி வீதி, மடத்தடி உரும்பிராயில் தோட் டக்காணிக்குள் கட்டப் பட்டிருந்த விவசாயி களின் மூன்று பசு மாடு கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் நடை பெற்றது. ஐ.முருகையா என்பவரது 30 ஆயி ரம் ரூபா பெறுமதி யான பசுமாடும், வஜெய ராசா என்பவருடைய 30 ஆயிரம் ரூபா பெறு மதியான பசு மாடும், சி. திருச்செல்வம் என்ப வருடைய 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடுமே களவாடப் பட்டுள்ளன.

இந்தத் திருட்டு தொடர் பாககோப்பாய்பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள் ளது. (ந)

## நியமனம்

வடமராட்சி, ஒக்.25

அல்வாய் வடக்கு, மந் திகை கிராம சேவை யாளர் பிரிவுகளுக்கு புதிய கிராம சேவை யாளராக கே.யோகேந் திரநாதன் நியமிக் கப்பட்டுள்ளார்.

இந்தப் பிரிவுகளுக்கு கிராம சேவையாள ராகக் கடமையாற்றிய எஸ்.கிருஷ்ணராஜா விபத்தில்சாவடைந்ததை யடுத்து ஏற்பட்ட வெற் றிடத்துக்கே இவர் நிய மிக்கப்பட்டுள்ளார்.

(ந-8)


# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்
05.04.1936

விண்ணில்
05.11.2012

அமரர் சிற்றம்பலம் பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் நீர்ப்பாசனத்திணைக்களம்)

திதி: 25.10.2013

அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு ஒன்றல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடை பெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள் என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.20/50,
முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி, வவுனியா,
தொ.பே. 077 615 3784

(29823)(45.6)



# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
முருகுப்பிள்ளை
நிர்மலன்
(நிமோ, செந்தில்-முள்ளியவளை)

அன்னை மடியில்
28.02.1964

ஆண்டவன் அடியில்
26.09.2013

கடந்த 26.09.2013 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் முருகுப்பிள்ளை நிர்மலன் அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 26.10.2013 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் கடந்த 23.09.2013 அன்று எதிர்பாராத விபத்தில் சிக்கியவேளை அதே இடத்திலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை வரை உதவிபுரிந்த காவல்துறையினர், வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், உறவினர்கள், கட்சித் தலைவர்கள் மற்றும் நண்பர்கள் அத்தோடு இறுதிக்கிரியை வரை கலந்து கொண்டு இரங்கல் தெரிவித்த பாடசாலைச் சமூகங்கள், விளையாட்டுக் கழகங்கள், சமூக மட்ட அமைப்புக்கள், கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங் களிற்கும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு எம்முடன் தொலைபேசியூடாகவும், மின்னஞ்சலூடாகவும், குறுந்தகவலூடாகவும், துண்டுப் பிரசுரங்களூடாகவும், பதாகை களூடாகவும், முகப்புத்தகத்தினூடாகவும் நேரிலும் எமக்கு ஆறுதல் அளித்த எண்ணி லடங்கா அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொன்னகர் வீதி,
முதலாம் வட்டாரம்,
முள்ளியவளை.

குடும்பத்தினர்
077 299 9669, 077 455 3505

(சி/13186)(7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹலால் போராட்டம் வெற்றியாம்

கொழும்பு, ஒக்.25

ஹலாலுக்கு எதிராக மீண்டும் போர்க்கொடி தூக்கி, கொழும்பிலிருந்து கண்டி தலதா மாளிகை வரை பொது பலசேனா அமைப்பு முன்னெடுத்த வாகனப் பேரணி எதிர்பார்த்ததை விட அமோகமாக வெற்றியளித்துள்ளது.

இவ்வாறு அந்த அமைப் பின் இணைப்பாளர் பேராசிரியர் மிலாந்த வித்தானகே தெரிவித்தார். இந்த ஆண்டை ஹலால் ஒழிப்பு ஆண்டாக நாம் தாம் பிரகடனப்படுத்தவுள்ளோம். இந்தப் போராட்டம் தொடரும் என்று அவர் தெரிவித்தார்.

ஹலாலுக்கு எதிராக கொழும்பிலிருந்து கண்டி தலதாமாளிகை வரை பொது பல சேனா அமைப்பினர் வாகனப் பேரணியை மேற்கொண்டிருந்தனர். இதன் போது கேகாலையில் வைத்து விசேட பூசையுடன் ஹலாலுக்கு எதிரான பரப்புரைக் கூட்டத்தையும் இந்த அமைப்பு நடத்தியிருந்தது. (ச)

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
பதிவு இலக்கமும் திகதியும் : J/1762, 23.10.1985

பணியாளர் வெற்றிடம்

எமது சங்கத்தின் பனை வெல்ல உற்பத்தித் தொழிற்சாலைக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு தகைமையுள்ள விண்ணப்ப தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:- உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (ஒப்பந்த அடிப்படை)

கல்வித் தகைமை:

* க.பொ.த (சாதாரண தரம்) தமிழ்மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
* க.பொ.த உயர்தரம் சித்தி
* உணவு உற்பத்தி மற்றும் பதனிடல் துறையில் முன் அனுபவபம்
* ஆங்கில மொழியில் பாண்டித்தியம் உடையவராக இருத்தல் வேண்டும்
* சந்தைப்படுத்தல் துறையில் 02 வருட முன் அனுபவம்.

உணவு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் துறைசார்ந்த வேறு அனுபவங்கள் தகைமைகள் மேலதிக அனுகூல மாகும்.

* வயது : 18-45
* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
* விண்ணப்ப முடிவுத் திகதி : 02.11.2013
* விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, பண்டத்தரிப்பு.'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

தலைவர்,
பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
(E/13187)(10,14)

# வடக்குக்கு ரூ.1,733 கோடி கிழக்குக்கு ரூ.1,604 கோடி

## மத்திய மாகாணத்துக்கு அதிக நிதியாக 1,952 கோடி

கொழும்பு, ஒக்.25

2014 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்ட வரைபில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் வடக்கு மாகாணத்துக்கு 1,733 கோடி 10 லட்சம் ரூபாவும், கிழக்கு மாகாணத்துக்கு 1,604 கோடி 60 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதியைவிட 2014 ஆம் ஆண் டுக்கு 336 கோடி 80 லட்சத்து 5 ஆயிரம் ரூபா அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த முறை 13,96 கோடி 29 லட்சத்து 95 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மத்திய மாகாணசபைக்கே அதிக நிதியாக 1,952 கோடியே 70 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது இடத்தை சப்ரகமுவ மாகாணம் வகிக்கிறது.

வடக்கு மாகாணத்துக்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதியைவிட 2014 ஆம் ஆண்டுக்கு 3,36 கோடி 80 லட்சத்து 5 ஆயிரம் ரூபா அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது அதிக தொகை யாக வட மேல் மாகாணசபைக்கு 1,747 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டுத் தொகைப்பட்டியலில் வடக்கு நான்காவது இடத்திலும், கிழக்கு ஐந்தாவது இடத்திலும் உள்ளன. ஏனைய எட்டு மாகாணங்களைவிட மேல்மாகாணசபைக்கே குறைந்தளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1,175 கோடியே 50 லட்சம் மேல் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (ச)

# பொது பலசேனாவின் அடாவடிக்கு அரசே முழுப்பொறுப்பு

## முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு

கொழும்பு.ஒக்.25

முஸ்லிம்களின் மத உரிமை யான ஹலாலுக்கு எதிராக பொது பல சேனா அரங்கேற்றி வரும் அடாவடி நடவடிக்கைகளுக்கு அரசே முழுப் பொறுப்பும் கூறவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராக பொது பல சேனா முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை அரசு பார்த்துக் கொண்டிருப்பது கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்று முஸ்லிம் காங்கிரஸ் சீற்றம் வெளியிட்டுள்ளது.

சிங்கள தேசிய கடும்போக்கு அமைப்பான பொதுபலசேனா மீண்டும் ஹலால் எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

ஹலாலுக்கு எதி ரான போராட்டம் ஓயாது என்று அது தெரிவித்துள் ளது. இதுதொடர்பில், முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலர் ஹஸன் அலி தெரிவித்ததாவது.


"பொதுபல சேனா அமைப்பு நாட்டில் வாழுகின்ற முஸ்லிம்களுக்கு எதிராக மீண்டும் கிளர்ந்தெழுந்துள்ளமையால் முஸ்லிம் மக்கள் இன்று நிம்மதியை இழந்துள்ளார்கள்.

ஹலால் என்பது முஸ்லிம் மக்களுக்கான ஒரு கட்டுப்பாடு. இதை வேறு இனமோ அல்லது வேறு சமூகங்களோ பயன்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. விரும்பினால் மட்டும் பயன்படுத்திக் கொள்ளட்டும்.

இதை விடுத்து முஸ்லிம் மக்களின் உரிமைகளில் இவர்கள் தலையிடக் கூடாது. நாட்டின் நீதி என்பது அனைவருக்கும் சமமான ஒன்றே.

ஆனால், இந்த பொது பல சேனா மேற்கொள்ளும் அத்தனை செயல்களையும் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுதான் மிகவும் கவலையளிக்கிறது. -என்றார்.

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் தியாகராஜா

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி, காரைநகரை வசிப்படமாகவும், தற்போது இல. 52A, வஜிர வீதி, கொழும்பு 05ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கம்பஹா பிரபல வர்த்தகர் **சுப்பிரமணியம் தியாகராஜா** 23.10.2013 (புதன் கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வர்த்தகர் சுப்பிரமணியம் மற்றும் செல்லாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் அவர்களின் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு மற்றும் வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும். **காலஞ்சென்ற மகேஸ்வரன் (முன்னாள் இந்து கலாசார அமைச்சர்)** மற்றும் பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன், ஞானேஸ்வரன், துவாரகேஸ்வரன் திருமகள் ஆகியோரின் தந்தையாரும், விஜயகலா, சுதர்சினி, ஜெயசங்கரி, நிறைமதி, சிவமலர், சுரேந்திரன் ஆகியோரின் மாமனாரும். பவதாரணி, பிரணவன், பவித்திரா, நிலுக்ஷன், நீபன், நிதுரன், கோகுலன், நேத்திரா, அனோஜன், அஸ்வின், அரவின், சஜீவன், சரன், சேயோன், சயன், சகி ஆகியோரின் பேரனாரும் சிவசோதி, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், சரஸ்வதி, செல்லம்மா, மீனாட்சிப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை, இராசநாயகம், மாரிமுத்து, சுப்பிரமணியம் மற்றும் யோகம்மா பரமேஸ்வரி அம்பலவாணர் பூரணம் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் மற்றும் தாட்சாயினி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், கணபதிப்பிள்ளை குமாரசுவாமி, வைத்திலிங்கம், பரமசிவம் மற்றும் ஏனாதிநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 52A, வஜிரா வீதி, கொழும்பு 05 இலுள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 27.10.2013 (ஞாயிற்றுக்கிழமை) காலை 7.00 மணிக்கு இல்லத்தில் ஆரம்பமாகி தகனக்கிரியைகள் காலை 9.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**- தகவல் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**தொ.பே. இல.: 0777 306473 (பரமேஸ்வரன்)**
**: 0777 306304 (சுரேந்திரன்)**
**: 0777 674119 (துவாரகேஸ்வரன்)**

(C/13187)(10,14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவுரையாளர் பணிக்காலம் 70 வயது வரை நீடிப்பு

### கிடைத்தது அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு.ஒக்.25
பல்கலைக்கழகங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் விரிவுரையாளர்களுக்கு 70 வயது வரை ஒப்பந்த அடிப்படையில் சேவையை நீட்டிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தத் தகவலை உயர்கல்வி அமைச்சின் செயலர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

65 வயதில் ஓய்வு பெறும் விரிவுரையாளர்கள் மேலதிகமாக 5 வருடங்களுக்கு சேவையாற்ற முடியும். ஓய்வு பெறும் விரிவுரையாளரின் சேவை குறித்த பல்கலைக் கழகத்துக்கு இன்றியமையாதது எனக் கோரப்படும் பட்சத்தில் மாத்திரமே, அவர்களுக்குரிய சேவைக் காலம் நீட்டிக்கப்படும். ஆயினும் ஒப்பந்தங்கள் 70 வயது வரை வருடந்தோறும் புதுப்பிக்கப் படும்.

எனினும் விரிவுரையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் காலப்பகுதியில் துணைவேந்தர், பீடாதிபதி, பிரிவுத் தலைவர் உள்ளிட்ட எந்தவொரு பதவியையும் அவர்கள் வகிக்க முடியாது.

பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் அமைச்சரவையின் இந்த அங்கீகாரம் பற்றாக்குறையைத் தீர்க்க ஓரளவு உதவும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதன் மூலம் சேவையிலிருக்கும் ஏனைய இளம் விரிவுரையாளர்களின் சேவை மற்றும் பதவி உயர்வு என் பன பாதிப்படையாத வகையிலேயே அனைத்துச் செயன்முறைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

விரிவுரையாளரொருவர், அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னரான 3 வருடங்களுக்குள் பல்கலைக்கழகத்துக்கும் மாணவர்களுக்கும் ஆற்றிய சேவை, ஆராய்ச்சி என்பவற்றின் அடிப்படையிலேயே அவரது சேவைக்காலம் நீடிக்கப்படுவது குறித்து தீர்மானிக்கப்படும். -என்றார். (ச)

# பொதுநலவாய உச்சி மாநாட்டால் பயணிகள் விமானசேவை பாதிப்பு

### கூறுகிறது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை



கொழும்பு.ஒக்.25
கொழும்பில் பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ள காலப்பகுதியில் இலங்கைக்கான பயணிகள் விமானப் போக்குவரத்து பாதிக்கப்படலாம் என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் சி.நிமலசிறி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுநலவாய மாநாட்டுக்காக முக்கிய பிரமுகர்களின் விமானங்கள் வரும்போது, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் விமானங்களுக்கு ஏற்படும் இடையூறுகளை முடிந்தளவில் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

மாநாட்டின் போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில், முக்கிய பிரமுகர்களின் விமானங்களின் வருகைக்கே முன்னுரிமை கொடுக்கப் படும். அதனால், திட்டமிடப்பட்ட பயணிகள் விமான சேவைகளுக்கு இடையூறுகள் ஏற்படலாம். எனினும் அத்தகைய பாதிப்புகளை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

பெரும்பாலான, அரச தலைவர்கள் குறிக்கப்பட்ட சில மணி நேரத்துக்குள் மாநாட்டுக்காக வருகை தரலாம் என்பதால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் நெருக்கடி ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இந்த நெருக்கடிகள் மாநாடு முடிந்து அவர்கள் புறப்பட்டுச் செல்லும் வரை நீடிக்கும்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு, நாளாந்தம் வரும் பயணிகள் விமானங்களை விட மேலதிகமாக 35 வரையிலான விமானங்கள் மாநாடு இடம்பெறும் சமயத்தில் வரக்கூடும்.

சில நாடுகளின் தலைவர்கள் தமது சொந்த விமானங்களில், பாதுகாப்பு விமானங்களின் துணையுடன் வரக்கூடும். சில தலைவர்கள் பயணிகள் விமானங்களிலும் வருவர்.

முக்கிய பிரமுகர்கள் வரும் விமானங்களால், கட்டுநாயக்க விமான நிலையத் தரிப்பிடங்கள் நிரம்பினால், ஏனைய விமானங்கள் மத்தல மற்றும் இரத்மலான விமான நிலையங்களுக்குத் திருப்பி விடப்படும்.

பெரும்பாலான வெளிநாட்டுத் தலைவர்கள் சொந்தமான சிறப்பு விமானங்களிலேயே வருவர் என்பதால், அதிகளவில் தனியார் விமானங்கள் கட்டுநாயக்க வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானங்களுக்கு எவ்வாறு அனுமதி வழங்கப் படும் என்பது குறித்து சகல அரசதலைவர்களுக்கும், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அறிவித்துள்ளது. அவர்கள் அதற்குப் பதிலளிப்பார்கள்.-என்றார். (ச)

## சட்டவிரோதமாக நிலத்தை உழுத இருவர் கைது

அம்பாறை.ஒக்.25
அம்பாறை.திருக்கோவில், வட்டமடு வனப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்ட விரோதமாக நிலத்தை உழுது கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து வட்டமடு வனப்பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை பொத்துவில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் காடுகளை அழித்த 30 பேர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முதலீட்டுத் துறைகளை விளக்கும் கண்காட்சி

### 13 முதல் 17 ஆம் திகதி வரை



கொழும்பு.ஒக்.25
பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு 'இலங்கையின் பிரதிபலிப்பு' என்னும் தலைப்பில் வர்த்தகம், சுற்றுலா, முதலீடு தொடர்பில் விளக்கமளிக்கும் மாபெரும் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இந்தக் கண்காட்சி பத்தரமுல்லையிலுள்ள ஜனகலா கேந்திர மத்திய நிலையத்தில் எதிர் வரும் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடத்தப் படவுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை 2020 ஆம் ஆண்டளவில் 20 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிப்பதற்கான அடிப்படைத்தளமாக இந்தக் கண் காட்சி அமையும் என்று கைத்தொழில் மற்றும் வர்த் தக அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டுக்காக இலங்கைக்கு வரும் 53 நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அதனையொட்டி நடைபெறவுள்ள வர்த்தகப் பேரவையில் பங்குபற்றும் நாடுகளின் அமைப்பில் உறுப்புரிமை பெறாத ஏனைய நாட்டினரையும் இலக்கு வைத்தே கண்காட்சி நடத்தப்படவுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகம், முதலீட்டு ஊக்குவிப்புச் சபை ஆகியன இலங்கை தேயிலை சபை, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையுடன் இணைந்து இந்தக் கண்காட்சிக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இந்தக் கண்காட்சியில் நேரடி ஏற்றுமதியாளர்கள் உட்பட 700 பேர் பங்குபற்றவுள்ளனர். தேயிலை, ஆடை, மாணிக்கக்கல், ஆபரணங்கள், வாசனைத் திரவியங்கள், உணவு, இறப்பர் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ச)

# பாலியல் துன்புறுத்தல் பெண்கள் மீது அதிகரிப்பு

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் ஒடுக்கப்ப டுவதுடன், பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று பிரிட்டனை மைய மாகக் கொண்டு இயங்கி வரும் சிறுபான்மை உரிமைகள் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டில் போர் நிறை வுக்குக் கொண்டு வரப் பட்ட போதிலும், பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறைவடைய வில்லை.

வறுமை மற்றும் வாழ்வதாரப் பிரச்சினை காரணமாக அதிகளவான பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு இலக்காகக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. இராணுவத் தினர், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஏனைய தரப்பினராலும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சிறுபான்மை உரிமைகள் குழு தெரிவித்துள்ளது. தமிழ் முஸ்லிம் பெண்கள் தங்களது பாதுகாப்பு குறித்து கவலை கொண்டுள்ள போதிலும் அது தொடர்பில் தகவல் வெளிப்படுத்துவதில்லையென்று [illegible] வலயப் பொறுப்பாளர் ப்ரஹா மில்லர்


## விற்பனைக்கு

சில மாதங்கள் மட்டுமே பாவித்த உணவு விடுதியின் பொருள்கள் உடன் விற்பனைக்கு T.P:- 0773068855

10ஆவது பிறந்தநாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013.10.25 இல் பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடும் கோபாலகிருஷ்ணன்-புனிதநாயகி தம்பதியரின் செல்வப் புதல்வன்

G.ரம்சன்

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்விகற்று 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளதைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் கல்வியில் சிறப்புற இந்நாளில் வாழ்த்துகிறோம்.

Congratulations



வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அக்கா, தங்கை, அம்மம்மா, பெரியப்பா குடும்பத்தினர் (சுவிஸ்) மாமா குடும்பம் (பிரான்ஸ்), பெரியம்மா குடும்பம் (ஹொலன்ட்), ஆசிரியர்கள்.

Science Hall - Alaveddy

மானிப்பாய் ஆலடிச் சந்தியில்....

Micro System Development Centre

Micro System இன் புதிய காட்சியறை திறப்புவிழாவை முன்னிட்டு...

நம்ப முடியாத விலையில்

intel pentium i3 3.20Ghz
Intel Board G61
DDR III 2Gb
H/D 500Gb
Sumsung LED 19"
UPS, Keyboard, Mouse
1Y, 2Y, 3Year Warranty
60000/=

Huawei Dongle 7.2Mb- 2 999/=

Dell
intel pentium i3
DDR III 2Gb
H/D 500Gb
DVD R/W
59 999/=

Kingston 4Gb - 899/-
Kingston 8Gb - 1099/-

Sumsung 19"
AOC !9"
HP 19"
12 999/=

Sunshine 650W
Tree Ace 650w
DPC 650W
4499/=

Hp 2000
intel pentium i3
DDR III 2Gb
H/D 500Gb
DVD R/W
61 999/=

7500/= upto
Laptop Battery All Modal

Laptop Display all Size 8500/= upto

25/10/2013 முதல் 3 நாட்கள் வரை மட்டுமே

ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.
021 3218462, 077 2487082


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி கையகப்படுத்தலை தடுக்க வடக்கில் விசேட குழு வேண்டும்

## அம்பாறை காரைதீவு பிரதேச சபை தலைவர் கோரிக்கை

அம்பாறை, ஒக்.25

"வடக்கில் முறைகேடாக இராணுவத்தினராலும், சில அரசியல்வாதிகளாலும் கையகப் படுத்தப்பட்டு கபளீகரம் செய்யப் பட்டுள்ள அரச மற்றும் தனியார் காணிகள் இனம் காணப் பட வேண்டும். இதற்கென வட மாகாண சபை குழு ஒன்றை நியமித்து நடவடிக்கை மேற் கொள்வதுடன் முறையற்ற காணிக் கையாடல்களுக்கு முற்றுப்புள்ளியும் வைக்க வேண்டும்."

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தரும், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான இராசையா கேட்டுள்ளார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையின் புனரமைப்புப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

" தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில், மக்களின் காணிகள் முறையற்ற வகையில் கையகப் படுத்தப்பட்டு கபளீகரம் செய்யப்படும் நிலைமை தொடர்ந்து வருகின்றது.

புதைபொருள் ஆராய்ச்சியென்ற போர்வையிலும், யானை வேலி என்ற போர்வையிலும் காணிகளை அரச துணையோடு கபளீகரம் செய்யப்படும் நிலையே இன்றுள்ளது.

கிழக்கில் தமிழர் பாரம்பரிய பிரதேசங்களில், இந்து ஆலயங்கள், மலைகள் உள்ள பிரதேசங்கள் புதைபொருள் ஆராய்ச்சியென்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லை போடுவது மட்டுமன்றி மக்கள் விருப்பமின்றி பௌத்த இலச்சினைகளைப் பதிப்பதிலும் அரசு கவனம் செலுத்துகின்றது.

தமிழ் மக்களின் தனித்துவத்தைக் களங்கப்படுத்தவும், கெடுக்கவுமே இத்தகைய செயற் பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பௌத்த பேரினவாதமும் அரசும் தூர நோக்கோடு முன்னெடுத்து வரும் இத்தகைய நடவடிக்கைகள் குறித்து நாம் விழிப்புடனிருக்க வேண்டும்.

இதற்கு ஏதுவாகத் தமிழ் மக்கள், அஹிம்சை வழிப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியகாலம்வெகுதூரத்திலில்லை.

வடக்கின் சுமார் 24 வருடங்கள் நீர்ப்பாசன தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய வகையில் வடக்கு நிலைமைகளை நன்கறிந்தவன் நான்.

இங்கு வரையறையின்றி கட்டடங்களும், ஹோட்டல்களும், வியாபார நிலையங்களும் அமைக்கப்படுகின்றன. இவற்றை யார் அமைக்கிறார்கள். அனுமதி கொடுத்தது யார் என்பதெல்லாம் தெரியாமல் உள்ளது. திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும் கூட இடம்பெற்று வருகின்றன. இவற்றுக்கும் தமிழ் மக்களின் சொந்தக் காணிகளும், அரச காணிகளுமே கையாடப் பட்டுள்ளன.

இத்தகைய முறையற்ற செயற் பாடுகள் வடக்கு மண்ணில் இன்னும் தொடரக் கூடாது.

வட மாகாண சபை குழுவொன்றை அமைத்து வடக்கில் இராணுவத்தாலும், அரசியல் சக்திகளாலும் கபளீகரம் செய்யப்பட்டு கையகப்படுத்தப் பட்டுள்ள நம் மக்களின் காணிகள், அரச காணிகள் இனம் காணப்பட்டு அவற்றை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் மேலும் நம் காணிகள் ஆக்கிரமிக்கப்படவோ, கையகப்படுத்தப்பட்டு கபளீகரம் செய்யப்படவோ சிறிதும் இடமளிக்காது, இத்தகைய செயற் பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இன்று முன்னணி தொழிற் சங்கமாகத் திகழும் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம்; ஆயுதப் போராட்ட காலத்திலும் சரி, போராட்டம் முடிவுற்ற பின்னரும் சரி தொழிலாளர்களுக்காக என்றும் ஆணித் தரமாகக் குரல் கொடுத்து வருகின்றது.

குறிப்பாக தமிழ்த் தேசியத்திற்காகவும், தமிழர் உரிமைக்காகவும் குரலெழுப்பி வரும் இச் சங்கத்தின் தலைவர் லோகநாதனின் துணிச்சல் மிக்க செயற் பாடுகள் பெரிதும் பாராட்டத் தக்கவையாகும்' - என்றார். (ஐ-30)

### மகேஸ்வரனின் தந்தையார் காலமானார்

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனின் தந்தையார் கே.எஸ். தியாகராசா 88 வயதில் நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானார்.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கம்பஹாவின் பிரபல வர்த்தகராவார். இவரது பூதவுடல் இல52 ஏ, வஜிரா வீதியிலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் இறுதிக்கிரியைகள் இடம்பெறும். (த-400)



இன்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு நடைபெறுகிறது. அதற்கான ஒத்திகை நிகழ்வு நேற்று நடைபெற்றபோது.... (த-21)

# போதனா வைத்தியசாலை தொண்டர்கள் நிரந்தர நியமனத்தில் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ். போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் தொண்டர்கள், முன்னர் குறிப்பிடப்பட்ட கல்வித் தராதரத்தின் அடிப் படையில் தமக்கு நிரந்தர நியமனம்வழங்குமாறுகோரியுள்ளனர்.

வைத்தியசாலையில் பணிபுரியும் தொண்டர்களை நியமனம் செய்யும் பொருட்டு அவர்களுக்கு நாளை சனிக்கிழமை நேர்முகத் தேர்வு நடக்கவுள்ளதாக சுகாதார அமைச்சிலிருந்து அறிவிக் கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் நேற்று ஒன்று கூடி நியமனம் தொடர்பில் கலந்துரையாடினர்.

இது தொடர்பில் தொண்டர்கள் தெரிவித்ததாவது:-

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் இலங்கை செஞ்சிலுவை அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 250பேர்வரை வைத்தியசாலையில் சுகாதாரப் பணியாளர்களாக தொண்டர் அடிப்படையில் பணிபுரிகின்றனர்.

அவர்களில் பெரும்பாலானோர் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தப் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள். தரம் 8 வரை கல்வி பயின்றிருந்தால் போதும் என்ற தராதரத்தின் அடிப்படையில் அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு நாளாந்தம் 175 ரூபா மாத்திரமே கூலியாக வழங்கப்படுகிறது.

"வேலையின்மை மற்றும் வீட்டு வறுமை காரணமாக இன்று வரை வைத்தியசாலையில் தொடர்ந்து பணியாற்றுகிறோம். விடுமுறையில் நின்றுவிட்டால் அந்த நாளுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படாது. நியமனம்வழங்கப்படும் என்ற நம்பிக்கையிலேயே தொடர்ந்தும் நாம் 3 வருடங்களாகப் பணியாற்றுகிறோம். இந் நிலையில் நேர்முகத் தேர்வு நடத்தப்படவுள்ளதாகவும், நியமனம் செய்வதாக இருந்தால் ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது 2 சி உட்பட 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனை 2009 இல் அல்லது அதற்குப்பின்னராவது தெரிவித்திருந்தால் எமக்கு ஏற்றபடி உரிய வேலையைத் தெரிவு செய்திருப்போம்.

இதுவரை அது பற்றித் தெரிவிக்காது வைத்தியசாலையில் வேலை வாங்கி விட்டு இப்போது தராதரம் கேட்கிறார்கள். நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது தொடர்பில் சிலருக்கு மாத்திரம் கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது" என்று தொண்டர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, அது தொடர்பில் தமக்கு உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றும் கூறினார். (த-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பொதுநலவாயக்

மாதம் நடக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்பதை வலியுறுத்தி தமிழக சட்ட சபையில், முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றுத் தீர்மானத்தை முன் மொழிந்தார்.

"தமிழக மக்களின் ஒருமித்த கருத்துக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா முற்றிலும் புறக்கணிக்க வேண்டும். பெயரளவில் கூடி இந்திய நாட்டின் சார்பாகப் பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது. இது குறித்த இந்தியாவின் முடிவை இலங்கைக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களவர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை பொது நலவாயக் கூட்டமைப் பிலிருந்து இலங்கையை தற்காலிகமாக நீக்கி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இந்தியப் பேரரசை தமிழ் நாடு சட்ட சபை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது". என்று முதல்வர் ஜெயலலிதா தீர்மானத்தை முன்மொழிந்தார். இந்தத் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது. (த-5)

### வடக்கு

காரங்களைத் தாம் எடுத்து உபயோகிக்கின்றார்கள். நான் பதவியேற்ற பின்னர் நிகழ்ந்த மத்திய அரச அலுவலர்களின் அல்லது அமைச்சர்களின் நடவடிக்கைகள் பல சட்டப்படி கேள்விக் குரியதாகிவிட்டுள்ளன.

இவர்கள் எத்தகைய அதிகாரங்களை முன்வைத்து அவ்வாறு செய்தார்கள் என்று அவர்களை நீதிமன்றங்கள் கேள்வி கேட்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இனியும் பிழையான நடவடிக்கைகளில் அமைச்சர்களோ, அலுவலர்களோ ஈடுபடாமல் இருக்க வேண்டும்.

அமைச்சர்களோ, அலுவலர்களோ சட்டத்தின் கீழ் தமக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலே ஒழிய தமக்கு அதிகார மில்லாத காரியங்களில் ஈடுபடுவதை இனியாவது தவிர்ப்பார்கள் என்று நம்புகின்றேன். எமது அரசியல் யாப்பு மாகாண சபைகளுக்கென்றே பல அதிகாரங்களைக் கொடுத்துதவியுள்ளது. அவற்றைப் பிரயோகிக்கும் உரித்து மாகாண சபைகளுக்கே அல்லது வேறு எவருக்கும்இருக்கமுடியாது அந்த உரித்துக்களை எவராவது துஷ்பிரயோகம் செய்யத் துணிவார்களேயானால் சட்டம் அவர்களைக் கட்டாயம் தண்டிக்கும் என்பதைத் திடமாக்க கூறுகின்றேன் - என்றார். (த-5)

### கொல்லப்பட்ட

மதகுருமார் ஒன்று கூடி அஞ்சலி செலுத்தினர்.

ஏ - 9 வீதியில் யாழ். வளைவுக்கு அருகில் இந்தக் கவன வீர்ப்புப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. ஆண்கள், பெண்கள் அருட் தந்தையர், அருட் சகோதரிகள் எனப் பலர் இதில் பங்கேற்றனர்.

ஏ-9 வீதி அரியாலையில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றிலிருந்து பேரணியாகச் புறப்பட்ட இவர்கள் யாழ். வளைவுக்கு அருகில் உள்ள மயானத்தில் பெண்ணின் உடல் புதைக்கப்பட்ட இடத்தக்குச் சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன் பின்னர் ஏ-9 வீதியோரமாக நின்று இவர்கள் கவன வீர்ப்புப் போராடத்தில் ஈடுபட்டனர். வீதியால் சென்றவர்களும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

"உன்னைப்படைத்த பெண்ணைச் சிதைக்காதே', " எமது வாழ்க்கையை அழிக்காதே', "எமது வேதனை உனக்கு புரியவில்லையா', 'வன்முறையற்ற சமத்துவமான சமூகத்தை நோக்கி எம் உறவுகள் ஒன்றிணைத்து போராடுவோம்', பாலியல் பலாத்கார செயல்களை இல்லாமல் செய்வோம்", என்று எழுதப்பட்ட வாசகங்களைத் தாங்கிய வாறு இவர்கள்போராட்டத்திலீடுபட்டனர்.

அரியாலை நெடுங்குளம் வீதியைச்சேர்ந்த மார்க்கண்டு ஜோகராணி (வயது -45) என்ற பெண்ணே கடந்த வாரம் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இது போன்ற சம்பவங்கள் இனி மேல் எவருக்குமே நடக்க கூடாது என்று கோரிகவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (த-4-51)

### அற்ப, சொற்ப

தின் காணிகள் இன்று சூறையாடப்படுகின்றன. மக்களின் பாதுகாப்பு கேள்விக்கிடமாக்கப் பட்டுள்ளது. இவற்றுக்கு முகம் கொடுக்கவே சட்டவாக்கங்களில் மாகாண சபைக்குப் பொலிஸ் அதிகாரங்களும், காணி அதிகாரங்களும் கொடுக் கப்பட்டுள்ளன. அவற்றை நாம் சட்டப்படி நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

எமது மத்திய அரசு வடக்கு மாகாண சபைக்கு இவ்வாறான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டிய அத்தியாவசியத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு போதிய செல்வாக்கைக் கைவசம் வைத்துக்கொண்டே மேற் படி அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றை வழங்குவதில் மத்திய அரசு தயக்கம் காட்டக் கூடாது. தயக்கம் காட்டுவதால் சிறுபான்மை மக்கள் தமது வாழ்க்கையைச் சீரமைத்துச் செல்வதை மத்திய அரசு விரும்ப [illegible] என்றார். (த-5)

### போரில்

தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பிரச்சினைகளும் ஒரே மாதிரியானவை.

ஆனால் மலையகம் வாழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமாகலாம். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் வேறுபட்டவை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நாங்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தை மட்டும் எடுத்துப் பார்த்தால், ஏனைய 7 மாகாணங்களிலிருந்தும் வேறுபட்டுள்ளோம்.

எங்கள் மொழிவேறு, எமது மதங்கள் வேறு, எமது நிலங்கள் வேறுவிதமானவை. எமது கலாசாரம் வேறுபட்டது. எமது வாழ்க்கை முறை வேறுபட்டது.

இதனைவிட முக்கியமானது, நாங்கள் போரின் போது அடிபட்டு, இடிபட்டு அல்லலுற்ற ஒரு மாகாணம். எம்மை ஏனைய மாகாண மக்களுக்குச் சமமாக வாழ வைப்பதானால் அதற் கான செலவுகள் மற்றைய மாகாணங்கள் ஒவ்வொன்றுக் கும் ஒதுக்கப்படும் நிதித் தொகையிலும் பார்க்கப் பன்மடங்காக உயர வேண்டும்.

மத்திய அரசு, போரினால் பாதிக் கப்பட்டுப் பலவித அவலங் களுக்கு உள்ளாகியுள்ள மக் களைப் பிரதிநிதித்துவப்படுத் தும் எமது வடக்கு மாகாண சபைக்கு போதுமான நிதி உதவிகளை ஒதுக்குவது உசிதமானது.

அதிகாரப் பரவலின் அடிப்படைகளை மறந்துவிட்டு மத்திய அரசு தன்னை முதன்மைப் படுத்தி, மத்திய அரசுக்கு அனுசரணையாகவே மாகாண சபைகள் இயங்க வேண்டும் என்று கூறுவதை நான் அவதானித்துள்ளேன்.

அதிகாரப் பகிர்வானது மத்திய அரசைப் பலப்படுத்தவோ, அதனை முதன்மைப்படுத்தவோ, வகுக் [illegible] மல்ல. மத்திய அரசு, வலிமை குறைந்த மாகாண மக்களை எழுப்பித் தமது கால்களில் அவர்களை நிற்கவைக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே மேற்படி உபாயம் வகுக் கப்பட்டது.

எமது மாகாண சபைகளுக்கு மத்திய அரசு அனுசரணையாக இயங்க வேண்டுமே தவிர, மத்திய அரசுக்கு முண்டுகொடுக்க மாகாண சபைகள் முன்வர வேண்டும் என்று எதிர்பார்ப்பது அதிகாரப் பரவலின் தாற்பரியத்தை மத்திய அரசு அறிய முற்படவில்லை என்ற கருத்தையே வலியுறுத்தும்.

எமது வடக்குமாகாணம்போரின் பின்னர் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளது. அதனைக் கட்டியெழுப்புவது நாட்டின் தலையாய கடனாகும். அதனை ஈடு செய்யும் விதத்தில் மத்திய அரசு நடந்துகொள்ள வேண்டும் - என்றார். (த-5)

### நல்லூர்

யினருக்குக் கிட்டு பூங்காவை வழங்குவது தொடர்பில் யாழ். மாநகர சபையின் அபிப்பிராயத்தை நல்லூர் பிரதேச செயலகம் கோரியுள்ளது. (த-5-7-2)

### 2000

இதற்காக் வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்கு மன்னார் பிரஜைகள் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய மன்னார் பிரஜைகள் குழு கடந்த வாரம் வடக்கின் சகல பகுதிகளுக்கும் நேரில் சென்றுபதிவுகளை மேற்கொண்டது. இதன் போது 2ஆயிரம் பேர் பதிவினை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது வவுனியாவில் சிவநேசமலர், கோதண்டர் நொச்சிக்குளம், சாஸ்திரி கூழாங்குளம் என்ற முகவரியிலும், ஜெனிதா, 119, வீட்டுத்திட்டம், மாரம்பைக்குளம் வவுனியா என்ற முகவரியிலும் பதிவுகள் இடம்பெறுகின்றன. இதுதொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 078 6302170 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ள முடியும். கிளிநொச்சியில் கனகரஞ்சினி இல. 59, தொண்டமான் நகர், கிளிநொச்சி என்ற முகவரியிலும், 077 8087759 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் கமலநாயகி, 16, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும்,

முல்லைத்தீவில் மாகாண சபை உறுப்பினர் கனகசுந்தர சுவாமியின் இல்லத்திலும் மாகாண சபை உறுப்பினர் ரவிகரனின் இல்லத்திலும் பதிவுகளை மேற் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### இலங்கை

மியன்மார் நாட்டின் எதிர்க்கட்சி தலைவியும், அமை திக்கான நோபல் பரிசு பெற்ற வருமான ஆங்சான் சூகிக்கும் இடையில் லண்டனில் நேற்று முன்தினம் புதன்கிழமைசந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், இலங்கைக்குச் செல்வதனால் அந்த அரசுடன் மட்டுமன்றி சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினருடனும் பேச வேண்டும் என்று கமரூனிடம் ஆங்சான் சூகி வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த கமரூன், சூகி சொன்னது மிகவும் சரியானது. இலங்கைக்கு செல்லும் போது, வட பகுதிக்கும் செல்வேன் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து தான் மகிழ்ச்சியடையவில்லை என்றும், முன்னணி நாடுகளின் மாநாட்டில் பங்கேற் பதற்காகவே அங்கு செல்ல முடிவு செய்துள்ளதாகவும் கமரூன் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசுடன் மிகவும் இறுக்கமான பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கையில் இடம்பெறவுள்ள 20ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான மாராணி குறுங்கோல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாகக் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற குறுங்கோல் தொடர் ஓட்டக் குழுவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர். (த-23)

## சம்பியனானது ஜமாலியா

யாழ்ப்பாணம், ஒக்.25
திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சாம்பல்தீவு வில்லியம் விளையாட்டுக்கழகம் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஜமாலியா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை சாம்பல் தீவு வில்லியம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஜமாலியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜின்னா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஜமாலியா விளையாட் டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# ஞானமுருகன் வென்றது

யாழ்ப்பாணம், ஒக்.25
மாலுசந்தி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.
கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் ஞான முருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 3 கோல்களைப் பெற்றிருந்தனர்.
இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில வெற்றி பெற்றது.
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் பொலிகண்டி விண்மீன்



இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்ற நிலையில் போதிய வெளிச்சம் இன்மையால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்ற நிலையில் போதிய வெளிச்சம் இன்மையால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது. (த-23)

# திறமை வாய்ந்த வீரர்களை வடக்கில் உருவாக்குங்கள்

### மாகாண அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.25
கிளிநொச்சியில் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான திட்டங்களை வகுத்து சிறந்த விளையாட்டு வீரர்களை இனங்கண்டு பயிற்சிகளை வழங்கி வடக்கில் திறமையான வீரர்களை உருவாக்க வேண்டும் என மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.
கடந்த புதன்கிழமை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அதிகாரிகள், விளையாட்டுத் துறை உத்தியோகத்தர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் விளையாட்டுத் துறை அபிவிருத்தி குறித்து விரி வாக கலந்துரையாடப்பட்டது. இதில் 5 மாவட்டங்களையும் சேர்ந்த விளையாட்டு உத்தி யோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுநர்கள், விளையாட்டு இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23)



## கழகங்களின் கூட்ட அறிக்கைகள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.25
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்கள் கூட்டங்களை நடத்தி அது தொடர்பான அறிக்கைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

## சென்.ஜோசப்-கிண்ணியா மத்தி உதைபந்தாட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக்.25
திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரி, திருகோணமலை கிண்ணியா மத்திய கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிய ளவில் திருகோணமலை ஏகாம்பரம் விளை யாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவகர சர்மா கலந்து கொள்ளவுள்ளார். (த-23)

## நாளைய மோதல்



யாழ்ப்பாணம், ஒக்.25
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்துக்காக 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வவுனியா வைரவர் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் வவுனியா யூனிபைட் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு எண் யூட் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான வடமாகாண கராத்தே சுற்றுப்போட்டி கடந்த வாரம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.
இதில் பங்குபற்றிப் பதக்கங்கள் பெற்ற எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் உதவி இயக்குநர் அச்சுனன் மற்றும் பயிற்றுவிப்பாளர் சென்சேய் விஜயராஜ் ஆகியோருடன்.. (த-23)


# திருகோணமலை லீக்கின் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.25
திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கினால் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் பற்றிமா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இதில் பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் றஜீத் றொட்றிக்கோ கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் உபாலி கேவகே, கௌரவ விருந்தினராக திருகோணமலை நகர சபைத் தலைவர் எஸ்.செல்வராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

# உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளின் ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஒக்.25
உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
**16 வயதுப் பிரிவு**
ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.
இணுவில் மத்திய கல்லூரி எதிர் ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.
சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலயம் எதிர் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம்.
**19 வயதுப் பிரிவு**
ஏழாலை மகா வித்தி யாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி. (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உசைன் போல்ட்டுக்கு தடை?

குறுந்தூர ஓட்ட வீரர் உசைன் போல்ட்டுக்கு ஒலிம்பிக் போன்ற சர்வ தேச போட்டிகளில் கல ந்து கொள்ள இயலாது த டை வி தி க் க ப் ப டு ம் அபாயம் ஏற்பட்டுள்ளது.

போதைப் பொருள் மற் றும் ஊக்கச் சத்து குறித்து சர்ச்சைகளைக் கையா ள்வதில், ஜமெய்க்காகாட் டுக்கின்ற பின்ன டைவே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படு கிறது.

உலக ஊக்கமருந்து தடை நிறுவகனத்தின் தலைவர் ஜோன் பாஹி இதனைத் தெரிவித்துள் ளார். (கு)

## வெற்றியை சச்சினுக்கு பரிசளிக்க விருப்பம்

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்க ருக்காக ரஞ்சி கிண்ண போட்டியில் வெற்றி பெற விரும்புகிறோம் என மும்பையைச் சேர்ந்த வீரர் ரகானே தெரிவித்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பாக ரஞ்சிக் கிண்ண போட்டியில் மும்பாய் அணிக்காகச் சச்சின் டெண்டுல்கர் விளையாடுகிறார்.

அரியானாவுடன் மோதும் இந்த போட்டி வருகிற 27ஆம் திகதி நடக்கிறது. இதற்கான பயிற்சி களையும் சச்சின் தொடங்கி விட்டார்.

இந்நிலையில் சச்சினுக்காக இந்த போட்டியில் வெற்றி பெற விரும்புகிறோம் என்றும், அந்த வெற் றியை அவருக்கு பரிசாக வழங்க விரும்பு கிறோம் என்றும் மும்பாயைச் சேர்ந்த வீரர் ரகானே கூறி யுள்ளார். மற்றொரு மும்பாய் வீரர் அபிஷேக் நாய ரும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார். (கு)



## முன்னாள் அணித்தலைவர் கார் விபத்தில் படுகாயம்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான ரிச்சி பெனாட் கார் விபத்தில் படுகாயமடைந்துள்ளார். ஆஸ்திரேலிய அணியின் அணித்தலைவராக இருந்தவர் ரிச்சி பெனாட், பின்னர் வர்ணனையாளராக மாறினார்.

83 வயதிலும் கூட உலகின் சிறந்த வர்ணனையா ளராக இருந்து வருகிறார். ஆஸ்திரேலியாவின் சனல் 9 வர்ணையாளர் குழுவில் இவரும் ஒருவர் ஆவார்.

இந்நிலையில் இவர் தனது காரைத் தனியாக ஓட்டிச் சென்ற போது சாலையோரம் இருந்த சுவரில் அது மோதி விபத்துக்குள்ளானதில், அவர் படுகாயமடைந் தார். (கு)

# சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட முடிவுகள்

இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் பயேர் லெவெர் குசேன், மன்செஸ்ரர் யுனைட்டட், கலட்டசரே, றியல் மட்ரிட், பரிஸ் செய்ன்ற் ஜேர்மைன், பென்பிகா, பயேர்ண் முனிச் அணிகள் வெற்றிபெற்றன.




பயேர் லெவெர்குசேன் அணிக்கும், ஷக்தர் டொனெட்ஸ்க் அணிக்கு மிடையிலான போட்டி யில் பயேர் லெவெர்கு சேன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அவ்வணி சார்பாக 22ஆவது, 50 ஆவது, 57ஆவது, 72 ஆவது நிமிடங்களில் கோல்கள் பெற்றுக் கொள் ளப்பட்டிருந்தன.

மன்செஸ்ரர் யுனைட்டட் அணிக்கும், றியல் சோசியடாட் அணிக்குமிடையிலான போட்டி யில் மன்செஸ்டர் யுனைட்டட் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. போட்டியின் இரண்டாவது நிமிடத்தில் வெய்ன் ரூனி அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பி வர, அதைத் தடுக்க முனைந்த றியல் சோசியடாட் அணியின் வீரர் இனிகோ மார்ட்டினேஷின் காலில் பட்டு அந்தப் பந்து கோலானது.

கலட்டசரே அணிக்கும், கோபென் ஹவன் அணிக்குமிடையிலான போட்டியில் கலட்டசரே அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற் றது. கலட்டசரே அணி சார்பாக 9ஆவது, 32ஆவது, 38ஆவது நிமி டங்களில் கோல்கள் பெறப்பட்டதோடு, கொப்பன்ஹவன் அணி சார்பாக 88ஆவது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டது.

றியல் மட்ரிட் அணிக்கும், ஜுவன்டஸ் அணிக்குமிடையிலான போட்டியில் றியல் மட்ரிட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. றியல் மட்ரிட் சார்பாக 4ஆவது நிமிடத்திலும், 29ஆவது நிமிடத்தில் கிறிஸ்ரியானோ றொனால்டோ கோல்களைப் பெற்றுக் கொடுத்தார். ஜுவன்டஸ் அணி சார் பாக 22ஆவது நிமிடத்தில் பெர் ணான்டோ லொரென்ரே கோலொன் றைப் பெற்றுக் கொடுத்தார்.

பரிஸ் செய்ன்ற் ஜேர்மைன் அணிக் கும், அன்டர்லென்ச்ற் அணிக்குமிடை யிலான போட்டியில் பரிஸ் செய்ன்ற் ஜேர்மைன் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அவ்வணி சார்பாக ஸலற்றன் இப்ராஹிமோ விக் 17ஆவது, 22ஆவது, 36 ஆவது, 62ஆவது நிமிடங்களில் கோல் களைப் பெற்றதோடு, 52 ஆவது நிமிடத்தில்எடின்சன்கவானிகோலொன் றைப் பெற்றுக் கொடுத் தார்.

பென்பிகா அணிக்கும், ஒலிம்பியா கோஸ் அணிக்குமிடையிலான போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவ டைந்தது. ஒலிம்பியாகோஸ் அணி சார்பாக 29ஆவது நிமி டத்தில் அலென்ஜன்ட்ரோ டொமிங் குவேஸும், பென்ஃபிகா அணி சார்பாக 84ஆவது நிமிடத்தில் ஒஸ்கார் கார்டோஸோவும் கோல்களைப் பெற்றனர்.

மன்செஸ்ரர் சிற்றி அணிக்கும், சி.எஸ்.கே.ஏ மொஸ்கோ அணிக்கு மிடையிலான போட்டியில் மன்செஸ்ரர் சிட்டி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சி.எஸ்.கே.ஏ மொஸ்கோ அணி சார்பாக 32ஆவது நிமிடத் தில் சொரன் ரோசிக் கோலொன் றைப் பெற்ற போதிலும், மன்செஸ் டர் சிட்டி அணி சார்பாக சேர்ஜியோ அகுவேரோ 34ஆவது, 42ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பயேர்ண் முனிச் அணிக்கும், விக் ரோறியோ பிளெஸின் அணிக்குமி டையிலான போட்டியில் பயேர்ண் முனிச் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அவ்வணி சார்பாக 25ஆவது, 37ஆவது, 6ஆவது, 64ஆவது, 90ஆவது நிமிடங் களில் கோல்கள் பெறப்பட்டன. (கு)

# விஸ்டனின் உலக பதினொருவர் அணியில் முரளிதரன் இல்லை



கிரிக்கெட்டின் பைபிள் என அழைக் கப்படும் விஸ்டன் சஞ்சிகை உலகின் பதினொருவர் அணியை அறிவித் துள்ளது. அந்தச் சஞ்சிகையின் 150ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக இந்த உலகப் பதினொருவர் அணி அறிவிக்கப்பட் டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள உலகப் பதி னொருவரில் இலங்கை வீரர்கள் எவரும் இடம்பெற்றிருக்கவில்லை. அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உலக சாதனைகளுக்குச் சொந்தக்காரராக உள்ள இலங் கையின் முத்தையா முரளிதரன் இதில் இடம்பெறாததோடு, அவரது போட்டியாளரான ஆஸ்திரேலியா வின் ஷேன் வோர்ன் இந்த பதினொ ருவர் அணியில் இடம்பெற்றுள்ளார். 133 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற் றிய முத்தையா முரளிதரன் 22.72 என்ற பந்துவீச்சுச் சராசரியில் 800 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியி ருந்தார். அவரது போட்டியாளரான ஷேன் வோர்ன் 145 டெஸ்ட் போட்டி களில் பங்குபற்றி 708 விக்கெட் டுக்களை 25.41 என்ற சராசரியில் கைப்பற்றியிருந்தார். எனி னும் விஸ்டன் சஞ்சிகை ஷேன் வோர்னை இந்தக் குழாமில் தெரிவு செய்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள பதினொ ருவர் அணியின் தலைவராக துடுப்பாட்ட ஜாம்பவான் டொனால்ட் பிரட்மன் அறிவிக் கப்பட்டுள்ளார்.

இந்தப் பதினொருவரில் 4 இங்கி லாந்து வீரர்களும், 3 மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களும், 2 ஆஸ்திரேலிய வீரர்களும், தலா ஓர் இந்திய, பாகிஸ் தானிய வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள பதினொருவர் அணி:

ஜக் ஹொப்ஸ் (இங்கிலாந்து), டபிள்யூ .ஜி. கிறேஸ் (இங்கிலாந்து), டொனால்ட் பிரட்மன் (ஆஸ்திரேலியா), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), விவியன் றிச்சர்ட்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்), கரி சோபர்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்), அலன் நொட் (இங்கிலாந்து), வசீம் அக்ரம் (பாகிஸ்தான்), ஷேன் வோர்ன் (ஆஸ்திரேலியா), மல்கொம் மார்ஷல் (மேற்கிந்தியத் தீவுகள்), சிட்னி பார்ன்ஸ் (இங்கிலாந்து)(கு)

இந்தப் பதினொருவரில் 4 இங்கிலாந்து வீரர்களும், 3 மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களும், 2 ஆஸ்திரேலிய வீரர்களும், தலா ஓர் இந்திய, பாகிஸ் தானிய வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

# டோனியின் வீட்டின் மீது கல் வீச்சு

இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனியின் வீட்டின் மீது கல் வீச்சு மேற்கொள்ளப் பட்டுள்ளது. நேற்று முன் தினம் இடம்பெற்ற போட்டி யின் போதே இந்தக் கல்வீச்சு இடம்பெற் றுள்ளது. றாஞ்சியில் அமைந்துள்ள டோனியின் வீட்டின் மீது கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டதோடு, இந்தக் கல் வீச்சினால் அவரது வீட்டின் பின்பகுதியின் ஜன்னல் ஒன்று சேதமடைந்துள்ளது.

இந்திய, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நேற்று முன் தினம் றாஞ்சியில் இடம்பெற்ற போது, டோனியின் குடும்பத்தினர் போட்டியைப் பார்வையிடுவதற் காக மைதானத்துக்குச் சென்றிருந்த சமயமே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.




இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்படவில்லை எனக் குறிப்பிட்ட மகேந்திரசிங் டோனியின் குடும்பத்தி னர், எனினும் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற் காகக் கண்காணிப்பு கமெராக்களின் உதவியை நாடியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மகேந்திரசிங் டோனியின் வீடு தாக்கப்படும் 5ஆவது தடவை இதுவெனக் குறிப்பிட்ட டோனி யின் மைத்துனர் கௌதம் குப்தா, கண்காணிப் புக் கமெராக்களின் வீடியோவைப் பார்வை யிட்ட பின்பே இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க விரும்புவதாகவும், அதற்கு முன்னரே யாரை யும் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஷ் குறித்து சிந்திக்கவில்லை



அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ள ஆஷஷ் தொடரில் இடம் கிடைக்குமா என்பது குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை என இந்திய, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான தொடரில் ஆஸ்திரேலிய அணியின் தலைவராகச் செயற்பட்டு வரும் ஜோர்ஜ் பெய்லி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இங்கிலாந்தில் இடம்பெற்ற ஆஷஷ் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்படத் தவற, அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ள தொடரில் ஆஸ்திரேலியா சார்பாக வேறு வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில்இடம்பெற்றுவரும் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் ஜோர்ஜ் பெய்லி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். 85, ஆட்டமிழக்காத 92, 43, 98 ஆகிய ஓட்டங்களைப் பெற்றுள்ள அவர், 4 இனிங்ஸ்களில் 318 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இந்நிலையிலேயே, ஆஷஷ் போட்டிகளில் இடம் கிடைக்கும் நம்பிக்கை உள்ளதாக எனக் கேட்கப்பட்ட போது, அது குறித்துச் சிந்திக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். தன்னைப் பொறுத்தவரை தற்போது இடம்பெற்றுவரும் ஒருநாள் சர்வதேசப் போட்டி தொடர் பாகவே தனது கவனம் காணப்படுவதாக ஜோர்ஜ் பெய்லி குறிப்பிட்டுள்ளார்.

ஆஷஷ் தொடர் ஆரம்பிப்பதற்கு நாட்கள் உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், ஆஷஷ் தொடர்பாக இப்போதே சிந்திக்க ஆரம்பிப்பது கேலிக்குரியது எனக் குறிப்பிட்டார். ஆஸ்திரேலியாவின் உள்ளூர் தொடரான ஷெபீல்ட் ஷீல்ட் தொடரில் திறமைகளை வீரர்கள் வெளிப்படுத்துவார்கள் எனவும், ஆஸ்திரேலிய ஏ அணியின் போட்டிகள் காணப்படுகின்றன எனவும் குறிப்பிட்ட அவர், அவ்வீரர்களுக்குமான வாய்ப்புக்கள் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

டெஸ்ட் போட்டிகள் என்பன வேறு வகையான போட்டிகள் எனவும், ஆஷஷ் தொடர் வேறு வகையான ஆடுகளங்களில் இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், ஆஷஷ் தொடர் பாகச் சிந்தித்துக் கொண்டு எந்த வீரரும் தற்போதைய ஒருநாள் தொடரில் விளையாடி வருவதாகத் தான் எண்ணவில்லை எனக் குறிப்பிட்டார். (த)

# கங்குலியின் சாதனையை சமன் செய்தார் டோனி



இந்திய அணியின் அணித்தலைவரான மகேந்திரசிங் டோனி, கங்குலியின் சாதனையை சமன் செய்துள்ளார்.

இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய அணி, ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டியின் முடிவில் ஆஸ்திரேலியா 2-1 என முன்னிலை வகிக்கிறது. நான்காவது போட்டி மழை காரணமாக நிறுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் நடந்த போட்டியுடன் டோனி 146 ஒருநாள் போட்டிகளுக்கு அணித்தலைவராக இருந்துள்ளார்.

இதன்மூலம் இந்திய அணிக்கு அணித்தலைவராக 2ஆவது இடத்தில் இருந்த கங்குலியை சமன் செய்தார்.

டோனி 146 ஆட்டத்தில் 84 வெற்றியை பெற்றுள்ளார். 50 ஆட்டத்தில் தோல்வி ஏற்பட்டது. 3 ஆட்டம் சமநிலையானது. 9 ஆட்டம் முடிவு இல்லை.

கங்குலி தலைமையில் 146 போட்டியில் 76 ஆட்டத்தில் வெற்றி கிடைத்தது. 65 ஆட்டத்தில் தோல்வி ஏற்பட்டது. 5 ஆட்டம் முடிவு இல்லை.

முதலிடத்தில் அசாருதீன் உள்ளார். இவர் 174 போட்டிகளுக்கு அணித்தலை வராக இருந்துள்ளார்.

கடந்த 1990ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டு வரை அணித்தலைவராக இருந்தார். (த)

# ஆதரவளித்த ரசிகர்களுக்கு நன்றி



கிரிக்கெட்டின் சகாப்தமான சச்சின் டெண்டுல்கர் தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறப்போகிறார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

நட்சத்திர வீரர் சச்சின், உலகின் பல்வேறு நாட்டு இளம் வீரர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறார்.

இதுவரை 198 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளவர், மேற்கிந்திய தீவுகள் அணியுடனான தனது 200ஆவது போட்டியுடன் ஓய்வு பெற உள்ளார்.

அவரது 199ஆவது டெஸ்ட் கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்திலும், 200ஆவது டெஸ்ட் சொந்த மைதானமான மும்பாய் வான்கடேயிலும் நடக்கிறது. இதற்காக பலத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மும்பையில் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற சச்சின் தனக்கு ஆதரவளித்த இலட்சக்கணக்கான ரசிகர்களுக்கு நெகிழ்ச்சியுடன் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த 24 ஆண்டுகளாக எனக்கு ஆதரவு அளித்த ரசிகர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எனக்காக வாழ்த்து தெரிவித்த இந்திய இதயத்தின் அடித்தளத்தில் இருந்து நன்றியை கூறுகிறேன், எவ்வளவு வேண்டுமானாலும் நன்றியை தெரிவிக்கலாம். கிரிக்கெட்டால் தான் நான் இந்த அளவுக்கு அனைவராலும் பாராட்டப்படுகிறேன். இந்தியாவின் எந்த பகுதிக்கு நான் சென்றாலும் வாழ்த்துகிறார்கள்.

என்னால் மறக்க முடியாத விடுமுறை என்றால் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு எனது குடும்பத்தாருடன் ஐஸ்லாந்துக்கு சென்றது தான். அங்கு இயற்கை அழகை ரசித்தோம், அங்கு வாங்குவதற்கு எதுவும் இல்லாததால் கடன் அட்டைகள் அப்படியே இருந்தன. எனது குடும்பத்தினர் ஆண்டுக்கு 2 முதல் 3 விடுமுறை எடுத்துக் கொள்ளும் வசதி உள்ளது.

சில நேரங்களில் அவர்கள் என்னை விட்டுவிட்டு விடுமுறைக்கு எங்காவது செல்வார்கள். இந்தியாவில் தாஜ்மஹால், ஜாலியன் வாலா பாக், பொற்கோவில் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர். இவையெல்லாம் இந்தியாவை பற்றி நம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க உதவும்.

கிரிக்கெட் விளையாடுவதால் நான் உலகின் பல்வேறு நாடுகளுக்கு சென்றுள்ளேன்.

மேலும் இந்தியாவில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றுள்ளேன். இந்தியாவில் நான் அனைத்து இடங்களையும் பார்த்துவிட்டேன் என்று கூற முடியாது. ஆனால் பெரும்பாலான இடங்களை பார்த்துள்ளேன்- என்று தெரிவித்துள்ளார்.

சச்சினின் 200ஆவது டெஸ்ட் போட்டியைக் காண உலகம் முழுவதிலும் உள்ள ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

**புதிய பரிமாணத்தில் விசா ஆலோசனைத் துறையில் பிரவேசித்தது திசைகாட்டி**

மலேசியாவைச் சேர்ந்த Jude visa international consultancy group நிறுவனத்துடன் சட்ட ரீதியான பிணைப்பை ஏற்படுத்தியது திசைகாட்டி

இதன் மூலம் அனைத்து நாடுகளுக்குமான விரைவான விசா ஆலோசனையை வழங்கும் நிலைக்கு நாம் தரமுயர்ந்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்வோடு அறியத் தருகின்றோம்.



இனி ஐரோப்பிய நாடுகளான இத்தாலி போலந்து சைப்பிரஸ் மற்றும் கனடா நியுசிலாந்து மலேசியா போன்ற நாடுகளுக்கு படிக்க உழைக்க நீங்கள் விரைந்து பறக்கலாம்.

Jude group இன் சார்பில் அதன் chairman Mr. Jude James அவர்களும் Thisaikadi group chairman சார்பில் எமது இயக்குநர் சபை பிரதம நிறைவேற்றுநர் Mrs. S. Sorupa அவர்களும் சட்ட ஆவணங்களை பரிமாறிக் கொள்கின்றனர்.

2014 இல் தாமதங்கள் அற்ற விரைவான சட்ட ஆலோசனைகளிற்கு விரைந்து வாருங்களேன்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



(33238) (7.6.3)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு தினங்களில்

* கமநல அபிவிருத்தி திணைக்கள விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் தெரிவுக்கு சனி 1.00 மணி.
* இலங்கை தொழில்நுட்ப விசேட தரப் பரீட்சைக்கு சனி 1.00 மணி.
* SLEAS பரீட்சைக்கு ஞாயிறு 10.00 மணி.
* முகாமைத்துவ உதவியாளர் விசேட தரம் (Supra) பதவியுயர்வுக்கு சனி, ஞாயிறு 9.00 மணி.
* முகாமைத்துவ உதவியாளர் தரம் II, தரம் III வினைத்திறன்காண் தடை பரீட்சைக்கு சனி, ஞாயிறு 9.00 மணி.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
T.P. : 075 416 4564

(C/13179)(7.6.3)

**வீடு வாடகைக்குத் தேவை**

உரும்பிராய், கோண்டாவில் மருதனார்மடம் அண்டிய பகுதியில் வீடு ஒன்று 2 வருட வாடகைக்குத் தேவை.
தொடர்பு:
078 615 5929, 021 320 5939

**வாகன விற்பனைக்கு**

52-xxxx குறுகப் (Crew Cab) விற்பனைக்கு உண்டு.
நிறுவன ஒட்டத்துடன் கூடியது.
தொடர்பு: 077 322 2837
(29579)(6.3.4)

**French Classes பிரெஞ் வகுப்புகள்**



French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. இவ் அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. இன்றே (தொ.பேசி மூலமும்) அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில் வரவும்
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)




உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த சம்பளத்துடனான வேலைவாய்ப்பை இலக்காக கொண்ட பயிற்சிநெறி
**WebDesigning,Multimedi a,Networking**
பங்குபற்ற விரும்புவோர் உங்களது <NAME> Free என type செய்து 772 395 895 க்கு sms செய்யவும். மேலதிக விபரங்கள்
யாழ் பல்கலைக்கழகத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.